
www.padippakam.com

# தர்சையல்

## அஸ்வகோஷ்



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# தற்செயல்

அஸ்வகோஷ்

மணிபாரதி பதிப்பகம்
புதுவை சாலை, மயிலம். 604304
திண்டிவனம் வட்டம்.
விழுப்புரம் இரா. ப. மாவட்டம்.

படிப்பகம்

www.padippakam.com

தற்செயல்
(சிறுகதைத் தொகுப்பு)
(C) அஸ்வகோஷ்
முதல் பதிப்பு : டிசம்பர், 1994.

விலை ரூ. 27-50

முகப்பு ஓவியம்
எம். டிராட் ஸ்கி மருது

மேலட்டை அச்சு
ஈஸ்வரி ஆஃப்செட் பிரிண்டர்ஸ்

கவிக்குயில் அச்சகம்
47, நல்லதம்பி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை-600 005.

படிப்பகம்

www.padippakam.com

# இந்நூல்



மக்கள்பால் மாறாத அன்பு வைத்த
மனித நேயத்திற்கும்,
அநீதியைக் கண்டவிடத்து வெகுண்டெழுந்த
போர்க்குணத்துக்கும்
எடுத்துக்காட்டாய் வாழ்ந்து
இளம் வயதிலேயே மறைந்துபோன
எங்கள் அன்புத்தோழர்

**மா. வெங்கிடேசன்**

நினைவுக்கு...

படிப்பகம்

www.padippakam.com

# ஆசிரியரின் பிற நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | பறிமுதல் | சிறுகதைத் தொகுப்பு |
| 2. | எட்டு கதைகள் | ,, |
| 3. | 21வது அம்சம் | (நவீனம்) |
| 4. | சிறகுகள் முளைத்து | ,, |
| 5. | வட்டங்கள் | (நாடகம்) |
| 6. | மீண்டும் வருகை | ,, |
| 7. | நாளை வரும் வெள்ளம் | ,, |
| 8. | தெனாலிராமன் நகைச்சுவை நாடகங்கள் | ,, |
| 9. | கடவுள் என்பது என்ன | (தத்துவ அறிமுக நூல்) |
| 10. | அணு சக்தி மர்மம் (தெரிந்ததும்-தெரியாததும்) | அறிவியல் ஆய்வு நூல் |

படிப்பகம்

www.padippakam.com

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| | முன்னுரை | ... | 6 |
| 1. | தற்செயல் | ... | 9 |
| 2. | சிதைவுகள் | ... | 26 |
| 3. | சடங்கு | ... | 40 |
| 4. | நீதி | ... | 55 |
| 5. | பொழுதுகள் | ... | 76 |
| 6. | கிடக்கை | ... | 89 |
| 7. | பயன்கள் | ... | 97 |
| 8. | இழை | ... | 117 |
| 9. | ஊற்றுக்கண்கள் | ... | 130 |
| 10. | அவரோட லோகம் | ... | 148 |
| 11. | உளைச்சல் | ... | 160 |
| 12. | விவஸ்தை | ... | 170 |


படிப்பகம்

www.padippakam.com

# முன்னுரை

"பறிமுதல்" தொகுப்புக்குப் பிறகு 'அஸ்வ கோஷ்' என்கிற பெயரில் வெளியாகும் இரண்டாவது சிறுகதைத் தொகுப்பு இது. 'இராசேந்திரசோழன்' என்கிற பெயரில் 'க்ரியா' வெளியிட்டுள்ள எட்டு கதைகள் தொகுப்பையும் சேர்த்துக் கொண்டால் இது மூன்றாவது தொகுப்பு.

இப்போதைக்கும், இக்கதைகள் எழுதப்பட்ட காலத்திற்குமான இடைவெளி ஏறக்குறைய இருபது ஆண்டுகள். இக்கதைகளில் ஒன்றிரண்டைத்தவிர அனைத்தும், பெரும்பாலும் எழுபது, எழுபத்திரண்டாம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட நாட்களில் எழுதப்பட்டவை. கதைகள் எழுதப் பட்ட ஆண்டே அது வெளியான ஆண்டாக இருக்காது என்பதால், அல்லது கதைகளை இதழ்களிலிருந்து எடுத்து வைத்த போது இதழின் தேதி குறிக்கத் தவறியதால் சில கதைகளில் இதழ்களின் காலம் விடுபட்டுப் போயிருக்கலாம்.

இப்போது இக்கதைகளைப் படிக்க, அப் போதே இப்படியெல்லாம் எழுதியிருக்கிறோமா என்கிற ஒரு மலைப்பும்; அட இப்படியெல்லாம் கூட எழுதியிருக்கிறோமே என்கிற ஒரு கூச்சம் கலந்த உள்வாங்கலும் ஏற்படுகிறது. என்றாலும் படைப்பு என்பதே அவ்வப்போதையமன நிலை

படிப்பகம்

www.padippakam.com



சார்ந்த வெளிப்பாடு என்பதால், அப்போதைய 'படைப்பு மனோநிலையை', தற்போதைய 'படைப்பற்ற மனோ நிலை' பாதித்து எதையும் சிதைத்து விடக்கூடாது என்பதால், தேவை என்று கருதிய போதிலும் கூட எதிலும் கை வைக்காமல் ஏறக்குறைய அப்படியே தருகிறேன்.

எனில், கதை வெளிப்படுத்தும் அநுபவம் காலத்தால் ஒன்றும் பின் தங்கிவிடவில்லை என்பது நிறைவைத் தருகிறது, கதையில் வரும் பைசாக் கணக்குகள் மட்டுமே காலத்தை நினைவு படுத்துவதாக இருக்கின்றன.

இந்த இருபத்தி இரண்டு ஆண்டுகளில் தமிழ்ச் சிறுகதைகள் அதன் கருப்பொருளிலும், வடிவத்திலும் பல்வேறு மாற்றங்கள் வளர்ச்சிகளைக் கண்டுள்ள போதிலும் இத்தொகுப்பிலுள்ள கதைகள் ஒன்றும் புறக்கணிக்கப் படுமளவுக்கு பழசாகி விடவில்லை என்பது ஆறுதலைத் தருகிறது.

அந்த நம்பிக்கையிலேயே இது தொகுப்பாகவும் வெளிவருகிறது.

எழுதப்படும் கதைகள் அவ்வப்போது தொகுப்பாக வெளி வரமுடியாமல் போவது எழுத்தாளனுக்கும் சரி, இலக்கிய உலகுக்கும் சரி பெரும் இழப்புதான். என்ன செய்வது. தமிழ் இலக்கியச் சூழல் அப்படி இருக்கிறது.

இப்படி இன்னும் மூன்று தொகுப்புகளுக்கான கதைகள் கைவசம் இருக்கின்றன. அதை வாய்க்கும்போது பார்ப்போம்.

படிப்பகம்

www.padippakam.com



தற்போது இக்கதைகளைத் தொகுப்பாக வெளியிட முன் வந்த பதிப்பகத்தார்; அவ்வப் போது இக்கதைகளை வெளியிட்ட செம்மலர், பிரச்சனை, உதயம், விழிப்பு ஆகிய இதழ்கள்; நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த கவிக்குயில் அச்சக உரிமையாளர் மற்றும் பணியாளர்கள்; முகப்பு ஓவியம் வரைந்து தந்த நண்பர் எம். டிராட்ஸ்கி மருது, புத்தக அச்சாக்கத்தின் போது உறுதுணையாயிருந்து இன்முகத்தோடு பல்வேறு உதவிகளையும் செய்து தந்த இனிய நண்பர் மா. அய்யாசாமி பரமேஸ்வரி தம்பதி கள் ஆகிய அனைவருக்கும் என் நன்றி.

இத்தொகுப்பிற்கு கிடைக்கும் ஆதரவைப் பொறுத்து அடுத்த முயற்சிகள்.

பார்ப்போம்.

மயிலம்  
21-11-84

அன்புடன்  
**அஸ்வகோஷ்**

படிப்பகம்

www.padippakam.com

# தற்செயல்

நாளைய எட்டாம் நாள் கலியாணம். இந்நேரம் தாலி கட்டி முடிந்திருக்கும். வரிசை வைத்து காப்புக் களைந்து விட்டிருப்பார்கள். பந்திக்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தாலும் இருக்கலாம். சாப்பிட்டுக் கொண்டிருந்தாலும் இருப்பார்கள், புதுக்கயிறு கழுத்திலே ஏறி விட்டிருக்கும். பச்சை மஞ்சள் பூச்சோடு பசபசவென்று தவழும், தங்கக் காசும் நாணலும் நெஞ்சிலே கொஞ்சும். கலியாணத்துக்காக செய்த புது நகைகளோடு கூரைப் புடவையோ, அதைக் களைந்து விட்டுப் பட்டுப் புடவையோ கட்டிக் கொண்டு நிற்பாள். ஒன்றும் புரியாமல் சுற்றிச் சுற்றி வருவாள். பெருமிதத்தால் பூரித்துப் போய் விடுவாள். எல்லாப் பெண்களையும் போலவே இவளுக்கும் கலியாணம் நடக்கப் போகிறது.

நினைக்க நினைக்க வத்ஸலாவுக்கு உடம்பு புல்லரித்தது. உள்ளங்காலிலிருந்து உச்சி வரைக்கும் எதுவோ ஜிவு ஜிவு என்று ஏறியது. மனசெல்லாம் துள்ளியது. எதிரேயிருக்கும் நிலைக் கண்ணாடியில் நெஞ்சு வரைக்கும் தெரியும் தன் பிம்பத்தைப் பார்த்துச் சிரித்துக் கொண்டாள். எல்லாமே புதுசாகிப் பூத்துச் சிரிக்கிறா மாதிரி உற்சாகம் பெருக்கெடுத்தது.

மாப்பிள்ளையாக வரப் போகிறவர் நல்ல அழகு. பெண் பார்க்க வந்துபோன அன்று பார்த்தாள், செல்வ

படிப்பகம்

www.padippakam.com



ராசுவை விட அழகு. காலையில் தினம் ஆபீஸ் வேலை செய்கிறவர்கள் தெரு வழியாகப் போவார்களே பேன்ட் போட்டுக் கொண்டு அவர்களையெல்லாம் விடஅழகு. வேஷ்டி கட்டிக்கொண்டு வந்திருந்தார். கூடத்தில் உட்கார்ந்திருந்தார். சுற்றிலும் சொந்தக்காரர்களுக்கு மத்தியில் வாயில் வேஷ்டி மொசு மொசுக்க கோரைப் பாயில் சப்ளங்கால் போட்டு குந்தியிருந்தார். அப்பா குரல் கொடுத்தார். சீவி சிங்காரித்துக் கொண்டிருந்த வள் கூடத்துக்குப் போய் சம்பிரதாயப்படி காட்சி கொடுத்து விட்டு வந்தாள். அம்மா சொன்னபடி தலை யைக் குனிந்து கொண்டு வந்தாள். அறையில் வந்து நின்று ஜன்னல் வழியாகப் பார்த்தாள். மாப்பிள்ளை நல்ல கிகப்பு. தலை நிமிர்ந்திருந்தது. பிரகாசமான கண்களால் வீட்டை நோட்டமிடுகிறாமாதிரி மெல்ல விழி களை ஓட்டினார். இவள் வந்து மறைந்த அறையின் வாயிற்படியைப் பார்த்தார்.

இவளுக்கு உள்ளே இருப்புக் கொள்ளவில்லை. தவிப் பாக இருந்தது. இன்னொரு தடவை போய் தன்னை பூராவும் அவருக்குக் காட்ட வேண்டும் போலிருந்தது! நைஸாகப் போய் வரலாமா என்று நினைத்தாள். வேண்டாம் என்று நினைத்தாள். உள்ளேயே நின்று கொண்டிருந்தாள்.

அம்மா வந்தாள். ‘‘என்னாடி; மாப்பள புடிச் சிருக்கா...!’’ கொஞ்சோண்டு நாணம் வந்தது. தலையைத் தாழ்த்தாமல் தலையை ஆட்டினாள் ‘ஓ!’ என்றாள்.

அம்மா சிரித்துக் கொண்டே போனாள். இவள் நகராமல் நின்று கொண்டிருந்தாள். எல்லாம் முடிந்து மாப்பிள்ளை வீட்டார் புறப்பட எழுந்தபோது கூடத்துக்கு வந்தாள். எல்லாருக்கும் பின்னால் வாயிற்படியைத் தாண்டிக் கொண்டிருந்த அவர் எதேச்சையாகத் திரும்பு கிறா மாதிரி மெல்ல திரும்பினார். இவள் பார்த்தாள்.

www.padippakam.com



மெல்ல சிரித்தாள். போகிற அவரையே திருப்தி பொங்கப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவரோடுகூட போய் சம்சாரமாக வாழப் போகிறாள். ரத்னாம்பாவும், பொக்கிலையும், கும்பம்மாவும் கலியாணம் கட்டிக் கொண்டு போய் குடும்பம் நடத்துவதைப் போலவே இவளும் போகப் போகிறாள். அவர் வீட்டிலேயே இருப்பாள். ஆடிமாசம் வருவாள். அப்புறம் சூல் வைத்து அழைத்துக் கொண்டு போவார்கள், வேறு ஏதாவது விசேஷம் என்றால் நடுவில் வருவார்கள். எல்லாம் அவர்கள் மாதிரியேதான், ஆனால் அவர்களுடைய புருஷன்களையெல்லாம் விட இவர் ரொம்ப அழகு இவராட்டம் யாருக்கும் வராது.

கலியாணம் முடிந்தால் மூணு நாளைக்கோ அஞ்சி நாளைக்கோ மரு இருக்கும். இங்கே வந்து தங்கியிருப்பார். அக்கம் பக்கத்தில் இருப்பவர்களெல்லாம் பார்ப்பார்கள். "இவர்தான் வத்ஸலா புருஷன். இவர்தான் வத்ஸலா புருஷன்" என்று பேசிக் கொள்வார்கள். "நல்ல அழகு. குடுத்து வச்சவதான்"

மரு முடிந்து ஊருக்குப் போகும் போது கையிலே டிரங் பொட்டியை எடுத்துக் கொண்டு கூடவே போவாள். கூடவே நிற்பாள். பஸ் வரும், 'ஏறிக்கோ' என்பார். பின்னாலேயே ஏறிக் கொள்வார். எல்லாரும் அதிசயத்துடன் பார்ப்பார்கள். இவள் எல்லோரையும் பார்ப்பாள் "எங்க ஊட்டுகார்தான் இவரு" சொல்லாமல் சொல்லுவாள்.

ஆரம்பத்தில் எப்படிப் பேசுவது, என்னமாய்ப் பேசுவது என்று கூச்சமாக இருக்கும். எதுவும் செய்யக் கூடத் தோன்றாது, எதிரில் போவதற்கேகூட கூச்சம் வந்தாலும் வரும். செல்வராசுவிடம் பழகினா மாதிரி இவரிடம் பழக முடியாது, இவர் சொந்தப் புருஷன்.

www.padippakam.com



புருஷனைக் கண்டால் எல்லாப் பெண்களுக்குமே புதுசில் கூச்சமாகத்தான் இருக்கும். ரத்னாம்பாகூட முதலில் ரொம்பக் கூச்சப்பட்டாள். நாலைந்து நாள் பழக்கத்தில் கூச்சமெல்லாம் பறந்து விட்டிருக்கும். இடமிருந்தால் பக்கத்திலேயேகூட குந்திக் கொள்ளச் சொல்வாள்.

தனியாகக் குடுத்தனம் வைக்கப் போகிறாராம். காலை பத்து மணிக்கெல்லாம் பலகாரம் கட்டிக் கொடுத்து, சாப்பாடு செய்து கொடுத்து ஆபீஸ் அனுப்பி விடவேண்டுமாம். காலையில் போனால் சாயங்காலம் தான் வருவார்,

சாயங்காலம் இவள் மனசில் எதை எதையோ தூண்டி விட்டது. தன் பிம்பத்தைப் பார்க்கக்கூட என்னமோ மாதிரியிருந்தது. பின்னலை இழுத்து முன்னால் விட்டுக் கொண்டு அப்பால் நகர்ந்தாள். ஜன்னலருகில் போய் நின்றாள். ரிப்பன் நுனியை பல்லால் கடித்துக் கொண்டு தோட்டத்தைப் பார்த்தாள். செடியில் கனகாம்பரம் பூத்துக் குலுங்கியது. முனையில் தொத்தி உட்கார்ந் திருந்த கருப்பு நிறக் குருவி யொன்று ஊஞ்சலாடுவது மாதிரி மேலும் கீழும் ஆடிக் கொண்டிருந்தது. கீச்சு கீச் சென்று கத்தியது.

இவள் புன்னகையோடு திரும்பினாள், சாயங்காலம் வந்தால் அவர் விடிந்தால்தான் போவார், வந்ததும் தொட்டு அணைத்துக் கொள்வார். ராத்திரியானால் பக்கத்தில் படுத்துக் கொள்வார். விடியற வரிக்கும் படுத்துக் கொண்டிருப்பார். செல்வராசு மாதிரியே அவரும் செய்வார். வேறு மாதிரி ஏதாவது இருந்தாலும் இருக்கும். புதுசாக ஏதாகிலும் செய்தாலும் செய்வார். ஆனால் முன்னே மாதிரி பயந்து பயந்து சாகவேண்டிய தில்லை. சின்ன சத்தம் கேட்டால்கூட அலறிப் புடைத்து பீதியடைய வேண்டியதில்லை. யாராவது பார்த்து

www.padippakam.com



விடுவார்களோ என்று திக்திக் கென்று அடித்துக் கொள்ள வேண்டியதில்லை. யாராவது ஏதாவது நினைத்துக் கொள்வார்களோ என்று சங்கடப்பட வேண்டியது கூட இருக்காது. கலியாணம் எதற்காகச் செய்கிறார்கள் என்று எல்லோருக்கும் தெரிந்தே இருக்கிறது.

கலியாணம் ஆகாமல் அப்படிச் செய்தால்தான் தப்பு. யாரவது பார்த்து விட்டால் வம்பு. அதனால்தான் ரகஸ்யமாகச் செய்ய வேண்டியிருக்கிறது. தன்பாடு இனி கவலையில்லை. ஆனால் செல்வராசுதான் பாவம்! ரொம்ப பயந்து கொண்டிருக்கிறாள். அவனும் கலியாணம் பண்ணிக் கொண்டால் நல்லது. பயப்படாமல் செய்ய லாம். போகும் போது பார்த்து சொல்லி விட்டுப் போக வேண்டும்.

கலியாணம் ஆகாமல் பகிங்கரமாகவே எல்லாரும் இப்படிச் செய்யலாம் என்றால் அபபுறம் கலியாணம்தான் எதற்கு. அதற்காகத்தான் கலியாணம் என்று ஒன்று வைத் திருக்கிறார்கள் போலிருக்கிறது. ஆனால் கலியாண சமாசாரம் சொன்னால் செல்வராசு மட்டும் ஏனோ சந்தோஷப்படாமல் முகம் வாடிப் போகிறான். எல்லோரும் ஆசைப்படும் போதும் அவன் மட்டும் ஏனோ உம்மென்று மூஞ்சை வைத்துக் கொண்டிருக்கிறான்.

சளப் சளப்பென்று குளம்படிச் சத்தம் ஒலியெழுப்ப சேடை கலக்கிய கழனியில் மாடுகள் இழுக்கின்றன. ஊரும் கலப்பை சேற்றைப பிளந்து கொண்டு நகர்கிறது. கழனி யில் வந்து பாயும் வாய்க்கால் நீர் பிளப்பில் ஓடுகிறது. பக்கத்துக் கழனியில் கூலிப் பெண்கள் நடவு நடுகிறார்கள். கேலிப் பேச்சும் கிண்டலும் ஊர்க்கதையும் சரளமாக அடிபடுகின்றன. ஏர் ஓட்டுற ஆண்கள் ரெண்டு பொருள் படும்படி அர்த்த புஷ்டியுடன் என்னவோ சொல்லிச் சிரிக் கிறார்கள். பெண்களைச் சத்தாய்க்கிறார்கள். செல்வ ராசும் ஏர் ஓட்டுகிறான்.

www.padippakam.com



செல்வராசு எட்டாங்கிளாஸ் வரை படித்து படிப்பை நிறுத்திவிட்டவன். அடுத்த தெருக்காரன். கறுப்பு உடம்பு. உள்ளே கௌபீனம் கட்டி அரைக்கால் டிரௌசர் மாத்திரம் போடுவான். வேஷ்டி கட்ட மாட்டான். மேலே சட்டை பனியன் கூடம் இருக்காது. தலையில் மட்டும் ஒரு துண்டு கட்டியிருப்பான். வேலை செய்யும்போது நடுநடுவே அவிழ்த்து முகத்தைத் துடைத்துக் கொண்டு மறுபடியும் கட்டிக் கொள்வான். சும்மாயிருக்கிறான், அடிக்கடி திரும்பி வரப்பில் நிற்கிற இவளைப் பார்த்து மெல்ல சிரிக்கிறான். இவளும் பதிலுக்குச் சிரிக்கிறாள்.

உச்சி வேளையில் ஏரை கழனியிலே விட்டு விட்டு கை கால் கழுவிக் கொண்டு எல்லோரும் சாப்பாட்டுக்கு வருகிறார்கள். மாமரத்தடியில் குத்துக்காலிட்டு குந்துகிறார்கள். செல்வராசும் குந்துகிறான். கையைக் கூட்டி தன்னை தயார்ப்படுத்திக் கொள்கிறான். செம்பிலே சாய்த்த கூழைக் கைகளில் ஊற்றும் போது குனிந்த வாக்கிலிருக்கும் இவளையே பார்க்கிறான். விழுங்கி விடுவது போலப் பார்க்கிறான். இந்தப் பார்வையில் ஏதோ சக்தியிருக்கிறது. உள்ளே உறைந்து கிடக்கும் எதை எதையெல்லாமோ மீட்டு மேலே கொண்டு வந்து மிதக்க வைப்பதைப் போலிருக்கிறது.

கொஞ்சம் சங்கடப்பட்டவள் போல தலையைத் தாழ்த்திக் கொள்கிறாள். கொஞ்சம் கழித்து மறுபடியும் நிமிர்ந்து பார்க்கிறாள்.

"போதுமா"

வாய் நிறைய உப்பிய கூழை உள்ளுக்கு விழுங்கி விட்டு "ம்" என்று தலையை ஆட்டுகிறான். கிணற்றில் இறங்கி வாயைக் கழுவி தலையில் கட்டியிருக்கும் துண்டால் துடைத்துக் கொண்டே மேலே ஏறி வருகிறான்.

படிப்பகம்

www.padippakam.com



"தூரத்தில இருந்து பாத்தா நம்ப டீச்சரம்மா மாதிரியே இருக்கிற நீ!"

இவள் மெல்ல சிரித்துக் கொள்கிறாள். அவ்வளவு அழகாகவா இருக்கிறோம் என்று உள்ளுக்குள் பெருமை பொங்குகிறது. "படிச்சிருந்தா டீச்சர் வேலைக்கி கூடந் தான் போயிருப்பேன். அதுக்குள்ளதான் வயிசுக்கு வந்துட்டேன்னு நிறுத்திட்டாங்களே, அஞ்சாங் க்ளாஸோட"

அறுவடையெல்லாம் முடிந்த சமயம் அது. அடித்துத் தூற்றிய நெல்களத்திலேயே இருந்தது. மாமரத்தடியில் கட்டில் போட்டுப் படுத்திருக்கும் பாட்டிக்கு சாப்பாடு கொண்டு போய்க் கொடுத்து விட்டுத் திரும்பிக் கொண் டிருந்தாள். காலியான டேவ்ஸாவை இடுப்பில் தொற்ற லாக வைத்திருக்கிறாள். சந்தடியற்ற அமைதி. உச்சி வெய்யிலில் அமிழ்ந்திருக்கிறது. சுற்றிலும் அறுவடை யான வயல் வரப்புக்கள். தேய்ந்த ஒற்றையடிப் பாதையில் நடந்து வந்தாள். சின்ன மணல் ஓடையிறக்கத்தில் செல்வராசு எதிர்ப்பட்டான். ஆளுயர ஓடை அது.

எதிர்பாராத விதமாய் அவனைக் கண்டதும் உள்ளே ஏதோ குறுகுறுப்பு ஏற்பட்டது. எதையோ நிமிண்டு வதைப் போலிருந்தது. அவனும் அப்படித்தான் இருந் தான். அகஸ்மாத்தாய் பார்த்ததால் முகத்தில் ஏற்பட்ட வியப்பு ஒரு கணம் தோன்றி மறைய நடையில் தேக்கம் வெளிப்பட்டது.

"சாப்பாடு குடுத்துட்டு வர்ரீயா"

"ஆமா!"

அவன் பார்வை கலங்குகிறது. அவளை பூராவும் அப்படியே தழுவி அப்புகிறது. மெல்ல நிமிர்கிறாள் இவள். அவன் எதுவோ செய்யப் போகிறான் எதுவோ நடக்கப் போகிறது என்று தெரிகிறது, வேண்டாம் என்று சொல்லத்

www.padippakam.com



தோன்றவில்லை. தவிர்த்துக்கொண்டு நழுவி விட்டுவேண்டும் என்று கூட விருப்பமில்லை.

"ஊட்ட எதுனா வேல இருக்குதா?" என்கிறான் அவன்.

"ஒண்ணுமில்ல" என்று சிரிக்கிறாள்.

அவன் சுற்றுமுற்றும் பார்க்கிறான். தொண்டைக் குழி ஏறி இறங்குகிறது. இவளுக்கும் கிறக்கமாக வருகிறது கொஞ்சமும்எதிர்பாராத விதமாய் எட்டி இவள் மார்பைப் பிடித்து விடுகிறான். வலது கையால் பிடித்து இடது கையால் இடுப்பை வளைத்து நெருக்குகிறான். இறுக்கி அணைக்கிறான்.

"ச்சொச்சோ யார்னா வந்துடப் போறாங்க".

"யாரும் வரமாட்டாங்க; இந்நேரத்துல" குரல் வெதுவெதுப்போடு சூடாக இருக்கிறது. மூச்சின் உஷ்ணம் கழுத்தைச் சுடுகிறது. பிடியைத் தளர்த்தாமலே மெல்ல அவன் தள்ளிக் கொண்டு போகிறான். வழியை விட்டு ஒதுக்குப் புறமாய் ஓடை உள் வாட்டமாகவே கொஞ்ச தூரம். ஓரத்தில் உயர உயர பனைமரங்கள், சின்னச் சின்ன கன்றுகள். நெருக்கமான புதர். ஒரே ஒரு ஒற்றை வேப்பமரம் மட்டும் நின்றிருக்கிறது. அடர்ந்த மரம், அடர்ந்த நிழல். குளுமையாய்ப் பரவியிருக்கிறது. பாதத்தில் குளிர்ச்சி தட்டுகிறது.

"ஸ்...இப்ப வேணா" என்கிறாள் இவள்.

அவன் காதில் வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை, முதுகை வளைத்திருந்த பிடியைத் தளர்த்தி ஏனத்தை வாங்கி அப்பால் வைக்கிறான். காலைப் பின்னி பதமாகக் கீழே தள்ளுகிறான். மணல் படுக்கையிலே கிடத்தி விடுகிறான்.

www.padippakam.com



பனை ஓலைகள் சலசலத்தன. வேப்ப மரம் கிளைகளை ஆட்டியது. நீலநிறக் குருவியொன்று வாலை ஆட்டியபடியே விட்டு விட்டு விட்டுக் கத்திக் கொண்டிருந்தது. மேற்கே போகும் ரயில் பக்கத்து ஸ்டேஷனிலிருந்து கூவி மெல்ல ஊர்ந்து நகரும் சத்தம் கேட்டது. மற மற வென்று உடம்பெல்லாம் எதுவோ ஏறுவதை போலிருந்தது. பின் தலையிலும் முதுகிலும், வெறும் தொடைகளிலும் பொடி மணல் உறுத்தியது. என்ன, ஏது என்று சொல்ல முடியாத ஒரு திளைப்பில் பலங்கொண்ட மட்டும் அவன் முதுகை இறுக்கி அணைக்கிறாள் ''ரயில் போவுது'' என்கிறாள். அவன் மெல்ல கிசுகிசுக்கிறான். ''எதுனா போவட்டும். கம்முன்னு இரு''.

மாமரத்தின் கீழே பூக்கள் சிந்திக் கிடக்கின்றன. மரத்தில் கட்டை எறும்பு ஊர்கிறது. வடுக்கள் காய்ந்து தொங்குகின்றன. பாட்டி பெரியம்மாவின் சாவுக்குப் போய்விடவே இவள் காவலிருக்கிறாள். கட்டிலில் குந்தியிருக்கிறாள். மணலைத் தட்டிக் கொண்டு எழுந்ததையும், ஏனத்தை எடுத்து பழையபடியே இடுப்பில் வைத்துக் கொண்டு நடந்ததையும் நினைக்க சந்தோஷமாக இருக்கிறது.

''பெரிய ஆளுதான் நீ'' என்று அவனைப் பார்த்து சிரிக்கிறாள்.

''ஏன்; என்னா...'' என்று அவனும் பதிலுக்கு சிரிக்கிறான்.

''என்னா துணிச்சல்ல அப்பிடி வெடுக்குன்னு புடிச்ச நீ!''

''எல்லாரியும் அப்பிடி புடிச்சிடுவேனா. நீன்ன வாசிதான் அந்த துணிச்சலு''

''நான்ன வாசின்னா என்னா. ஏமாந்தவ ஒண்ணும் கேக்க மாட்டன்றத்தான''.

www.padippakam.com



சிரித்துக் கொண்டேதான் கேட்டாள் இவள். ஆனால் அவன் முகம் ஒரு மாதிரியாக ஆகியது. ''வச்சலா'' என்றான். அன்போடு கண்டிப்பு காட்டும் பாவனையில் இதமாயிருந்தது குரல். ''எம்மா நாளா உம்மேல எனக்கு ஆச தெரியுமா''.

''இத்தினி நாளா ஏன் எங்கிட்ட சொல்லலே''

''சொல்லணம், சொல்லணம்னுதான் நெனக்கிறது. ஆனா என்னுமா சொல்றதுன்னுதான். அதனாலதான் அப்பிடி... அத்த மாதிரி மொரட்டாம் போக்கா கூடம் புடிச்சிருக்க மாட்டேன். எதுவோ ஒரு வேகம்'' பேசும் போதே அவன் குரல் தழுதழுத்தது. ''நீயும் இம்மா நாளா பாத்துக்னுருக்கிறயே எப்பனா எதுனா இன்னொரு பொண்ணுகிட்ட இந்த மாதிரி நடந்துக்னதா கேள்விப் பட்டிருப்பியா''.

''எனக்கு அப்பவே தெரியும்''

''என்னான்னு''.

''நீ இந்த மாதிரி செய்வேன்னு''

அறுப்பு அறுத்த கழனியில் குத்துக் கொட்டை போடு கிறார்கள். மஞ்சள் நிறப் பூக்கள் கழனியெங்கும் கண் சிமிட்டுகின்றன. இவள் தினமும் அவனைச் சந்திக்கிறாள். என்ன ஏது என்று புரியாத பழக்கம். சின்னக் குழந்தைகள் கூட்டாஞ்சோறு ஆக்கி அம்மா அப்பா ஆட்டம் ஆடுவது மாதிரி. தின்பண்டத்துக்கு ஆசைப்படுவது மாதிரி. மனசில் எந்தவித சிராய்ப்பும் இல்லை. எப்போதும் போலவே இருக்கிறாள். அவன் ரொம்ப கரைந்து போயிருப்பதைக் கூட இவளால் புரிந்து கொள்ள முடியவில்லை.

''வத்ஸலா'' என்கிறான் அவன்.

''என்னா''

www.padippakam.com



மெல்ல இவள் கைகளை எடுத்து தன் கைகளுக்குள் வைத்து அழுத்திக் கொள்கிறான். "ராவிக்கு உங்க ஊட்டுக்கு வரட்டுமா"

"எதுக்கு"

"ராவுல படுத்தா தூக்கம் வரமாட்டுது வத்ஸலா. எப்பவும் உம் பக்கத்துலியே இருக்கணம் போலருக்குது".

"ஆர்னா பாத்துட்டாங்கன்னா"

"யாரும் பார்க்க மாட்டாங்க. பாதி ராத்திரிக்கு மேலே வர்ரேன். தோட்டத்துக் கதவை தெறத்துக்னு மாட்டுக் கொட்டாய்க்கா வா".

"எதுனா ஆயிடுத்துன்னா"

"என்னா"

"கிஷ்டவேணி கத தெரியுமில்ல"

அவன் கொஞ்சம் தயங்கி இவள் முகத்தைப் பார்க்கிறான். இவள் கண்களில் எதையோ தேடி ஏமாந்தவனாக அந்த ஏமாற்றத்தை மறைத்து மெல்ல சிரித்தபடி "அதெல்லாம் ஒண்ணும் ஆயிடாது. பயப்படாத. அதுக்கெல்லாம் மருந்து இருக்குது".

"மெய்தானா! ஒண்ணும் ஆவாதா"

"உங்கிட்ட நான் பொய்யா சொல்றேன்" இவள் கைகளை அழுத்திவிட்டு விட மனமில்லாமல் பார்க்கிறான்.

கைகளை சாதாரணமாய் விடுவித்துக் கொள்கிறாள் இவள். "கொட்டாய்லியே இரு. கதவைத்தட்டிப்புடாத."

ராத்திரி வந்தது. அவனும் வந்தான். கீழே உட்காரப் போன இவளை கொஞ்சம் வைக்கோலை அள்ளி மெத்து மெத்தென்று உதறிப் பரப்பி தலையிலிருந்த துண்டை அவிழ்த்துப் போட்டு உட்கார வைக்கிறான். பக்கத்தில்

www.padippakam.com



குந்திக் கொள்கிறான். கொஞ்சம் சாய்ந்து அவள் வயிற்றிலே முகத்தைப் புதைத்து இடுப்பைச் சுற்றி வளைத்து ''வத்ஸலா'' என்கிறான்.

''ம்''

''இப்பிடியே இருக்கணம் போலருக்குது''

''ஆசதான்'' என்று சிரிக்கிறாள்.

''தெனம் வரட்டுமா'' ஏக்கத்தோடு கேட்கிறான்.

தினம் வராவிட்டாலும் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் வந்தான். ஐந்தாம் பிறை நிலவு மங்கி வியாபித்திருந்தது. மாடு கட்டும் மூளைக்குச்சும், புல் தரையும், குப்பை மேடும் குளுமையாய் சலனமற்று இருந்தது. கொட்டாய் உள்ளிலும் கொஞ்சம் கம்மலான வெளிச்சம். உருவங்கள் மங்கலாகத் தெரிந்தன. வைக் கோலை அசை போட்டு பெருமூச்சு விடும் மாடுகளுக்குப் பக்கத்தில் கொஞ்சம் தள்ளி அவனை அணைத்துப் படுத்திருந்தாள். முதுகைப் பிடித்து பல்லைக் கடித்து, உற்சாகத்துடன் ஒரு இறுக்கு இறுக்கி ''அடுத்த வாரம் எனக்கு கலியாணம்'' என்றாள். அவன் பேசாமலிருந்தான். ''மின்ன வந்து பாத்துட்டுப் போனாருன்னு சொல்லல; அவர்தான். பத்திரிகல்லாம் கூடம் அடிச்சாச்சி உனக்குத் தெரியுமல்ல; அந்த எடந்தான்; எங்க அளவுக்கு நெல பலமெல்லாம் இருக்குதாம். அவரு உத்தியோகத்துல வேற இருக்கறாராம். மாசம் எரநூறு ரூவா சம்பளம்.''

அவனிடமிருந்து பதில் எதுவும் வரவில்லை.

கொஞ்சம் கழித்து ''கட்டிக்னு போனினா அப்பறம் எங்களல்லாம் மறந்துடுவ இல்லை'' என்றான் அவன்.

''அது எப்பிடி, அப்பப்ப இங்க வந்து போவ மாட்டனா''

www.padippakam.com



"வந்தினா இந்த மாதிரி என்ன பார்க்க வருவியா!"

"அது எப்படி அவரு இருக்க மாட்டாரா...!"

அவன் பெருமூச்சு விட்டுக் கொண்டான். இறுக்கம் தளர்ந்தா மாதிரியிருப்பதை உணர்ந்தாள் இவள். சட்டென்று அவன் கைகளை விலக்கி தள்ளிக் கொண்டு எழுந்தாள். இருளில் அவன் முகம் கறுப்பாகத் தெரிந்தது.

"என்னா ஒனக்கு" என்றாள்.

"ஒண்ணுமில்ல" என்றான்.

இருந்தாலும் இவளுக்குக் குறையாகத் தோன்றியது.

"தோ பாரு இந்த மாரி இருந்தினா அப்பறம் எழுந்து உள்ள போயிடுவேன்"

அவன் "வத்ஸலா" என்றான். இழுத்து மடியில் கிடத்தி சாய்த்துக் கொண்டு முதுகைத் தடவினான். இவள் "நீ கூடம் கல்யாணத்துக்கு வந்துடு. நான் வண்டிச் சார்ஜ் தர்ரேன்" என்றாள்.

குருவி எங்கோ பறந்தோடி விட்டது. ஊஞ்சலாடிக் கொண்டிருந்த நரம்பு ஒடிந்து விழவே பயத்தில் சடசடத்துப் பறந்தது. அதன் லயிப்பில் நின்றிருந்தவள் ஒரு வினோதமான புன்னகையுடனே ஜன்னலை விட்டு அப்பால் நகர்ந்தாள். கண்ணாடியில் மறுபடியும் தன் பிம்பத்தைக் காண வேண்டுமென்று தோன்றியது. கூடத்திலிருந்து அம்மா அழைக்கவே பேசாமல் திரும்பி வந்தாள்.

அம்மா கலியாணத்துக்காக எடுத்திருந்த ஜவுளி வகையறாக்களை விரித்துப் பார்வையிட்டுக் கொண்டிருந்தாள். வெளூர் நீலத்தில் நாலு விரற்கடை அகலம் பார்டர். மஞ்சள் வண்ணத்திச் கத்திரிப்பூ கொடியோடினா மாதிரி மெல்லீஸ் வாயி எல்லாம் இவளுக்கு. பரவசத்தால் நெஞ்சு விம்மியது. இப்படியும் அப்படியுமாக புரட்டிப் புரட்டிப் பார்த்தாள்.

www.padippakam.com



"மின்ன அந்த போலீஸ் காருட்டு பொண்ணு கட்டிக்னு இருந்துதே அந்தமாரி இல்லம்மா இந்த சேல."

"உங்கண்ணு என்னா பழுதாடி. அது என்னா வெல. இது என்னா வெல. அது என்னுமோ பதிமூணர்ர ரூபாயோ, பத்தர்ர ரூபாயோன்னுதான் சொன்னா. இது எழுவத்தெட்டு ரூபாயாமில்ல..."

"அதவ்ட ஒஸ்தி" உதட்டுக்குள் முணு முணுத்துக் கொண்டாள். அட்டைப் பெட்டியைத் திறந்து புதுசாய் வாங்கி வந்திருந்த தோடுகளைப் பார்த்தாள், "போட்டுப் பாக்கட்டாமா..."

"பாரேண்டி எல்லாம் ஒனக்குத்தான்"

வெளியே போயிருந்த நைனா வந்தார்.

"சரி சரி எல்லாத்தியும் எடுத்து வச்சிட்டு சாப்பாட்டப் போடுங்க தலைக்கிமேலே வேல கெடக்குது. வெளில அனுப்ப வேண்டிய பத்திரிகங்கல்லாம் அப்பிடி அப்பிடியே கெடக்குது. வெலாசம் எழுதணம் தபாலாபீஸ் போவணம்"

"அப்பிடியே எடுத்து வைடி எல்லாத்தியும் அப்பறமா பாப்ப" அம்மா எழுந்து அடுப்பண்டை போனாள். எப்போதோ வடியல் விட்டிருந்த சோற்றுப் பானையை நிமிர்த்திக் குலுக்கினாள். அடுக்கு சட்டியை எடுத்து வைத்து சோறு தோண்டி தயார் செய்ய ஆரம்பித்தாள்.

வத்ஸலா எல்லாவற்றையும் கட்டி சுருட்டிக்கொண்டு அறைக்குள் நுழைந்தாள்.

தெருவிலே சைக்கிள் மணி அடிக்கும் சப்தம் கேட்டது.

"ஏங்க, யாரு ஊட்ல"

"யாரது"

www.padippakam.com



"இங்க வாங்க; தந்தி வந்திருக்குது,'

"தந்தியா!" திடுக்கிட்டாள் அம்மா. "இங்க வாங்க. அத என்னாண்ணு பாருங்க"

தோட்டத்தில் கை கழுவப் போன நைனா ஒன்றும் புரியாமல் வந்தார்.

"எங்கருந்து வந்துருக்குது."

"கடலூர்ல இருந்து"

நெஞ்சில் பீதி படர்ந்தது. அம்மா கலவரத்துடன் "ரேடியோவ அடக்குடி" என்றாள். ஈரக் கையைத் துடைத்துக் கொண்டு கையெழுத்துப் போட்டுத் தந்தியை வாங்கிய நைனாவின் கரங்கள் நடுங்கின. சிரமத்துடனே பிரித்தார். தந்தி சேகவனிடமே கொடுத்து "என்னா போட்டுகுது படிங்க" என்றார்.

"யாரோ ரங்கனாதனாமே அவுரு தவறிட்டாராம்."

"என்னா!" அம்மாவும் நைனாவும் ஏககாலத்தில் அலறினார்கள். வத்ஸலா திடுக்கிப் போய் நின்றாள்.

"எப்படி செத்தாராம்."

"என்னுமா செத்தாரு"

"அதல்லாம் இதுல தெரியாதுங்க. செத்துட்டாரு அவ்வளோதான்."

அம்மா பீறிட்டு அழுதாள். நைனா உள்ளேயே வெம்பினார். வெடிக்காமல் குமுறியதில் உடம்பு நடுங்கியது. வத்ஸலா அதிர்ச்சியிலிருந்து மீளாமலேயே திப்பிரமையுடன் நின்றாள். இவளால் நம்ப முடியவில்லை. "எப்படி அதுக்குள்ளோ செத்துட முடியும். கலியாண.. ஆவாம"

www.padippakam.com



கொடியில் கிடந்த சட்டையை இழுத்து உதறிப் போட்டுக் கொண்டு "பத்தரமா பாத்துக்கோங்க. யார் கிட்டியும் எதுவும் மூச்சு உட்டுக்க வேணாம். போயி என்னாச்சின்னு பாத்துக்னு வந்துடறேன்" என்று கர கரத்த குரலில் சொல்லி விட்டுப்போன நைனாவைப் பார்த்தாள்.

அடுக்கு சட்டியுல் தோண்டி வைத்திருந்த சோற்றில் ஈ மொய்த்தது "அப்படியே எடுத்து வச்சி மூட்றி" என்றாள் அம்மா. இவள் கண்களிலிருந்து பொல பொலவென்று கண்ணீர் வந்தது. முந்தானையால் துடைத்துக் கொண் டாள். மெய்யாலுமா செத்திருப்பாரு.

பூவரச மரத்தின் கீழே இலைகள் பழுத்து உதிர்ந்து கிடந்தன. பசங்கள் பீப்பி செய்து ஊதுவது அனாதைக் குழந்தைகளின் கேவலைப் போல கேட்டது. கலியான தேதி முடிவடைந்து நேற்றோடு எட்டு நாள் ஆகி விட்டது. நைனா புறப்பட்டுப்போன போது இருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையும், அவர் திரும்பி வந்து "பாம்பு கடிச்சி செத்துப்புட்டானாம். கைகால் அலம்ப சொம்பு எடுக்க போயிருக்கிறான். உள்ளியே சுருட்டிக்னு கெடந்துருக்குது பாவம்!... நல்ல பாம்பாம்" என்றதும் பூராவும் கறுத்து இருண்டு போய்விட்டது.

கலியாண சேதி சொன்ன வீடெல்லாம் எழவு சேதி சொல்ல வேண்டியதாயிருந்தது. பார்ப்பவர்கயெல்லாம் எப்பிடி ஆச்சாம், என்னமா செத்தாராம் என்று ஆளுக்கு ஒன்றாக கேட்டார்கள். எல்லாருக்கும் சொல்ல வேண்டி யிருந்தது. இருக்கிற துக்கத்திலும் வெறுமையிலும் ஒவ்வொருவருக்கும் சொன்னதையே திருப்பிச் சொல்ல வேண்டியிருந்ததில் வேதனையும் எரிச்சலும்தான் மிஞ்சியது.

வத்ஸலாவின் முகத்தில் உயிர் இல்லை, களை இல்லை. கட்டிக்கொடுத்து அறுத்து விட்டவளைப் போலக் கிடந்

www.padippakam.com



தாள். வெளியே தலைகாட்டவே கூசியது. கழனி கட்டுக்கு சாப்பாடு எடுத்துக் கொண்டு போகும்போதும் வரும் போதும் ஒருத்தர் பாக்கியாக இவளை விட்டு வைக்க வில்லை.

''அதோ போவுது பார். அதான். பாவம்! பத்திரி கல்லாம் கூடம் கூடிச்சாச்சி. அதுந்தலையில எழுதி வச்சத பாத்தியா''

''அது அது குடுத்து வச்சது அவ்வளோதான்.''

''அடப்பாவமே...!

''எங்கனா கேழ்விப்பட்டு இருப்பியா இந்த மாதிரி.''

வழியெல்லாம் வந்து விழும் வார்த்தைகள் காதில் நெருப்பாய்ச்சுட்டது. உடம்பே கூனிக் குறுகுவதைப் போலி ருந்தது. யார் முகத்திலுமே விழிக்கக்கூடாது என்று நினைத்தாள். ஒற்றை வரப்பில் நடக்க முடியவில்லை· கால்கள் பின்னின. சீக்கிரம் வீட்டுக்குப் போய் தலையை எங்காவது மறைத்துக் கொள்ள வேண்டும் என்று தோன்றியது.

அதே ஓடையில் எதிர்ப்பட்டான் செல்வராசு. பார்க்கவே அருவருப்பாயிருந்தது இவளுக்கு, பார்க்காத மாதிரி தலையைக் குனிந்து கொண்டு நடந்தாள்.

சோகத்துடனே கிட்டே நெருங்கிய அவன் 'வத்சலா' என்றான். ''எல்லாம் கேள்விப்பட்டேன் ரொம்ப இதுவாயிடிச்சி.''

நின்று எரித்து விடுபவளைப் போல அவனை முறைத்துப் பார்த்தாள் இவள். 'திருப்திதானா!' என்கிறா மாதிரியிருந்தது பார்வை. அவன் ''எப்பிடி செத்தாராம்'' என்றான். ''எப்பிடியோ செத்தாரு ஒனக்கென்னா அதப் பத்தி'' ''வத்ஸலா'' ''ஆமா ரொம்ப அக்கரதான்போ.'' ☐

''உதயம்'' ☐ ஜுன் 15, 1973 ☐



படிப்பகம்

www.padippakam.com

# சிதைவுகள்

வாழ்க்கையை கற்பனை மயமான புஸ்தங்களில் மாத்திரமே படித்து பிரேமைகளில் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் எனக்கு ஏற்பட்ட ஒரு அனுபவத்தைப்பற்றிச் சொல்கிறேன். இப்போது நினைத்தாலும் அது எவ்வளவு விடலைத்தனமாது என்று தான் தோன்றுகிறது என்றாலும் அப்படி ஒரு அநுபவம் நேர்ந்தது என்பதை என்னால் சொல்லாமலிருக்க முடியவில்லை.

நான் பி.யூ.சி. பெயிலாகி வீட்டோடிருந்தது படித்துக் கொண்டிருந்த சமயம் அது. எனக்கு எதிர் வீட்டுக்காரியாயிருந்தாள் அவள். நல்ல அழகு. பார்க்கும் போதே இன்னொரு தடவை பார்க்கத்தூண்டும். பார்த்துக் கொண்டே இருக்கலாமா என்று தோன்றும்.

அவளைப் பார்க்கும் போது மனசு என்னிடத்தில் இருக்காது. எங்கோ மிதக்கிற மாதிரி இருக்கும். எப்போதோ ஒரு காலத்தில் நான் அவளோடு மிக நெருங்கிய சௌஜன்யம் வைத்திருந்தது மாதிரி. அதற்குக் காரணம் எனக்குத் தெரியாது. எந்தக் காலத்திலும் அவள் எனக்கு பழக்கமான வளல்ல என்பது என்புத்திக்குத் தெளிவாகவே தெரிந்தாலும் அவள் எனக்கு அந்நியமானவள் என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

www.padippakam.com



இத்தனைக்கும் அவள் கல்யாணமானவள். புருஷன் உள்ளூர்ப் பஞ்சாயத்து யூனியன் ஆபீஸில் வேலை செய்கிறான்.

என் வீட்டுக்கு நேரே தெரு. தெருவைத் தாண்டினால் அவளுடைய வீடு. முழங்கால் உயரச் சுற்றுச்சுவர்களுக்கிடையே முற்றம். முற்றத்துக்கு அப்பால் கதவு. முற்றத்திலே அவள். சாயங்கால நேரத்தில் புருஷனின் வரவுக்காக காத்துக் கொண்டு நிற்பாள்.

மழுங்க வாரி படிய விட்ட தலை. எண்ணெய்ப்பூச்சு கறுகறுவென்று பளபளக்கும். காதோரங்களில் சிலுப்பி வளைந்திருக்கும் கறுப்பு மயிர். சிவந்த கன்னம், சின்ன மூக்கு. கண்கள் எப்படியிருக்கும் என்று தெளிவாகச் சொல்ல முடியாது. சாதாரணமாய் இருக்கும். எதையும் புரிந்து கொள்ள முடியாது.

முன்பக்கம் சார்ப்பு இறக்கிய மரத்தூணில்சாய்ந்து பின்வாகாக கைகளைத் தூக்கி தூணைக் கட்டிக்கொண்டு நிற்பாள். அக்குளின் ஈரமும் இளமையின் செழுமையும் தெரியும். பக்கவாட்டில் இடுப்பு பளபளக்கும் முழங்கைக்கு மேலே சிவந்த தளதளப்பான சதைகளை ரவிக்கைப் பட்டை இறுக்கிப் பிடித்திருக்கும்.

திண்ணையில் உட்கார்ந்தபடி புஸ்தகம் படிக்கிற சாக்கில் அவளையே பார்த்துக் கொண்டிருப்பேன். என் பக்கம் அதிகமாய்த் திரும்ப மாட்டாள். திரும்பினாலும் எனக்காகத் திரும்பின மாதிரியிருக்காது. அகஸ்மாத்தானதாகத்தான் இருக்கும். இருந்தாலும் அதனாலெல்லாம் எனக்கு சலிப்பு ஏற்படவில்லை. அவள் பார்க்கா விட்டால் பரவாயில்லை. அவள் அங்கேயே நின்று கொண்டிருக்க வேண்டும். நான் பார்த்துக் கொண்டே யிருக்க வேண்டும்.

வீட்டில் அவளும்அவள் புருஷனும் மட்டும் தான் இருக்கிறார்கள். இந்த வீட்டுக்கு அவர்கள் வந்து கிட்டத்

www.padippakam.com



தட்ட ஒரு வருஷம் ஆகிறது. இந்த ஒரு வருஷத்தில் விருந்தாளிகள் யாரும் வந்ததாகவோ போனதாகவோ நான்பார்த்தது இல்லை. அவர்கள் ரெண்டே பேர்கள் தான் எல்லாம்.

காலையில் அவன் ஆபீஸுக்குப் போய்விடுகிறான். மத்தியானம் வந்து சாப்பிட்டுவிட்டு மறுபடியும் போய் விடுகிறான். அவள் மட்டுமே தனியாகக் கிடக்கிறாள். பாவம் பேச்சுத் துணைக்குக்கூட யாரும் கிடையாது. யார் கூடவும் பேசவும் மாட்டாள் போலிருக்கிறது.

அவளைப் பார்க்கும் போது மனசு ரொம்ப இளகி விடுகிறது. அவள் மீது எனக்கு எந்த விதமான பிரியம் என்றோ எந்த அளவுக்கு நான் அவளை விரும்பினேன் என்றோ, அப்போது எதுவும் எனக்குத் தெரியாது. அவளோடு பழக்கம் வைத்துக் கொள்ளவேண்டும்; அன்பாகவும், ஆதரவாகவும் நடந்து கொள்ளவேண்டும் என்று தோன்றுகிறது. அவள் ஏதாவது பிரியப்பட்டுக் கேட்டு அதையெல்லாம் நான் வாங்கிக் கொண்டுவந்து கொடுக்கவேண்டும் போல் இருக்கிறது.

சிலசமயம் இதெல்லாம் பயித்தியக்காரத்தனம் மாதிரித் தோன்றும். ஆனால் அது கொஞ்ச நேரம் தான். பொழுது போகப் போக அப்படித் தோன்றிய தெல்லாம் அர்த்த மற்றதாகி விடும். அவளையே பார்த்து உருகிக்கொண் டிருப்பேன். எப்போதாவது நண்பர்களோடு எங்காவது வெளியூர்போய் விட நேர்ந்தால் கூட சாயங்காலமானால் மனசு வதையும். அவளைத் தனியே தவிக்கவிட்டு வந்து விட்ட மாதிரி கிடந்து வாடும். சீக்கிரமே வீடு வந்து சேர்ந்து விட வேண்டும் போல் இருக்கும். வந்தால்தான் நிம்மதி.

சாயங்கால நேரங்களில் மட்டும்தான் அவளை இப்படிப் பார்க்கமுடியும். பகல் நேரங்களில் அவளை

www.padippakam.com



வெளியே பார்ப்பதே அபூர்வம். எப்போதாவது வந்தாளானாலும் இந்த மாதிரி நிற்க மாட்டாள்.

பார்த்துக் கொண்டிருக்கும் போதே அந்தியிருள் பரவும். தெருவும் வீடும் லேசாய் மங்கும். பூவரச மரத்தில் இருள் உறையும். நடுநடுவே வெள்ளை வானம் திட்டுத் தெரியும். அவள் தோற்றம் நிழல் உருவாய்க் கலங்கும். முகமும் முழங்கைகளும் மறைந்துவிடும். புடவை வெளுப்பும், ரவிக்கை வெளுப்பும் கம்மலாய்த் தெரியும். இன்னமும் அவள் அங்கேயே நிற்கிறாள் என்பதற்கு அது தான் அடையாளம்.

நான் திண்ணையை விட்டு அசையவே மாட்டேன். மனம் வராது. ஒளிமங்கிய மோகனகரமான பிஞ்சு இருளில் தேவ கன்னிகை மாதிரி அவள் நின்றுகொண்டிருக்கிறாள். நேரே எழுந்து கிட்டேபோக வேண்டும். பக்கத்தில் நிற்க வேண்டும். நெருங்கி இறுக்காமல் விலகியே வாயில் சேலையை மட்டும் வருடி அதன் ஸ்பரிசத்தை சுகிக்க வேண்டும். மேலேஇதமாய் அவளைத்தாங்கிக் கொள்ள வேண்டும் என்றெல்லாம் மனசு கிளுகிளுக்கும்.

அவன் வருவான்.

கொரட்டுப் படியேறிப் போவான்.

அவள் என்னமோ கேட்பாள். எதுவும் தெளிவாய்க் காதில் விழாது. வெறும் குரல் மட்டும் தான் கேட்கும். இரண்டு பேரும் உள்ளே போய்விடுவார்கள். கதவு மூடப்படும்.

எனக்கு வேதனையாய் இருக்கும். பெருசாய் பெருமூச்சு வெளிப்படும். பேசாமல் எழுந்து எங்காவது வெளியே போய் உலாவி விட்டு வரலாமா என்று புறப்படுவேன். உலாவலிலும் மனம் லயிக்காது. வீட்டுக்கே திரும்பி விடுவேன்.

www.padippakam.com



இரவு சாப்பாட்டுக்கு மேல் இருவரும் கொஞ்ச நேரம் வெளி முற்றத்தில் பேசிக் கொண்டிருப்பதை பார்க்க முடியும். நிலாக் காலமானால் அது கூட கொஞ்ச நேரம். இல்லாவிட்டால் சீக்கிரமே உள்ளே போய் விடுவார்கள்.

எனக்கு ஏக்கம் பிடித்து விடும். மனசில் நிம்மதி இருக்காது. இத்தோடு மறுநாள் சாயங்காலம் தான் என்ற நினைவே நெஞ்சை அரிக்கும். இரவு வேண்டாததாய் கிடந்து நீளும். எப்போது விடியும் என்று இருக்கும்.

சில சமயம் சீ, என்னமாதிரிப் புத்தியிது. அசிங்கம்! இப்படியெல்லாம் தோணலாமா, தப்பு இல்லையா' என்றும் தோன்றும். எல்லாம் ராத்திரியோடுதான். பொழுது விடிந்தால் மீண்டும் அவள். எதிர் வீடுதான்!

இப்போது கொஞ்ச நாளாய் முழுகாமல் இருக்கிறாள். ஏறக்குறைய மாசமாக இருக்கும் என்று நினைக்கிறேன். முதல் பிரசவமாக இருக்கலாம். முன்னைவிட அழகாக இருந்தாள். கைகளும் கால்களும் கதணை கதணையாக அளவோடு பூரித்திருந்தன. முகத்தில் ஒரு அசாதாரணக் களை. கன்னம்-கழுத்து, இடுப்பு, வயிறு எல்லாமே பசபசப்புத் தட்டிப் போய் பச்சென்று பசுமையான புல்தரையைப் பார்ப்பது மாதிரியிருக்கிறது அப்படியே ஆசையாய் மேனி பூராவும் தடவிப் பார்க்க வேண்டும் போல் தூண்டுகிறது.

சாயங்காலத்தில் முன்னே மாதிரி அவள் நிற்பதில்லை. உட்கார்ந்து கொண்டு விடுகிறாள். தூக்க முடியாத பாரத்தைத் தூக்கிச் சுமப்பது போல அவள் நடந்து வருவதும் உட்காருவதும் விசித்திரமாய், ஒரு வயிறு பெருத்த செரிமானம் ஆகாத குழந்தையை நினைவூட்டு கிறது.

பார்க்கப் பார்க்க கனிவு சுரக்கிறது.

www.padippakam.com



தலைப் பிரசவமாயிற்றே! யாராவது வந்து அழைத்துப் போய் விடுவார்களோ!என்று பயமாகவும் இருக்கிறது.

ஆனால் யாரும் வரவில்லை,

பாவம்! சொந்த பந்தம் எதுவும் கிடையாதா? யாருமே வந்து பார்த்துப் போகவில்லையே. எப்படி கூடவே இருந்து பூச்சு பூச்சுஎன்று மேனி நலுங்காமல் பதுவிசாய் வைத்துக் காப்பாற்ற வேண்டிய நேரம். இப்படி அநாதரவாய் விடப்பட்டுக் கிடக்கிறாளே. வீட்டில் எல்லா வேலைகளையும் அவளே தான் செய்கிறாள் போலிருக்கிறது லேசாய் அவளோடு பழக்கமிருந்தால் கூட, கூடமாட ஒத்தாசையாக அவளோடு சேர்ந்து வேலை செய்யலாம். வெந்நீர் வைத்துக் கொடுக்கலாம்.

அவன் என்னத்தைக் கவனிக்கிறானோ! அவள் மட்டும் என் வீட்டிலிருப்பவளானால் அவளை எப்படி யெல்லாம் வைத்திருக்கலாம். தொட்டுக் குனிந்து ஒரு வேலை செய்யவிடாமல்.

மனம் கசிகிறது. அவள் குந்தியிருப்பதைக்காண 'யார் பெத்த பெண்ணோ' என்று அநாதையாய் தோன்றுகிறது.

கிட்ட போய் பக்கத்தில் குந்தி ஆறுதல் சொல்ல வேண்டும். தொட்டு, தொட்டு, பட்டு மாதிரி அணைத்து. கைகால்களை அமுக்கிவிட்டு, வயிற்றைப் பிரியத்தோடே தடவி; கொஞ்சி, நெஞ்சை நீவிட்டு எந்த நேரமும் பக்கத்திலேயே கிடந்து அணைத்து நெருடிக் கொண்டு... ஏதோதோ தோன்றுகிறது.

எண்ணங்களால் கரைகிறேன்.

இருள் வருகிறது. இருண்டு இரவாகிறது.

வீட்டில் நான், அம்மா, ரெண்டாங்கிளாஸ் படிக்கிற ஒரு பாப்பா மட்டுமே. அம்மாவும் பாப்பாவும் உள்ளே

www.padippakam.com



படுத்துக் கொள்வார்கள். நான் மட்டும் காற்று வாட்டத் துக்காக வெளியே படுப்பது. திண்ணையில். நல்ல தூக்கம். யாரோ எழுப்புகிற மாதிரி.

"சார்... சார்..."

"யாரவது" என்று எழுந்திருக்கிறேன்.

"நான் தான் சார். எதிர் வீடு தூக்கத்ல எழுப்பிட்டேன்னு ஒண்ணும் நெனச்சிக்காதிங்க"

ரொம்ப கூச்ச சுபாவம் மாதிரித் தெரிகிறது.

"பரவால்லிங்க" என்கிறேன்.

"கொஞ்சம் சைக்கிள் கொஞ்சம் வேணும் சார். மிட் ஒய்ஃப் ஊட்டு வரிக்கும் போய் வரணும். ஊட்ல மோசமாயிருக்குது"

தூக்கி வாரிப் போடுகிறது எனக்கு.

அவளுக்கு மோசமா?

"எப்டியிருக்குது" என்கிறேன். அதற்குள் துடித்துப் போய் விடுகிற மாதிரியிருக்கிறது.

"ஒண்ணுமில்லிங்க பெயின் அதிகமா இருக்குதாம் ரொம்ப முடியாம இருக்கறா அதான் இட்டாந்துடலாம்னு"

திண்ணையில் இருள். அவன் உருவம் மங்கலாய்த் தெரிகிறது. ஊர் சுமாரானதுதான். கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரி இருக்கிறது ஆனால் ஊரை விட்டு தள்ளி ஒரு முக்கால் மைலில். ஆஸ்பத்திரி, எல்லோருக்கும் குவார்ட்டர்ஸ் எல்லாம் அங்கேதான்.

"எப்படி? போய் கூட்டுக்னு வந்திடப் போறிங்களா?"

"ஆமா சார்"

www.padippakam.com



"சரி. தோ இருங்க" கதவைத் தட்டுகிறேன்.

சைக்கிளை வழக்கமாய் பூட்டி வைப்பது. சாவி உள்ளே இருக்கிறது. அம்மாவை எழுப்புகிறேன். கதவைத் திறந்தாள் அம்மா. 'என்னடா'

'எதிர் வீட்டுக்காரர் இல்ல. அவுங்க சம்சாரம்"

"எப்படியிருக்குதாம்?"

அம்மாவிடம் பதில் சொல்லி சாவியைக் கொண்டு வந்து தருகிறேன். 'கிளிக்' என்று பூட்டைத் திறந்து, ஸ்டாண்டைத் தள்ளி சைக்கிளைத் திருப்புகிறவன் "சார்" என்கிறான்.

"என்னங்க"

"ஒண்ணும் இதுவா நெனச்சிக்காதீங்க. வூட்ல அவ தனியாக இருக்கறா. கொஞ்சம் பாத்துக்கோங்க. வர்ரவரிக்கும்."

'ஜிவி ஜிவு' என்று உடம்பெல்லாம் என்னவோ ஏறு கிறது. இந்த சந்தர்ப்பத்திலாவது பக்கத்தில் இருந்து பார்த்துக் கொள்ளப் போகிறோமே.

"அம்மா" என்கிறேன்.

அவன் சொன்னது அம்மாவுக்குப் புரிகிறது.

"இங்கதான் இர்ரா. பாப்பா தனியா கெடக்கறா. அலண்டு அழப்போறா. எப்படியிருக்குதுனு போய் பாரத்துட்டு வர்றேன்" என்று சொல்லிவிட்டுப் போகிறாள்.

தெருவில் மங்கிய நிலா வெளிச்சம். எதிர் வீடு மங்கி யிருக்கிறது. திறந்த சன்னல் வழியே வெளிச்சம் தெரி கிறது. விளக்கு வெளிச்சம் உள்ளே அவள் இருக்கிறாள். என்னமாய் இருக்கிறாளோ! ரெண்டு வீட்டையும் பார்த்த மாதிரி சும்மா தெருவிலேயே இருக்கிறேன்.

www.padippakam.com



லேசாய் அவள் முனகுவதும் புரள்வதும் காதில் சலனப்படுத்துகிறது. அம்மா அவளோடு ஏதோ பேசுகிறாள். பதில் குரல் தீனமாய் கீச்சு கீச்சென்று ஒலிக்கிறது. போய் பார்க்க வேண்டும் போலிருக்கிறது.

'சுகு' என்கிறாள் அம்மா. என்னைத்தான்.

'என்னம்மா' வீட்டை நோக்கி நாலடி எடுத்து வைக்கிறேன்.

'அந்த வெத்தலஓலப் பெட்டிய எடுத்துக்னு வா. தல மாட்டுல இருக்கும் பாரு.'

அம்மாவால் வெறும் வாயோடு கொஞ்ச நேரம் குந்தி பேசிக் கொண்டிருக்க முடியாது.

ஓலைப்பெட்டியை எடுத்துக் கொண்டு உள்ளே நுழைகிறேன்.

நடையிலே சுவற்றோரம் அவள் வெறும் கோரைப் பாயிலே படுத்துக் கிடக்கிறாள். முகம் வேதனையாலும் கலவரத்தாலும் பிசைந்தெடுத்தமாதிரி வலி ரொம்பத் தான் இருக்கும்போலிருக்கிறது. பல்லைக் கடித்துக் கொண்டிருக்கிறாள்.

'என்ன ஆகுமோ' என்று பயம்.

'நல்ல படியாய் முடிய வேண்டுமே' என்ற ஆர்வம்.

பக்கத்தில் குந்தி 'என்ன கண்ணு. எப்டிமா இருக்குது. எங்கம்மா வலிக்குது! என்றெல்லாம் கேட்க வேண்டும் போலிருக்கிறது.

இரண்டு கையாலும் இடுப்பைப் பிடித்துக்கொண்டு நெளிகிறாள். நான் வந்தது தெரியுமோ தெரியாதோ நானெல்லாம் அவளுக்கு ஆதரவாய் இருக்கிறேன் என்று தெரிந்தால் வலி குறையுமோ என்னவோ!

www.padippakam.com



பேசாமல் நிற்கிறேன். தவிப்பு கொள்ளவில்லை.

'ஏண்டா. ஊட்ல போய் இரு. ஏன் இங்க நிக்கிற?' என்கிறாள் அம்மா.

அவள் வலியினால் அவதிப் படுகிறாள். பக்கத்தில் இருந்து ஒத்தாசை செய்வதற்கில்லை. பேசாமல் வந்து விடுகிறேன்

பிரசவம் நல்ல படியாய் முடிந்து விட்டது. இன்னும் எழுந்து நடமாட ஆரம்பிக்கவில்லை அவள். இன்னும் பத்து நாட்களாவது ஆகுமாம். படுத்த படுக்கையாகத் தான் கிடக்கிறாள். அம்மா அடிக்கடி போய்ப் பார்த்துக் கொண்டு வருகிறாள்.

பிரசவித்த பலகீனம். ரொம்ப மோசமாகிப் போயிருக் கிறாள். பார்க்கவே என்னமோ மாதிரி யிருக்கிறது. கசங்கிய புடவையும் கலைந்த தலையும், நோய்ப் பிடித்தாற் போன்ற இளைத்த தேகமும் ஆளே உருமாறிப் போயிருக்கிறாள். முகத்தில் களையோ ஒளியோ இல்லை ஜீவனில்லாமல் இருக்கிறது.

எனக்குள் எதையோ இழந்துவிட்ட மாதிரி வெறுமை யுணர்ச்சி. ஏனென்று தெரியவில்லை. எப்போதாவது சில சமயம் அம்மா அவள் வீட்டில் குந்திக் கொண்டிருக்கும் போது மட்டும் போகிறேன். சாப்பாடு போட அம்மாவைக் கூப்பிடுகிறேன்.

அவள் படுக்கையிலோ அல்லது சுவர் ஓரம் சாய்ந்து உட்கார்ந்து கொண்டோ இருக்கிறாள். குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருக்கிறாள். நான் உள்ளே நுழைவதாலோ, என்னைப் பார்ப்பதாலோ அவளிடம் எந்தவிதமான மாற்றமும் இருப்பதாகப் படவில்லை. குழந்தை வாயிலிருக்கும் மார்பை மட்டும் லேசாய் மூடிக் கொள்கிறாள். அதைத்தவிர வேறு எதுவுமே இல்லை. பரஸ்பரம் தெரிந்த முகங்களாய் சந்தித்துக் கொள்கிற

படிப்பகம்

www.padippakam.com



போது ஏற்படுகிற ஒரு மலர்ச்சிகூட இல்லை. சலனமில் லாமல் இருக்கிறது.

நினைக்க நினைக்க எல்லாம் சலிப்பாய் இருக்கிறது. எல்லாமே பறிபோய் விட்டது மாதிரித் தோன்றுகிறது. எனக்கென்று எதுவுமே இல்லை. எங்குபோய் விட்ட தென்று புரியவில்லை. வீட்டிலிருக்கப் பிடிக்காமல் வெளியே போய் விடுகிறேன். எங்காவது போய்ச் சுற்றி விட்டு வருகிறேன். பழைய அவளை நினைத்துப் பார்க் கிறேன். எல்லாமே அர்த்தமற்ற அவளாய்த் தெரிகிறது. தளர்ந்து வீடு திரும்புகிறேன். அம்மா ஏதோ முனகுவது கேட்கிறது.

"இவ்வளோ இதுவா இருப்பான்னு நாங்கூட நெனைக் கல. ஒண்ணு கண்ணுல காட்ட மாட்டன்றாளே அந்த புள்ள கையில! கூடப் பொறந்த தம்பியாயிருந்தா உடு வாளா. பொண்ணு பெரிய வெனதான். நாங்கூட என்னமோவாங்காட்டியும்னு நெனச்சேன். ஐயோ பாவம். மசமசன்னு கெடக்குதேன்னு. சும்மாவா சொன்னாங்க ஊம ஊரக் கெடுக்கும்னு"

"யாருமா" உள்ளே நுழைகிறேன்.

தோ. அந்த எதுர் ஊட்டுப் பொண்ணு தாண்டா' அந்தப் பையன் பாவம். எவ்வளோ வேலை செய்யுது. அதுக்கு வயித்துக்கு போட்டா என்னடா. நறுக் நறுக்னு தொடையப் புடிச்சுத் திருவிடறா. பாவம் புள்ள என்னமா துடிச்சிப்புடறான்"

எனக்கு அதிர்ச்சியாயிருந்தது. அவள் வீட்டில் கொஞ்ச நாளாய் ஒரு பையன். அவள் புருஷனுடைய தம்பியாம் ஏழெட்டு வயதிருக்கும். விடுமுறையில் அண் ணிக்கு ஒத்தாசையாக இருக்கும் என்று அழைத்து வந்திருப் பான் போலிருக்கிறது. பையனைப் பார்த்திருக்கிறேன்.

www.padippakam.com



நல்ல பையன். அண்ணன் மாதிரியே முகம். சாது. கூச்ச நாச்சமெல்லாம் கூட அதே தான்.

அந்தப் பையனையா அவள் அடிக்கிறாள். அவளா?

''அந்த ஆள் ஒண்ணும் கேட்டுக்கறதில்லையா'' என்கிறேன்.

''ஆமா. கேட்டான் போ. அவன்தான் பொண்டாட்டி சூத்துக்கு பிருமனையாயிருக்கிறானே''

அதற்குமேல் எதையும் காதில் வாங்கச் சக்தியில்லை. அம்மாவையும் எதுவும்கேட்கவிலலை. சாப்பிடஉட்கார்ந்த போதும் சாப்பாடு இறங்க வில்லை. மனசைப் போட்டு பிழிகிறது. எல்லாம் சூன்யம் மாதிரித் தெரிகிறது.

இரவெல்லாம் தூக்கம் இல்லை. வெகு உயரத்தி லிருந்து கீழே உருட்டிவிட்ட மாதிரி அவள் காட்சி தருகிறாள். அகல விரிந்த விகாரமான கண்கள் கோரமாய் வெறித்து நோக்க கூர்மையான நகங்கள் பதித்த கைகளை நீட்டிக் கொண்டு வருகிறாள். ஏன் அப்படி யெல்லாம் வருகிறாளோ?

தலையை உலுப்பிக் கொள்கிறேன். ஒன்றும் பயனில் லாமலே போகிறது.

முற்றத்தில் அவள். காலை நீட்டிப் போட்டு குழந்தை யைக் காலில் குந்த வைத்து உட்கார்ந்திருக்கிறாள். எண் ணெய்ப்பிசுக்கேறிய கலைந்த தலை. கழுவாத முகம். கசங்கிய ரவிக்கை. புரட்டியெடுத்த மாதிரி புடவை. தொடை வரிக்கும் வழித்துவிட்டுக் கொண்டிருக்கிறாள். குழந்தை வெளிக்கிப் போகிறது.

நடுநடுவே மூக்கை உறிஞ்சிக் கொள்கிறாள். சத்தம் போட்டுச் சிந்துகிறாள். சிந்தியதை பக்கத்திலிருக்கும் சுவற்றில் மொழுவி கைகளை புட்டத்தில் துடைத்துக்

www.padippakam.com



கொள்கிறாள்.

மாராக்கு விலகி தளர்ந்த மார்பு பக்கவாட்டில் தொங்குகிறது. பால் கசிந்து நனைந்த ரவிக்கை. ஈரமாய். மொப்பு அடிக்கும்.

குழந்தையைத் தூக்கிக் கொண்டு எழுந்திருக்கிறாள். பூவரச மரத்தடியில் படுத்திருக்கும் நாயைக் கூப்பிட்டு விடுகிறாள்.

நாய் நக்குகிறது. 'சளுக் சளுக்' கென்று.

உள்ளே போய் செம்பில் நீர் கொண்டு வந்து குழந் தையைக் கழுவுகிறாள். முற்றத்தில் மீதி நீரை நாய் நக்கிய இடத்தில் வீசுகிறாள். துடைப்பம் எடுத்துக்கூட தள்ளவில்லை.

புடவையிலேயே குழந்தையைத் துடைத்துக் கொள் கிறாள்.

அருவருப்பாய்த் தொண்டையைக் காருகிறாள். சத்தம் போட்டு காறிய சளியை ஓரம் துப்பி விட்டு உள்ளே போகிறாள்.

என் முகம் சுருங்குகிறது.

நான் நின்றதனாலோ, பார்த்ததனாலோ, அவளிடம் எந்த வித கூச்ச நாச்சமோ தயக்கமோ காணோம். குறைந்தபட்ட நாசூக்குக்கூட இல்லை. பவ்யம் தெரி யாதவள்.

நான் தலையைப் பிடித்துக் கொள்கிறேன். எவ்வளவு நேரமோ!

இருள் கவிகிறது. கவிந்து இருள்கிறது. எல்லாம் இருளாகவே இருக்கிறது. ஒரு காலத்தில் அவள் எனக்கு எவ்வளவு ஸ்வாரஸ்யமானவளாய்த் தோற்றமளித்தாள். அது எவ்வளவு மகோன்னதமான விஷயமாகவும், மோகன

www.padippakam.com



ரசம் ததும்புவதாயும் இருந்தது. இப்போது எல்லாம் கனவுகளா! அவளை என் இதயத்துக்குள்ளேயே புனிதமாய் வைத்து பூஜித்து வந்ததும், வணங்கியதும் யாருக்குமே தெரியாத ரகஸ்யமாய் உள்ளேயே வெதும்புகிறது.

அம்மா விளக்கைக் கொண்டு வந்து மாட்டுகிறாள்.

எதிர்வீட்டில் பையன் அலறுகிற சத்தம் கேட்கிறது.

"இல்லண்ணி. இல்ல. இனிமே செய்ய மாட்டேன். கேக்காம தொடவே மாட்டேன். எடுக்கமாட்டேன் அண்ணி... எடுக்கமாட்டேன்..."

"பாவி. என்னமா போட்டு அடிக்கறா. பெத்த புள்ளையா இருந்தா இப்படி போட்டு அடிப்பாளா? நாலு எழுத்து படிச்சிருந்தாள்னா புள்ளைங்களோட அரும தெரியும்" அம்மா சொல்கிறாள்.

அடி என் மேலேயே விழுவதுபோல் படுகிறது. நான் மௌனமாய் வெளியே கிளம்புகிறேன். □

"விழிப்பு" □ ...... □

www.padippakam.com

# சடங்கு

பச்சைப் பசேலென்று பாசிமிதக்க, நீரின் நிறமே மாறி கொழ கொழ வென்று பசுமையாக இருக்கும். பெரிய அகன்ற குளம். தீர்த்தக்குளமும் அதுதான் வெளியூர் வாசிகளுக்கு.

நான் உள்ளூர் வாசி.

குளத்துக்குப் பக்கத்தில் அடர்ந்த புளியந் தோப்பு இருக்கிறது. ஆள் மறைய மறைய உட்காருகிற மாதிரி பிரண்டைக் கொடியும், கொஞ்சிப் புதர்களும் நிறைய இருக்கின்றன. காலையில் எழுந்தால் வெளியே போக கொள்ள எல்லாவற்றுக்கும் சௌகரியம் அந்தக் குளமும் தோப்பும்தான்.

குளத்தில் இறங்கி குத்துக்காலிட்டு அமர்ந்து அலம்பிக் கொண்டிருப்பேன். கீழ்ண்டை மூலையில் எவனாவது மாடு குளுப்பாட்டிக் கொண்டிருப்பான். எதிர்ப்பக்க படித்துறையில் யாராவது கோவிலுக்குப் போகிறவன் முக்கி, முக்கி எழுந்திருப்பான். நெஞ்சுவரைக்கும் தண் ணீரில் நின்று கரங்களைக் கூப்பி சூரிய நமஸ்காரம் செய்வான். இல்லாவிட்டால் முருகா...சண்முகா... வேலாயுதா...என்று கரையிலிருப்பவனைக் கூப்பிடுகிறா மாதிரி கூப்பிடுவான். சில நாசூக்கான நைலான், நைலக்ஸ் டெரீலின் டெரிகாட்டன்கள் இறங்கி முழு காமல் கொஞ்சம் தண்ணீரைக் கைகளில் அள்ளி தலையில்

www.padippakam.com



தெளித்துக் கொள்ளும். பக்கத்தில் எதுவும் புரியாமல் நிற்கும் சின்னஞ் சிறிய வாரிசுகளுக்கும் தெளித்துவிடும்.

தீர்த்தமாம். மௌனமாய் சிரித்துக் கொண்டே ஆர அமர சுத்தமாய் அலம்பிக் கொண்டு கரையேறுவேன். காலைத் தட்டி நிக்கரை மாட்டிக் கொண்டு நாடாவை முடிந்தவாறே பின்னால் தூக்கிய வேஷ்டியுடன் வந்து கொண்டிருப்பேன். இளம் வெய்யில், வெளூர் பச்சையில் கரையும். முடிந்தவரைக்கும் தகதகவென்று பிரகாசிக்க முயற்சிக்கும். குளத்து நீர்தான் ஜயிக்கும். இந்த வெற்றியைக் கொண்டாடுவது மாதிரி கரையோரத்து வேப்பமரங்களும், அரசமரங்களும் சலசலக்கும். உடம்பு ஊற்றிக் கொள்ள மறுத்து கையை ஆட்டி சண்டி செய்யும் குழந்தைமாதிரி முனைக்கிளைகளை ஆட்டும். முடிந்து முடித்த பிறகு பின்னால் சுருட்டிக் கொண்டிருக்கும் மடித்துக் கட்டிய வேஷ்டியை சரியாக இழுத்து விட்டுக் கொண்டு, கட்டுத் தளர்ந்து போனால் அவிழ்த்து உதறி சரியாகக் கட்டிக் கொண்டு நடப்பேன்.

"அவ என்னாடா பண்ணுவா; ஏண்டா டேய்...அவ என்னா பண்ணுவான்னேன். கட்டனவன் நீ ஒழுங்கா இருந்தா அவ எண்ணடா பண்ணுவா...அடா டடாடா... பெரிய சூப்பனக்கியாட்டம் காட்டிக்கிறாளே...ஒரேடியா! எல்லாம் ஏந்தலையெழுத்தா...மாமங்காரனாம்; சொந்த மாம்...ஆருக்கு ஆருடா சொந்தம்...எப்படா வந்தது இந்த சொந்தம். எவன் சொன்னான் சொந்தம்னு; நான் சொந்தமில்லியா...ஏண்டா டேய்...நான் சொந்தமில்ல;... ஐய்யய்யையோ... அதுக்குதான் அப்பவே சொன்னேன். கேட்டானா... எங்க கேட்டான்...எங்கடா கேட்டான்."

வட வண்டைப் பக்கத் துறையிலிருந்து குரல் வருகிறது. மொட்டைத் தலைப் பெண்மணி யொருத்தி. ரொம்ப இளகம் இல்லை. ரொம்ப வயசும் இல்லை.



படிப்பகம்

www.padippakam.com



நடுத்தரம். நாற்பது வயசுக்குள் இருக்கும். வெளுர் தட்டிய மெலிந்த தேகம், நீத்துப் போனா மாதிரி கை கால்கள், ரவிக்கையில்லாமல் வெறும் புடவை கட்டியிருக் கிறாள். பச்சைக் கலர் நாட்டுப் புடவை. மாராக்குப் போட்ட முந்தானையாலேயே தோளை இழுத்து மூடி, கரையோரம் குத்துக் காலிட்டுக் குந்தியிருக்கிறாள். தலை யைக் கைகளில் தாங்கி, குனிந்தபடியே தண்ணீரை வெறித்துக் கொண்டிருப்பவளின் வாய் மட்டும் பிதற்றுகிறது.

"அவ அவ வசதின்னா அவ அவ ஊட்டோட இருக் கணம். இங்க ஆருகிட்ட ஓடியாந்து காட்டிக்கிறது. எங்க இருந்துடா வந்தது. உங்களுக்கு இந்த வசதி... ஆர ஆர கொள்ள அடிச்சீங்களோ...எவன் எவன் வயிறு எரிஞ்சானோ... செத்தப்பறம் எல்லாத்தியும் தூக்கி தலையில வாரி வச்சிக்னு போவப் போறானுங்களே மூட்ட கட்டிக்னு... இந்த மூட்ட என்னாடா பொறும்!... இத்த எடுத்தும் போவ உடமாட்டன்னாளே அவ. இந்த மாரி மூட்டையா அவ கட்டிம் போவா..."

பக்கத்தில் இருந்த அதே பச்சைக் கலர்த்துணியில் கட்டியிருக்கும் சின்ன மூட்டையைக் காட்டிப் பேசிக் கொள்கிறாள். எடுத்து மடியில் வைத்து இறுக்கிக் கொள்கிறாள். "பதிமூணு வருஷம் வாழ்ந்த வாழ்வுக்கு மூட்டகட்டி அனுப்பிச்சிட்டியேடா பாவி! நான் ஒனக்கு என்னாடா துரோகம் பண்ணேன், என்னாடா பண்ணேன் அய்யய்யையோ... உன்ன குத்தம் சொல்றதுல ஒண்ணும் புண்ணியமில்ல... அவடா... அவ என்னா மருந்து வச்சாளோ... என்னா மயக்குமாலம் பண்ணாளோ ... எப்பா விநாயகா... நீயே எல்லாத்தியும் கேட்டுகோ; நான் ஆருக்கு என்னா பண்ணேன்...

கரையிலிருக்கும் விநாயகர் கோவிலைக் காட்டி கும்பிடு போட்டுக் கொள்கிறாள். கன்னத்தில் போட்டுக்

படிப்பகம்

www.padippakam.com



கொள்கிறாள். திடீரென்று கண்களில் கண்ணீர் வந்து விடுகிறது. துடைத்துக் கொள்கிறாள்.

''எல்லாம் ஒரு நாள் பாடைக்கிதாண்டா டேய்... எவண்டா பாடையில போவாம செதமா காலா காலத்துக்கும் இந்த பூமியில குந்தி அரசாளப் போறவன். ஆருக்கும் ஆரும் செதம் கெடையாது போடா. எல்லாம் அவ அவ கைகாலு நல்லா இருக்கிற வரிக்கும் தான்... நல்லாருந்த வரிக்கும் சிரிச்சி சிரிச்சி பேசன. கெழுவி யாயிட்டா ஆரு சீண்டுவா. ஆரு சீண்டு வாடா... டேய். என்னாட என்ன இது கூடம் தெரியாதவளா ஆக்கிட்ட; எனக்காடா தெரியாது... நீ காலமுச்சூடும் மைனராவே இரு; நல்லா இரு; இருடா பாவி... இரு .. ஐயோ... ஐயோ... டேய் டேய்... டேய் ஐயோ அடிக்காதறா பாவி; அடிக்காதறா. நான் ஓடிப்புடறேண்டா... ஒழிஞ்சிப் புடறேண்டா...''

சாதாரணமாய்ப் பேசிக் கொண்டிருந்தவள் கொஞ்சம் குரலை ஏற்றிக் கத்துகிறாள். யாரோ அடிக்க வந்து மறிப்பவள் போல முகத்துக்கு நேரே கைகளை ஆட்டிக் கொள்கிறாள். கண்களில் மிரட்சியும் பயமும் வெளிப் படுகின்றன.

ஜியோ... ஐயோ... ஆருமே கேக்க மாட்டீங்களாடா பாவிங்களா... எல்லாம் அவன் பக்கமே கூடிக்னீங்களா... நான் வரமாட்டேண்டா... வரமாட்டேன். வரவேமாட் டேன்; கொல கூடம் பண்ணிப்போடு; ஆஸ்பத்திரிக்கி நான் வரமாட்டேன்; கரண்டு ஷாக்கு வச்சி சாவடிச்சிப்புடு வானுங்க; கரண்டு ஷாக்கு வேணாண்டா... வேணா... என்ன உட்டுடுடா... உட்டுர்றா பாவி, உட்டுடு.''

கத்தி அடங்கிவிட்டு கொஞ்ச நேரம் பேசாமலிருந்தாள். மௌனமாக பழைய படியே தண்ணீரை வெறித்து நோக்க ஆரம்பித்தாள். கரையிலிருந்த சின்ன சின்னக்

படிப்பகம்

www.padippakam.com



கற்களை எடுத்து ஒவ்வொன்றாய் குளத்து நீரில் விட்டெறிந்து அது வட்டம் போடுவதையே ஆழ்ந்த அக்கறையுடன் கவனித்துக் கொண்டிருந்தாள். மூணு நாலுநாளாக தினம் இந்தக் கிழவியைப் பார்க்கிறேன். இப்படித்தான் எதையாவது பிதற்றிக் கொண்டு இருக் கிறாள் யார், எவர், என்ன ஊர் என்று எதுவும் எனக்கு தெரியாது. வழக்கம் போல வெப்பஞ் சிம்பு ஒன்றைப் பிய்த்துக் கொண்டு அரச மரத்து வேரில் உட்கார்ந்தேன். மறுபடியும் ஆரம்பித்தாள் அவள்.

“கரண்டு ஷாக்கு வக்யட்டுமே... ஆருவேண்டாம்னா. ஆரு கரண்டு வேண்டாம்னு சொன்னா... வக்யணம். சாவட்டுமே. செத்துப்போறேன். ஆரு அழப்போறா... செத்தா சிரிப்பானுங்க. நல்லா சிரிங்கடா... இருந்து என்னா சொகத்தை வாரி கொட்டிக்கப்போறேன். செத்தா கொள்ளிகூடம் வக்யவரமாட்டியேடா பாவி... அடப்பாவி! மனுஷனாடா நீ. ஹ்ஹி ஹ்ஹி... ஹிஹி... ஹிஹி... சிரித்துக்கொள்கிறாள். திடீரென்று, எடுத்துப் போட்டாமாதிரி, வாயைத் திறந்து பல்லைக் காட்டி அட்டாகாசமாய்ச் சிரிக்கிறாள். ஏதோ உற்சாகம் மேலோங்கினாமாதிரி, உடம்பை ஆட்டி, ஒன்றும் புரியாத மாதிரி பரபரவென்று இரண்டு கைகளாலும் தலையைச் சொரிந்து அவள் பாட்டுக்கு சிரித்துக் கொண்டிருந்தாள்.

எனக்கும் லேசாய் சிரிப்பு வந்தது. உள்ளாரவே சிரித்துக் கொண்டேன். ஆனால் கப்பென்று உடனே அடக்கிக் கொள்ள வேண்டியிருந்தது.

“ஆருடா அவன் கம்மினாட்டி. இங்க என்னாடா பார்வ...”

என்னைப் பார்த்துத்தான் கேட்கிறாள். சந்தே கமேயில்லை. இது என்னாடா இது வம்பு... ஏதாகிலும் செய்தாலும் செய்யுமோ? பைத்தியம்! என்று பயம் லேசாக மனசை அடைக்கிறது. பாவம்; அது கிடக்கிறது

www.padippakam.com



அதுபாட்டுக்கு. நம்பள என்னா பண்ணப் போவுது; ஏதோ புத்தி கோளாறு என்று சமாதானத்துடன் ஒரு இரக்கமும் உண்டாகிறது. இருந்தாலும் நைஸாக வேறு பக்கம் பார்க்கிறாமாதிரி தலையை திருப்பிக் கொள் கிறேன். திட்டமாய் அளவோடு ஒடித்த குச்சியை இரண்டு பக்கமும் திருப்பிப் பார்த்து எந்தப் பக்கம் வாகாக இருக்கும் என்று கொஞ்சம் தடிமனான பக்கத்தை வாயில் வைத்துக் கடித்தபடியே ஓரக் கண்ணால் அவளைப் பார்க்கிறோன்.

''என்னாடா பண்ணிப் புடுவ நீ... எல்லாத்தியும் பார்த்தும் போயி சொல்லலாம்ணு பாக்கறியா... போய் சொல்லேன். என்னாத்த பண்ணிப்புடுவான். என்னா கழுத்த கிழுத்த வாங்கிப்புடுவானா... ஆஸ்பத்திரிக்கி கூட்டிப்போவான்; போவட்டுமே... போய் சாவறேன். நீ என்னாடா மின்னிண்ணு எடுத்துப் போடப் போறது கெட்டுடப் போவுது...''

இது என்னாடா இது, சரியான கெழுவிதாம் போலருக் குது, உடாதா... என்று நினைத்துக் கொள்கிறேன். சுத்த மாய் இந்தப் பக்கம் கழுத்தை திருப்பிக் கொள்கிறேன். கரையோர விநாயகர் காலையில் ஸ்நானம் செய்து கொண்ட திருப்தியோடு ரொம்ப புத்துணர்ச்சியோடு இருக்கிறார். எதிரே இடுப்பில் ஈர வேஷ்டியுடன் எவனோ காதைப் பிடித்து தோப்புக் கரணம் போட்டுக் கொண்டி ருக்கிறான். எண்ணுகிற சத்தம்கூட கேட்கிறது. நூறு போடுகிறேன் என்று கணக்கோ என்னமோ.

''ஏண்டா அவளக் கட்டிக்கப்போறேன்னு சொன்னா நான் என்னாட சொல்லப் போறேன். பாஷாணம் குடுத்துருக்கலாண்டா அதவ்ட பாஷாணம் ... பாஷணம் எப்பிடியருக்கும் தெரியுமா? ஆருபாத்துருக்கறா... அடிப் பாவி என்ன ஏண்டி அடிக்கற ஐயோ ஐயோ... ஏண்டா டேய். இதுக்கு தான் இவளகட்டிக்ணு வந்தியா...''

www.padippakam.com



பேச்சு பழையபடி அவள் திசைக்கே திரும்புகிறது. பழைய கதைகளைப் பற்றி எதுவோ சொல்லி புலம்பிக் கொள்கிறாள். "பசலக் கீரைய பருப்புப் போட்டு கடைஞ்சா எப்பிடியிருக்கும்... அவளுக்கு தெரியுமா... ஏண்டா ஒனக்குத்தான் தெரியுமே. என்னா தெரியும் அவளுக்கு ... என்னாடா செய்வா அவ; ஆக்கிப் போட்டவரிக்கும் நல்லா துன்ன; ஆவதவளாயிட்டேன் அடிச்சி தெருத்தற! தெருத்துடாப்பா... நல்லா தெருத்து. ஒனக்கு வகையா ஆக்கிப்போட ஆருமில்லி யேண்ணு தாண்டா அழுவறேன். பாவி... அடிச்சி தெருத்து..."

அதோடு வாயை மூடிக்கொண்டு எதுவோ ஞாபகம் வந்தவள்போல மெல்ல எழுந்திருக்கிறாள். கொஞ்ச நேரம் பேசாமல் நிற்கிறாள். சுற்றுமுற்றும் பார்த்து சிதைந்த படிக்கற்களுக்கிடையே ஒரு செங்கா முட்டிக் கல்லை எடுத்துக் கொள்கிறாள்.

வாயில் கடித்த வேப்பங் குச்சை மென்று கொண்டிருக் கிறேன். நைந்து நைந்து நன்றாய் தூரிகை மாதிரி வரு கிறது. இடையிடையே எச்சிலை வெளியே துப்பிவிட்டு மெல்ல பல்லு பல்லாக தேய்க்க ஆரம்பிக்கிறேன். ஊர்க் குழந்தைகள் பட்டாளம் வழக்கப்போல குளத்துக்கு வரு கின்றன. எல்லாம் அஞ்சு வயசு, ஆறுவயசு பொடிசுகள். பட்டை வைத்த கால் சட்டை. வெறும் பாவாடை. எண்ணெய் பிசுக்கு முகம், எண்ணெய்த் தலை. பரட்டைத் தலை. கோட்டுவா முகம். பீளை தள்ளும் கண்கள். எல்லாம் தப தபவென்று சரிவில இறங்கி ஓடுகின்றன.

"ஹேய்... கெழுவி! பைத்தியம்... பயித்தியக்காரக் கெழுவி... மொட்டக் கெழுவி... மொட்டப் பயித்தியம்..."

தினம் வந்து குளித்துவிட்டுப் போகிற குழந்தைகள் அதுகள். எப்பவும் அது பாட்டுக்கு தங்களுக்குள்

www.padippakam.com



விளையாடிக் கொண்டே வரும். குளத்தில் இறங்கி கும்மாளம் கொட்டி, தண்ணீரைக் கலக்கி, முழங்கால் ஆழத்திலேயே தப்பட்டி அடித்து, அழுக்கு போகிறதோ என்னமோ தண்ணீரை அழுக்காக்கி அட்டகாசம் செய்து விட்டு, கரைக்கு வந்து அது அது டிரவுசரையும், பாவாடையும் எடுத்து மாட்டிக் கொண்டு, வந்தா மாதிரியே ஓடி விடும்.

ஆனால் ரெண்டு மூணு நாளாக பார்க்கிறேன். அதுகள் வந்தோமா போனாமோ என்று இல்லாமல், வந்ததும் இந்தக் கிழவியைச் சுற்றிப் பிடித்துக்கொண்டு கெக்கலி கொட்டிக் கொண்டிருந்தன. அதுகளுக்கு கிழவி நூதன தரிசனம்.

''ஹேய் பாட்டி; மொட்டப் பாட்டி... எங்கூட்டுக்கு வர்ரியா சோறு போடறோம்.''

''கருவேட்டுக் கொழம்பு துன்னுவியா?''

பாட்டி பருப்புக் கொழம்புதான் துன்னும்.

''பாட்டி—பருப்புக்கொழம்பு; கெழுவி—கத்திரிக்கா.''

குழந்தைகளின் குரல் எதையுமே காதில் வாங்காமல் இதுகளைக் கண்டதுமே அவள் கொஞ்சம் மிரண்டு துணி மூட்டையை எடுத்துக் கொண்டு படிகளில் தடுமாறிய படியே குளத்தின் அடுத்த பக்கமாக நகர ஆரம்பித்தாள். குழந்தைகள் விடவில்லை.

''டோய் பாட்டி ஓடுது. டோய்.''

''பாட்டி இல்லடா; பைத்தியம்.''

''பாட்டி—பைத்தியம்... பைத்தியம்—பாட்டி.''

''பைத்திய பாட்டி.''

''மொட்ட பைத்தியம்''

www.padippakam.com



ரொம்பவும் ஓடாமல், சாதாரணமாகவும் நடக்காமல் கொஞ்சம் வேகமாய் அடிக்கடி பின்னால் மிரட்சியுடன் திரும்பிப் பார்ந்த படியே ஓடிக்கொண்டிருந்தாள். பாட்டி என்று சொல்கிற வயசில்லை அவளுக்கு. பாட்டி மாதிரி ஆகிவிட்டிருந்தாள். குழந்தைகள் பின்னாலேயே துரத்திக் கொண்டு ஓடின.

"பைத்தியம் ஓடுதுடா டோய்..."

"தோத்துக்கிச்சி நம்ப கிட்ட."

"தோத்தான்!"

தடுக்கித் தடுமாறி ஓடிக் கொண்டிருந்தவள் சட்டென்று நின்று திரும்பினாள். கையில் கல் இருந்தது.

"டேய் கெழுவி கையில கல்லு."

"பைத்தியம் அடிச்சாலும் அடிக்கும்."

"எல்லாம் கையில ஆளுக்கு ஒரு கல்லு எடுத்துக் கோங்க."

அவள் மறுபடியும் ஓட ஆரம்பித்தாள். குழந்தைகள் துரத்திக்கொண்டு ஓடின. அதுகளுக்கு எக்காளமாயிருந் திருக்க வேண்டும். சின்னச் சின்னக் கற்கள் அவளை நோக்கிப் பறந்தன.

"ஐயோ. ஐயோ. ஐயோ...வ்வாவாவா..." கத்திவிட்டு அவள் வாயிலடித்துக் கொண்டாள். "ஒங்கள பாடையில தூக்கிப் போவ... நீங்க கட்டையில வேவ. ஒங்கள மாரியாத்தா தூக்கோ."

பதிலுக்கு குழந்தைகள் பழிப்பு காட்டின. அழகு காட்டி, உடம்பை ஆட்டின.

"டேய் பாவம்டா."

"நம்பள பார்த்தா ஏன் ஓடணும்."

www.padippakam.com



"கெட்ட வார்த்த பேசறதப் பார்ரா..."

கற்கள் மீண்டும் பறந்தன.

படீரென்று ஒரு கல். அவள் கணுக்கால் எலும்புகளைத் தாக்கித் தெறித்தது. டங்கென்ற சப்தம் கரையிலிருந்த எனக்குக் கேட்டது.

"ஐயோ. ஐயோ..." கால்களைப் பிடித்துக் கொண்டு லபோ, லபோ என்று கத்தினாள் அவள். வாயிலடித்துக் கொண்டு அழுதாள். "இங்க பார்ரா பாவி! செவனேண்ணு குந்திங்கிறவள அடிக்கறதப் பார்ரா... ரத்தங்கூட வருதுடா டேய். ஐயோ... ஆருமில்லியாடா இதக் கேக்க" நிராதரவாய்க் கத்தினாள்.

கொஞ்ச நேரத்தில் சட்டென்று அவள் முகம் மாறியது. வக்ரமாய் எல்லாவற்றையும் அடித்து நொறுக்கி வாயில் போட்டுக் கொள்வது மாதிரி, எல்லாக் குழந்தைகளையுமே ஒரே விழுங்காய் விழுங்கி சாப்பிட்டுவிடத் துடிப்பது மாதிரி "ஒங்கள..." என்று பல்லைக் கடித்து, கையிலிருந்த கல்லைக் காட்டி, குழந்தைகளை எதிர்த்து ஒரு சிலும்பு சிலும்பினாள்.

குழந்தைகள் அலண்டு பின் வாங்கின.

"டேய் அடிச்சிடப் போவுதுறா."

"எம்மாம் பெரிய கல்லு."

"வாங்கடா குளிக்கப் போவலாம்; நேரமாவுது."

துரத்துவதை நிறுத்தி, கொஞ்சம் தள்ளி வந்து வழக்கமான இடத்தில் எல்லாம் ஒவ்வொன்றாய் அவிழ்த்துப் போட்டு விட்டு தண்ணீரில் இறங்கின.

கிழவி கொஞ்சம் ஒதுக்குப் புறமாய் போய் உட்கார்ந்து வாயில் வந்ததெல்லாம் சொல்லி எதுவோ சபித்துக் கொண்டிருந்தாள். மூட்டையை பக்கத்தில் வைத்து

படிப்பகம்

www.padippakam.com



விட்டு, செங்கல்லை படிக்கட்டில் உறைத்துத் தேய்த்து ஆள்காட்டி விரலால் தொட்டு பல்தேய்க்க ஆரம்பித்தாள். விரல் பல்லைத் தேய்த்துக் கொண்டிருந்த போதும் வாய் சபித்துக் கொண்டேயிருந்தது.

''டேய்... அது இன்னும் திட்டுதுறா'' தண்ணீரில் கொட்டமடித்த ஒருவன் சொன்னான்.

ஒருவன் தண்ணீரை வாரி அவள் தேய்த்த செங்கா முட்டித் தூளின்மேல் இறைத்தான்.

தொடர்ந்து தண்ணீர்த் திவலைகள் அவள் மீது பாய்ந்தன. குளுப்பாட்டுவது மாதிரி குளுப்பாட்ட ஆரம்பித்தன. தூள் கல்லிலிருந்து கரைந்து வழிந்தது. அவள் துப்புர நனைந்தாள்.

''ஓடு ஓடு எங்கனா ஓடிப்போ.''

''நாங்க குளிக்கற கொளத்துக்கு நீமேவராத...''

''கல்லியா காட்டற; அந்தக் கல்லாலியே உன் மண்டைய ஒடைக்கறோம்...''

''அப்பறம் கே...கேன்னுதான் அழுவிகினு ஓடுவ''

''ஓடு...ஓடு...!

கிழவி எழுந்து நின்றாள். கொஞ்சநேரம் அதுகளையே உற்றுப் பார்த்தாள். முகத்தில் முன்னே மாதிரி ஆக்ரோஷமோ வெறுப்போ இல்லை. வெறுமை வெளிப்பட்டது. எதுவும் பேசாமல் துணி மூட்டையை எடுத்துக் கொண்டு அப்பால் நகர்ந்தாள். கொஞ்சம் மூலையாக தனியாகப் போய் உட்கார்ந்து, கைகளில் நீரை அள்ளி வாயைக் கொப்பளித்துக் கொண்டு மௌனமாயிருந்தாள். எப்போதோ ஒரு முறை தலையை நிமிர்த்தி குழந்தைகளைப் பார்த்தாள்.

www.padippakam.com



கரையில் மேள சத்தம் கேட்டது. கிழக்கே தெரியும் சின்னக் குன்றின் மேல் குமரன் குடி கொண்டிருக்கிறானாம். தினத்துக்கும் திருமஞ்சனம் போய்த்தான் அபிஷேகம். பஞ்சக்கச்சம் வேஷ்டி, பூணூல், நெய் சரீரம், உடம்பில் பட்டை விபூதி சகிதம் பாலு குருக்கள் தலையில் திருமஞ்சனம் இருக்கிறது. நாலு மாங்கொத்து சொறுகி. வேணு வித்துவான் நாயனம் ஊத மலையான் திருமேளம் முழங்க, ஜால்ரா, ஹார்மோனிய பக்கவாத்தியங்களுடன் திருமஞ்சனம் போகிறது. பாலு குருக்கள் கம்பீரமாய் நடுவே நடந்து போகிறார். தீர்த்தம் கொண்டு போகிறவர். காலங் காலையில் இது வழக்கப்படி இசை. திருமஞ்சன இசை.

சத்தம் நயமாய் ஒலிக்கிறது. திடீரென்று குளத்தில் ஒரு சத்தம். சத்தம் என்று சொல்ல முடியாது. கூச்சல். வாய் குழறுகிறா மாதிரி "ப்பவாப்...வ்ப்வாவ்ப்" என்று.

எவனோ பையன் மூழ்கி விட்டிருக்கிறான். குளத்தில் இரண்டு கைகள் உயரே தெரிந்தன. நீரில் அழுந்தி எம்பி எப்பிக் கிளம்பி தண்ணீரில் மூழ்கித் தத்தளித்தன.

பதற்றத்துடன் எழுந்தேன். யார் அது. எப்படி நேர்ந்தது என்று யோசிக்கக்கூட அவகாசமில்லை. அதற்குள் சட்டென்று எழுந்து குளத்தை நோக்கிப் பாய்ந்தாள் கிழவி.

குழந்தைகள் பயந்து கரையேறின. அந்த பசங்களில் தான் எவனோ ஒருத்தன் ஆழத்தில் தண்ணீர் குடிக்க ஆரம்பித்திருக்கிறான்.

சளப்... சளப்...பென்று முழங்கால் தண்ணீரில் நடந்தவள் நெஞ்சு வரைக்கும், கழுத்து வரைக்கும் அவள் பாட்டுக்குப் போனாள்.

படிப்பகம்

www.padippakam.com



ஒன்றும் புரியாமல் விக்கித்து நின்றேன்.

பையனை இழுத்து மேலே தூக்கிக் கொண்டு அவள் திரும்பிக் கொண்டிருந்தாள். கரைக்கு வந்து தரையில் கிடத்தினாள்.

கிடு கிடுவென இறங்கி ஓடி வந்தேன்.

அம்மணமான பையனின் வயிறு உப்பியிருந்தது. அஞ்சு வயசு இருக்கும் அவனுக்கு. முகம் வாடிக் கறுத்திருந்தது. களைப்பா, சோர்வா என்று தெரியாத வாட்டம். கொஞ்சம் வெளுப்பு. வாயிலிருந்து தண்ணீர் வழிந்தது. தலையிலிருந்து தண்ணீர் சொட்டியது. கண்களைத் திறக்க முயற்சித்தான். இவள் விரலால் பிதுக்கினாள். வெள்ளை விழி பயங்கரமாய் வெளிப்பட்டது.

குழந்தைகள் ஒரு வினாடி நின்று பார்த்து விட்டு அது அது துணிகளை எடுத்து மாட்டிக் கொண்டு ஓட்டம் பிடித்தன.

அவள் அந்தப் பையனையே கொஞ்ச நேரம் உற்றுப் பார்த்தாள். ஏதோ யோசனையுடன் இருப்பது போல் தோன்றியது. பிறகு காலைப் பிடித்துத் தூக்கி கர கர வென்று சுழற்ற ஆரம்பித்தாள். நாலைந்து சுற்றுக்கெல்லாம் வாயிலிருந்து தண்ணீர் கொட்ட பையன் வயிறு கொஞ்சம் கரைந்தது.

அவள் எதுவும் பேசாமல் என்னைப் பார்த்தாள். பையனை கரைப் படிக்கட்டில் குந்த வைத்து உடம்பில் சாற்றிக் கொண்டு வாயில் வாய் வைத்து மூக்கில் வைத்து உப்... உப்...பென்று ஊதினாள்.

பையன் திணறத் தொடங்கினான். லேசாய் மூச்சு வந்தது. மெள்ள கண்களைத் திறக்க முயன்றான். நன்றாய்ச் சிவந்து போயிருந்த கண்கள் மிரட்சியுடன் பார்த்தன.

www.padippakam.com



நான் விசித்திரமாய் அவளைப் பார்த்துக்கொண் டிருந்தேன்.

அவள் பையனைப் பார்த்தாள். குந்தியிருப்பவனை எழுப்பி நிற்க வைக்க முயன்றாள். அவனால் நிற்க முடிய வில்லை. தூரத்தில் அவன் கால் சட்டை மட்டும் தரை யில் தனியே கிடந்தது.

அதைப் பார்த்து அவள் என்னவோ கேட்டாள். பையன் பதில் சொல்லவில்லை. இன்னும் வாந்தியெடுக்க வருபவனைப் போல வயிற்றைப் புரட்டினான். ஒக்காளித் தான்.

அவன் பின் புறத் தலையைப் பிடித்து முன்புறம் குனிய வைத்து "எடு நல்லா எடு..." என்று சொன்னாள் அவள்.

அதற்குள் கரையிலிருந்து பெரிய கூக்குரல் கேட்டது. ஒரு பெண்மணி அலறி அடித்து அழுது கொண்டு ஓடி வந்தாள், பையனுக்கு தாய்காரியாக இருக்கலாம்போல் தெரிந்தது. தரையில் விழுந்து புரளாத குறையாய் ஒராமா என்று அலறிக் கொண்டு வந்தாள்.

"யாரு பேச்ச கேக்குது இது; எங்க இருக்குது. ஐயோ... மாரியாத்தா... காளியாம்மா... நீதான் காப்பாத்தணம் புள்ளைய."

அவளையே ஒரு மாதிரி விசித்திரத்துடன் பார்த்தாள் கிழவி. கிட்டத்தில் நெருங்கினாள் பையனின் அம்மா. "இப்பிடி உடு இப்பிடி புள்ளைய..."

சரக்கென்று கிழவியிடமிருந்து பையனைப் பறித்து இழுத்து தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டாள். முந்தானையால் தலையைத் துவட்டினாள். முகத்தைத் துடைத்து கைகாலைத் துடைத்து நெஞ்சை நீவி விட்டு கிழவியை முறைத்தாள். சுட்டுப் போடுகிறா மாதிரி யிருந்தது பார்வை.

படிப்பகம்

www.padippakam.com



சும்மா போகவில்லை அவள். ''ஆருடி கண்ணு ஒன்ன கொளத்துல புடிச்சித் தள்ளனது...'' என்று இடுப்பிலிருக்கும் சிசுவைச் சீண்டிக் கொஞ்சினாள்.

கிழவி பக்கம் கையைக் காட்டிய சிசுவைப் பார்த்து நான் திகைத்து நின்றேன்.

கொஞ்சம் தள்ளிப்போய் முனகிக் கொண்டே போகும் தாய்காரியின் குரல் என் காதுகளில் தெளிவாகவே விழுந்தது. ''சாவ மாட்டாத கெடக்குதுங்க இதுங்கல்லாம்; ஊருக்கு ஒண்ணு இந்த மாதிரி, இதுங்களுக்கெல்லாம் ஒரு நாளுவல்லியே...தூக்கிம் போவ...''

கிழவி துணி மூட்டையை எடுத்து அணைத்துக் கொண்டு கையை நீட்டி எதுவோ பேசியபடியே படிகளில் போய்க் கொண்டிருந்தாள். ''புள்ள அரும பெத்தவளுக்குத்தாண்டா தெரியும்...நமக்காடா தெரியும்...டேய்... ஆரு பெக்க மாட்டான்னாபுள்ள. நானா பெக்க மாட்டேன்னேன்...ஏண்டா டேய்...நானாடா பெக்கமாட்டேன்னேன்.''

பிரச்சனை □ டிசம்பர் 1972.

www.padippakam.com

# நீதி

அரச மரத்தடியில் கூட்டம் நிறைந்திருந்தது. ஊரில் ஏதாவது பொது விவகாரம் என்றால் அங்கேதான் கூட்டம் போடுவது வழக்கம். சென்ற வாரம் அடித்த புயல் காற்றில் வீடிழந்தவர்களுக்கு கவர்மெண்டில் ஏதோ உதவிப் பணம் தருகிறார்களாம் ரொம்ப அனுதாபப்பட்டு. அதற்காத கிராமத்தின் நிராதரவான குடும்பங்களும் அன்னாடங்காய்ச்சிகளும் அங்கே குழுமியிருந்தன.

மரத்துக்குக் கீழேயிருந்த சுத்துக்கட்டு மேடையில் ஊர்ப் பஞ்சாயத்துத் தலைவர் மாரிமுத்துக் கவுண்டர் குந்தியிருந்தார். நல்ல வளப்பமான கட்டை. 'என்னை மீறி இந்த ஊரில் எவன்?' என்பது மாதிரி முகத்தில் ஒரு எக்களிப்பு. அவர் பிரசிரெடண்டு ஆனதிலிருந்தே எப்படியோ அந்த 'கம்பீரம்' அவரிடம் குடிகொண்டு விட்டது. பரம்பரையாக வந்த ஏதோ கொஞ்சம் நிலத்தை வைத்துக் கொண்டு பத்து வட்டிக்கும். நெல்லு வட்டிக்கும் பணத்தைக் கொடுத்து, அசலை ரெட்டிப் பாக்கும் வழி அவருக்குத் தெரிந்திருந்தது. அரை காணி, கால் காணி வைத்திருந்த ஏழைகளுக்கு அவர் சமயத்தில் உதவும் தர்மவானாய் இருந்தார். பிற்பாடு அந்த நில மெல்லாம் இவருக்குச் சொந்தமாகி மேலும் கூடியது. போதும் போதாதற்கு மாட்டுத்தரகு அவருக்கு கை வந்த கலை. எப்படியெல்லாமோ பணம் பண்ணும் வழியை

www.padippakam.com



மட்டும் அவர் கசடறக் கற்றிருந்தார். காசு சேர சேர அவருடைய செல்வாக்கும் உயர்ந்தது. அந்த செல்வாக்கில் போன எலக்ஷனில் நின்றது. தலைவராகவும் வந்து விட்டார். அப்புறமென்ன! பின்னால் எப்போதும் பத்து சோம்பேறிகள்—அடி ஆள், ஆதாரவாள், கையாள் எல்லாம் அவர்கள்தான். சகாக்கள் புடைசூழ வெறித்த கண்களுடன் 'எது ஆட்டும் கொத்தலாம்' என்பதை போல அழுத்தமாய்க் குந்தியிருந்தார் அவர். பக்கத்தில் பஞ்சாயத்து கணக்கப்பிள்ளை 'பார்ட் டைம் ஒர்க்கர்.' சொன்னதைச் செய்ய வேண்டியவர். ஒவ்வொரு பேராகப் படித்து பேருக்குரியவர் வந்ததும் பணத்தைக் கொடுத்து நோட் புக்கில் கையெழுத்தோ, கை நோட்டோ வாங்கிக் கொண்டிருந்தார்.

சுமாரான வெய்யில், ஓரம் முளைக்குச்சியில் கட்டியிருந்த ரெண்டு மாடுகள் வைக்கோலை அசைபோட்டுக் கொண்டிருந்தன. ஜனங்கள் குத்துக்காலிட்டும், தொடை வரை துணியை வழித்துக் கொண்டும், வெறும் கௌபீனமும் தலைப்பாகையுமாக, கிடைக்க இருக்கும் தொகையை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருந்தார்கள். வரிசைப் பிரகாரம் கணக்கர் பெயரைப் படித்தார்.

"நாராயணன்! நாராயணன்!"

சுமார் இருப்பத்திரெண்டு வயசு தோற்றமுள்ள ஒரு வாலிபன் எழுந்து ஜனங்களை விலக்கி வழி பண்ணியவாறே காலை தூக்கி தூக்கி வைத்து வந்து கொண்டிருந்தான். கரிய குள்ளமான நிறம்தான். ஆனாலும் முகத்தில் ஒரு அலாதியான களை படர்ந்திருந்தது. பார்வையில் இருந்த மிடுக்கும் கண்டிப்பும் எல்லோரையுமே அவனிடம் நம்பிக்கைக் கொள்ளத் தூண்டும். மடித்துக் கட்டியிருந்த வேஷ்டியை அவிழ்த்து விட்டுக் கொண்டவாறே மேடையை நெருங்கினான்.

www.padippakam.com



"இந்தா இதுல ஒரு கையெழுத்துப் போடு"

காட்டிய இடத்தில் அழகாக இங்கிலீஷில் ஒரு கையெழுத்தைப் போட்டு முடித்தான் அவன்.

இரண்டு பத்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து அவன் முன்னே நீட்டினார் கணக்கப்பிள்ளை.

"என்னா இது – !" என்று ஏதும் புரியாதவனாகவே கேட்டான், நாராயணன்.

"பணம். இருவது ரூபா...!" என்றார் பார்ட்டைம் ஓர்க்கர்.

"அது தெரிது. கவர்மெண்டுல வீடிழந்தவர்களுக்கு வீடு ஒண்ணுக்கு நாப்பது ரூபான்னுதான குடுத்திருக் காங்க? அதவுட்டுட்டு வெறும் இருவது ருவா குடுத்தா... என்னா அர்த்தம்?" என்று கேட்டான் நாராயணன்.

இப்படி ஒரு கேள்வியை எதிர் பார்க்காத கணக்கப் பிள்ளை, செய்வதறியாமல் தலைவர் பக்கம் தலையைத் திருப்பினார்.

தலைவருக்குக் கோபம் ஒன்றும் தாங்கவில்லை. ரோஷம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது. "என்னாடா என்னுமோ பெருசா கணக்குக் கேக்கற... பேசாம குடுத்தத வாங்கிக்னு போவியா... அதவுட்டுப்புட்டு..." மீதி வார்த்தைகளை கண்களில் உருட்டி ஒரு அதட்டல் போட்டார்.

"குடுக்கறத குடுத்துட்டா நாங்க ஏன் பேசப் போறோம்?" என்று நியாயமாகவே கேட்டான் நாராயணன்.



படிப்பகம்

www.padippakam.com



தலைவருக்கு ஆத்திரத்தால் உடம்பு நடுங்கியது. 'இத்தனை பேர் மத்தியில் இந்தப் பையன் இப்படி எதிர் கேள்வி போடுறானே' என்ற அவமானம். காதோடு காதாய் வைத்து கமுக்கமாக முடிக்க வேண்டிய விஷயத்தை இவன் இப்படி அள்ளி இறைந்து அம்பலப் படுத்த பார்க்கிறானே என்ற குமைச்சல். ஆனாலும் அவர் பிகு விடாமலேயே மேலே ஏறினார்.

''என்னாடா பெரிய உங்கப்பன் ஊட்டுக்காசி... ஏதோ கெடைச்ச வரிக்கும் லாபம்னு நெனச்சுக்னு போவாமே சரா பேசிக்னு நிக்கறான் இப்பதான்! எல் லாம் இருவது இருவது வாங்கிக்னு பேசாத கம்முன்னு வாய மூடிக்னு போறான்; இவனுக்கு மட்டும் நாப்பது ரூவா வோணுமாம். கேளுங்களேன் கதைய...''

அவர் 'எத்தல்', நாராயணனுக்குப் புரிந்தது. அதற்கு மேல் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருக்க அவனால் முடியவில்லை.

''வீண்பேச்செல்லாம் வேணாங்க. எங்களுக்கும் பேசத் தெரியும்'' என்றான் அவன்.

''என்னாடா பேசுவே நீ!'' என்றார் தலைவர்.

''கவர்மண்ட்ல எவ்வளவோ பணம் குடுத்தாங்க''

''எவ்வளோவோ குடுக்கறான், அதப் பத்தி ஒனக் கென்னாடா?''

''நாங்க கையெழுத்துப் போட்டு வாங்க வேண்டிதா இருக்குதே, அதனாலதான் கேக்கறோம். எவ்வளோ குடுத்தாங்க...?''

''கவர்மண்டுல குடுக்கற பணத்துக்கெல்லாம் தோ ஐயா கிட்ட தான் நாங்க கணக்கு ஒப்பிக் கணம் போல ருக்குது''

www.padippakam.com



தலைவர் நையாண்டி பண்ணினார். நாராயணன் எதையும் லட்சியம் பண்ணாமல் நறுக்குத் தெரித் தாற் போலவே கேட்டுக் கொண்டிருந்தான். பேச்சு ஒன்று மாற்றி ஒன்று முற்றி வளர்வதைக் கண்ட தலைவ ரின் சகபாடிகளில் ஒருவனான பக்கத்திலிருந்த தலைப் பாய்க்காரன் நேக்காய் அடி எடுத்துக் கொடுத்துச் சொன்னான்.

“அந்தக் கழுதையோட என்னாங்க வீண் பேச்சி. விஷயத்த ஊர் ஜனங்ககிட்டியே வெளக்கிச் சொல்லிப் புடுங்களேன். வெவரமா...”

“அதுவும் சரிதான் இவன் கிட்ட நான் என்னா பேசறது” என்று தலைப்பாய்க்காரன் அடியைத் தொடர்ந்து மரமேறிய மாரிமுத்துக் கவுண்டர் ஜனங்கள் பக்கம் திரும்பினார். தொண்டையைக் கனைத்துச் செருமிக் கொண்டு ரொம்ப இதமான குரலில் அவர் சொன்னார்.

“எல்லாம் நான் சொல்றதக் கேளுங்க! கவர்மண்டுல ஊடு ஒண்ணுக்கு நாப்பது ரூவாதான் குடுத்தாங்க. ஆனா நம்ப ஊர் மாரியாத்தா கோயில் இடிஞ்சு போய் மூணு வருஷமாவுது; நாம்பளும் என்னான்னா வெல்லாமோ பண்ணித்தான் பாக்கறோம்; அதக் கட்டி முடிக்க ஒரு விமோசனமும் பொறக்கல. அதனாலதான் நாங்க பெரிய வங்கல்லாம் ஒண்ணா சேந்து இது அனாமத்தா வந்த காசிதானேண்ணு ஆளுக்கு இருவது ரூவா புடிச்சு எங்க ளால முடிஞ்சதியும் கூடக் கொஞ்சம் போட்டு ஊர் பொது வுல ஒங்க பேரால கோயில கட்டி முடிச்சுடலாம்னு முடிவு செஞ்சிதான் ஆளுக்குப் பாதிப்பணம் புடிச்சிக்னு குடுத் தோம். உங்களுக்கே நல்லா தெரியும் போன ரெண்டு மூணுவருஷமா மழையே இல்லாம காஞ்சிங் கெடந்தப்போ இந்த வருஷம் மட்டும் மழ ஏகமா பேஞ்சிருக்கு. என்னக்

www.padippakam.com



கேட்டா நான் என்னா சொல்வேன்னா ஊர் ஜனங்களுக்கும் கஷ்டம் தீரட்டும், நம்பளுக்கும் ஒரு ஸ்தலம் அமையட்டும்னு அம்மனே மனசுல முடிவு பண்ணிதான் இந்த மாதிரி ஒரு மழையையும் குடுத்து, இடிஞ்சிபோன ஊட்டுக்கு கவர்மண்டு மூல்யமா பணமும் குடுத்து ஏற்பாடு பண்ணியிருக்குதுன்னு நெனக்றேன். அப்படியிருக்கும்போது அம்மன் புண்ணியத்துல வந்த காசில அம்மன் கைங்கரியத்துக்கும் கொஞ்சம் செலவு பண்றதுன்னா யாரும் மறுப்பு சொல்ல மாட்டீங்கன்னுதான்...'' என்று ஒரு அசட்டுச் சிரிப்போடு பேச்சை இழுத்து நிறுத்தினார் தலைவர்.

கூட்டத்தில் கசமுசப்பு ஏற்பட்டது. ஜனங்கள் அவர்களுக்குள் குசுமிக் கொண்டிருந்தார்களே தவிர யாரும், எதுவும் எழுந்து சொல்லத் திரணில்லாதவர்களாய் அதற்கு மறுப்புத் தெரிவிக்கத் துணிவின்றிக் குந்தியிருந்தார்கள்.

''நீங்க பாத்து எது செஞ்சாலும் சர்தான் தலைவரே; தப்பா என்னா செய்துடப் போறீங்க...'' முன் வரிசையிலிருந்த நோஞ்சான் எவனோ ஒருத்தன் அவருக்கு ஒத்துப் பாடினான்.

கூட்டம் சந்தடியோய்ந்து அமைதியடைந்துவிட்டது.

அதைக்காண நாராயணனுக்கு வெறுப்பாயிருந்தது. அவன் ஆத்திரமடைந்தான் ''இத மொதல்லியே சொல்லியிருக்கணும் எல்லார்க்கிட்டியும். அதுதான் பெரிய மனுஷனுக்கு அழகு. அதவுட்டுப்புட்டு கமுக்கமா இருவது ரூவாய குடுத்து கையெழுத்து வாங்கிக்கினு இருக்கிறது; எவனாவது எதுத்துக் கேட்டா ஏதாவதொரு சாக்குச் சொல்றதுன்னா என்னா அர்த்தம்... இஷ்டப்பட்டவங்க கோயிலுக்குப் பணம் குடுத்துக்கட்டும். நான் பைசா தர மாட்டேன். எனக்குப் பூரா பணத்தியும் குடுத்துடுங்க! நாட்டுல உருப்படியா செய்யவேண்டிய வேல எவ்வளவோ

www.padippakam.com



கெடக்குது அத வுட்டுபுட்டு கோயில கட்டப் போறாங்க ளாம்; கோயில்'' என்று பொறுமினான்.

தலைவர் இந்த அதிகப் பிரசிங்கித்தனமான வார்த்தைகளைக் கேட்கச் சகிக்காதவராய் கொதிப் படைந்தார். அவனைக் கடித்துக் குதறிவிட வேண்டும் என்று உள்ளூர ஆவேசம் பொங்கினாலும் சந்தர்ப்பத்தை யும் சூழ்நிலையையும் பொறுத்துத் தன் ஆத்திரத்தை ஆழப் புதைத்து வைத்தார்.

கூட்டத்திலிருந்த யாரோ ஒரு வயோதிகர். ''என்னா தம்பி இது பெரிய மனுஷாள் கிட்டல்லாம் போயி விரோதம் வச்சிக்கினு... எல்லாரும் ஒத்துக்கும்போது நீ மட்டும்த கராறு பண்ணலாமா...கோயிலுக்குத்தான...'' என்று நாராயணனை சமாதானம் செய்தார்.

''நீங்க சும்மா இருங்க தாத்தா உங்களுக்கு ஒண்ணுந் தெரியாது...'' என்று அந்த வயோதிகருக்கு மதிப்பாக ஒரு வார்த்தையைச் சொல்லிவிட்டு ''கவர்மண்டுல வீடு கட்ட குடுத்தானா, கோயில் கட்ட குடுத்தானா?... எனக்கு இஷ்டமில்லேண்ணா என்னை ஏன் வற்புறுத்தணும்?'' என்று தலைவர் பக்கம் திரும்பி பொரிந்தான்.

'அப்ப ஊர்ப்பேச்சிக்கி ஒத்துப் போவ மாட்டியா நீ?'' என்றான் எவனோ.

''பெரிய ஊரு. தெரியாதாங் காட்டியும். அண்ணைக்கு போலீஸ் வந்து புடிச்சிம்போய் வச்சானுங் களே என்ன ஸ்டேஷன்ல, அண்ணிக்கி எத்தினிபேர் எனக்கு ஜாமீன் வந்து நின்னிங்க, இந்த ஊருலருந்து...'' என்றான் நாராயணன்.

''பணம் ஊருக்குதாண்டா வந்தது. உன் ஊட்டுக்கு மட்டும் வரல்ல''

''எம் ஊடு இந்த ஊருலதான் இருக்குது!''

www.padippakam.com



''இனிமே இருக்கக் கூடாது. பிச்சிக் கெடாசிப்புடு வம்...''

''பாப்பமே அதியும். என்னாடா தம்பி...''

பேச்சு பழையபடியே சூடேறுவதைக் கண்டு குடையால் தன் சகபாடிகளை அடக்கினார் தலைவர். பின்பு சிடு சிடுத்த குரலில் ''யோவ் கணக்கப்புள்ள நாம்பது ரூபாயும் அந்த நாய்கிட்ட உட்டு கெடாசுயா...தறுதல. அதுங்கிட்ட என்னா பேச்சி வேண்டிக் கெடக்குது. எவன்னா தல நரைச்சவங்கிட்ட சொன்னா ஒத்துக்குவான்... இதெல்லாம் அரடிக்கட்டு உட்டுத்தள்ளு... அந்த தெய்வமே அவனக் கவனிச்சிப்புடும்...'' என்று அர்த்தந் தொனிக்கக் காய்ந்தார் தலைவர்.

வள்ளி விலாஸ் டீ ஸ்டாலில் எப்போதுமே சாயங்கால நேரத்தில் கொஞ்சம் கூட்டம் அதிகமாகவே இருக்கும். இன்னும் வியாபாரம் களை கட்டவில்லை. முன் பக்கத்தில் மாஸ்டா டீ அடித்துக் கொண்டிருந்தான். உள் பக்கம் முதலாளி தோசை போட்டுக் கொண்டிருந்தான். கடையில் அதிகக் கூட்டமில்லை. நாராயணன் காலியாகக் கிடந்த ஒரு பெஞ்சில் அமர்ந்து அன்றைய பேப்பரைப் புரட்டிக் கொண்டிருந்தான். அவனது கண்கள் சிவந்திருந்தன. முகம் மரப்பேறியிருந்தது. அவனால் முடிந்த மட்டும் பட்டை சாராயத்தை நெட்டியிருந்தான்.

நாராயணனை கெட்டவன் என்றோ அயோக்கியன் என்றோ அந்த ஊரில் யாரும் சொல்ல மாட்டார்கள். சொல்ல நாக்கு வராது என்பதில்லை. அவனும் அப்படிப் பட்டவன் கிடையாது. ரொம்ப நல்லவன் என்றும் யாரும் சர்டிபிகேட் கொடுக்க மாட்டார்கள். ஆனால் ரொம்ப நேர்மையானவன்: நம்பிக்கையானவன் என்பதில் எல்லோருக்குமே ஏகோபித்த முடிவு. யாருக்கும் எந்தக் கெடுதலும் செய்யமாட்டான் என்பது மட்டுமல்ல.

படிப்பகம்

www.padippakam.com



அநாவசியமாகவும் எந்த வம்புக்கும் போக மாட்டான் என்பதும் எல்லோருக்கும் பிரசித்தம்.

அம்மா செத்த பிறகு நைனா வைத்திருந்த அரைக் காணியும் போகியத்திலே முழுகி பங்கன் பங்காளிகளுடைய ஆதரவை இழந்த நிலையில் ''போர்த்பாரம்', படித்துக் கொண்டிருந்த அவன் அதோடு படிப்புக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டு வேலைக்குப் போகத் தொடங்கினான். கூலி வேலை. உள்ளூரிலேயோ, அக்கம் பக்கத்து ஊர்களுக்கோ ஏர் ஓட்ட, கட்டு அடிக்க, அண்டை வெட்ட ஏதாவது வேலை. சம்பாத்தியம் வயிற்றுப் பாட்டை நிவர்த்தி செய்தது. சொந்தத்தில் குடிசை ஒன்று தான் மிச்சம்—களைத்து வந்து விழுந்தால் அசருவதற்கு.

படிப்பை நிறுத்திய கையோடுதான் குடிப் பழக்கம் அவனைப் பற்றிக் கொண்டது. குடித்து விட்டால் அவன் நிலை அவனுக்குத் தெரியாது. மங்கிய அந்தி ஒளி தேய்ந்தசாயங்கால இருளில் அவன் தெரு நெடுக ஏதாவது பிதற்றுவான். பெரிய இடத்து சமாசாரங்களை புட்டு வைப்பான், நைனாவை ஏமாற்றி நிலத்தைப் பிடுங்கிய மெத்தை வீட்டுக்காரர்களை வசைப்பாடுவான்! சில சமயங் களில் கிண்ணி நிறைய சோற்றுடன் தெருவுக்கு வந்து கத்துவான்.

''டாய்... இந்தத் தெருவுல சாப்பாடு இல்லாத ஊட்டுப் பசங்கல்லாம் ஓடியாங்க. இண்ணைக்கி ராத்திரி ஆரும் சாப்பாடு இல்லாத தூங்கக்கூடாது. சீக்கிரம் ஓடி யாங்க எனக்குத் தூக்கம் வரும்...''

யாராவது சிலர் கொஞ்சம் மனசு பச்சாதாபப்பட்டு, ''ஏண்டா இப்பிடி குடிச்சிட்டு அட்டகாசம்பண்ற?'' என்று கேட்டால் அவன் பெரிதாகச் சத்தம் போட்டுச் சிரிப்பான். 'போயா வேலைய பாத்துக்னு பெருசா புத்தி சொல்ல

www.padippakam.com



வந்துட்ட. நாட்டுல எவ்வளோ அக்ரமம் நடக்குது அந்த கேக்க எவனுக்கும் நாதியக் காணம், இப்ப நான் குடிக்கிற துல தான் எல்லாம் கெட்டுப் போச்சா?''

அதனால் அவனிடம் யாரும் அதிகம் நெருங்குவ தில்லை. அவன் இஷ்டத்திற்கு அவன் வாழ்ந்தான். அவன் அடிக்கடி சொல்வான்: ''நான் என்னா திருட றனா? இல்ல ஒருத்தம் பொண்டாட்டிய போய் கையப் புடிச்சி இழுக்கறனா?... குடிக்கறேன். அவ்வளவோ தான. நான் குடிக்கறதுனால ஆருக்கு என்னா நஷ்டம்? ஆருக்கும் எந்த கெடுதலும் கெடையாது; அப்புறம் எப்பிடி அத கெட்டபழக்கம்னு சொல்ல முடியும்,?''

ஆனால் அது போலீஸுக்குத் தெரியாது. ரெண்டு மூணு தடவை அவனைப் பிடித்துக்கொண்டு போனார்கள். வேலூர் ஜெயிலுக்கு அனுப்பினார்கள். வெளியே வந்த போதும் அவன் அதே உற்சாகத்துடன் தான் குடித்தான். ''இந்த மாதிரி, ஊர்ல இருந்த ஜனங்ககிட்ட மல்லு குடுத்துங் கெடக்கறதவுட பேசாம உள்ளியே இருக்கலாம். போலக்குது. சே! ஜெனங்களா இதுங்க?'' என்று அடுத்த க்ளாசை ஊற்றிக் கொள்வான்.

பத்திரிகையிலிருந்த ஏதோ ஒரு செய்தியைப் படித்து தனக்குள் முனகிக் கொண்டவாறே தலையாட்டிக் கொண்டான் அவன்.

''என்னாப்பா நாராயணா! காத்தால நாப்பது ரூவா வாங்கினியாமே?...'' என்று கேட்டபடியே பக்கத்தில் வந்து அமர்ந்தான் வீராசாமி. அவன் நாராயணனுடைய சகாக்களில் ஒருவன்.

''ஆமா, ஆமா...!'' பத்திரிக்கையிலிருந்து முகத்தைத் திருப்பாமலே பதில் கொடுத்தான் நாராயணன். ''இத்தக் குடுக்கறதுக்கேதான் மூக்கால அழறானுங்களே... என் னான்னா கத உடறானுங்கன்ற, எங்கிட்டியா நடக்கும்?

www.padippakam.com



உடுவனா?... கரெக்டா எண்ணி வாங்கிட்டேன். சண்ட போடாத கொறையா இல்ல வாங்க வேண்டிதா பூடுத்து. கோயில் கட்டப் போறானுங்களாம் கோயில்...''

''என்னாருந்தாலும் நீ சாமர்த்தியசாலிதாம்பா; எல்லாம் இருவதுஇருவததவாங்கியாந்து வச்சிகினு நடுவூட்ல குந்தி அழுதுக்னு இருக்கறானுங்க நீ மட்டும் சொளையா வாங்கியந்துட்டியே...'' என்று முகஸ்துதி செய்தபடியே ''ஒரு அஞ்சி ரூவா கைமாத்து குடேன். அப்பறமா தர்ரேன் வேலைக்கிப்போய்'' என்று கேட்டான் வீராசாமி.

அதைக் கேட்டதும், ''சரியான ஆளுடா நீ!'' என்று பேப்பரை மூடிப்போட்டுவிட்டு கட கட வென்று சிரித்தான் நாராயணன் ''என்ன வந்து கடங்கேட்டுக்னு... நான் ஆராருக்கு எவ்வளோவ்ளோ கடன் தரவேண்டிருக்குது தெரியுமா! அமெரிக்காவுக்கு 32 பைசா; இங்கிலாந்துக்கு 28 பைசா; ஜெர்மனிக்கு 16 பைசா; ஜப்பானுக்கு 11 பைசா. இப்பிடி வெளிநாட்டளவுலல்லாம் எவ்வளவோ கடன் வாங்கியிருக்கிறேன் தெரியுயா? என்னா முழிக் கற?... நம்ப நாடு பட்டுருக்கற கடனை நாம்ப ஒவ்வொருத் தருக்கும் பிரிச்சா இப்பிடிதான் வருதாம். எப்பிடி இருக்குது கத! லாபத்தியோ, இருக்கற சொத்து சொதந் தரத்தியோ எல்லா ஜனங்களுக்கும் பிரிச்சா என்னா வரும்னு எவனும் கணக்கு சொல்லல. கடன் காசை வரிக்கும் கரெக்டா பங்கு போட்டுட்டான். நல்ல பயித் தியக்காரப் பசங்கப்பா இவனுங்க!... ஜனங்கல்லாம் கஷ்டப்பட்டுத்தான் உழைக்கறாங்க? சௌகர்யமாவும் வாழல்ல, ஆனா நாடு மட்டும் கடங்காரனா இருக்குதாம் அப்ப எல்லாம் எங்க போச்சி? இதுதாம்யா இப்பத்திய நெலமெ. ரொம்ப விசித்திரமாயில்ல? சொன்னா கூடம் எவன்னா சிரிப்பான்?

''ஏம்பா ஒனக்கு எப்பவும் அரசியல்தானா... நான் கேட்டத உட்டுப்புட்டு...''

www.padippakam.com



"அட என்னடா பெரிய பணம்! அஞ்சுருவா தான... தர்ரேன்; சாவாத! ஆனா இந்த அரசியல் தாண்டா எல்லாத்துக்கும் காரணம் அரசியல் செரிப்படாம எந்த நாட்டுல ஜனங்கசொகம்மா வாழ்ந்து இருக்கிறாங்க சொல்லு?" என்று தொடங்கி சம்பந்தா சம்பந்தமில்லா மல் ஏதோ பேசிக்கொண்டிருந்தான். "ஆமா இப்ப நாட்டுல இருக்கற பெரிய பணக்காரனல்லாம் யோக்ய மான வழில சொத்து சேத்தவன்தான்னு நெனக்கிறியா? யோக்கியதன்னாலே சொத்து சேக்காமயிருக்கறதான் யோக்கியத. சேக்கறாருன்னாலே அங்கஅயோக்கியத்தனம் இருக்குதுன்னுதான் அர்த்தம்; தெரிஞ்சுக்கோ..."

தண்ணி மிதப்பில் இப்படி அவன் தொடர்வதைக் கண்ட வீராசாமி, செய்வதறியாமல் "அது சரி, நாட்டுல எவம்பா யோச்கிய மாயிருக்கான்'' என்று ஒத்துப் பாடி னான்.

"ஏண்டா நம்ப ஊர்லியே எடுத்துக் கோயேன், ஏழ பாழைங்கள அடிச்சிநெலத்தப் புடுங்கிக்கினவன், வட்டிக்கு உட்டுச் சம்பாரிச்சவன், பாண்டிச்சேரிலேர்ந்து திருட்டு சரக்கு எடுத்து வேபாரம் பண்ணவன் இவனல்லாம் தான் இண்ணைக்கு பெரிய மனுஷனா துண்டு போட்டுக்னு வராண்டா கண்ணு. ஜனங்க ரொம்ப நாளைக்கு ஏமாற மாட்டாங்க..." என்று உள்ளூரிலிருந்து மேல்மட்ட அரசியல் வரை சென்று வாய்க்கு வந்ததை கொட்டிக் கொண்டிருந்தான்.

விலாஸில் கூட்டம் சேர்ந்தது. வியாபாரம் களை கட்டிக்கொண்டிருந்தது. பக்கத்துப் பெஞ்சில் குந்தி சுடத் தோசை தின்று கொண்டிருந்த தாடிக்காரன் ஒருத்தன், "எவண்டா அவன்? வரட்டுத் தவளையாட்டம் வள வளன்னு கத்திக்னு... எழுந்து வெளிய போய்ப் பேசிங் கெடக்கறத்தான!" என்றான்.

www.padippakam.com



அவ்வளவுதான். நாராயணனுக்கு ஏறிவிட்டது. வேறு யாரவது இப்படி சொல்லியிருந்தால்கூட அவன் பொறுத்துக் கொண்டிருப்பான். சொன்னவன் சதா தலைவர் பின்னால் சுற்றுகிற சின்சாமி என்றதும் அவனுக்கு ஆவேசம் வந்துவிட்டது. கண்கள் மேலும் சிவந்தன, முகம் இறுகிப் பாறைபோல மாறியது. "டாய்! நான் எதுவேணும்னாலும் பேசுவேன். அது என் இஷ்டம். ஒனக்கு புடிக்கலன்னா தோசையத் தூக்கிக்கிம் போயி வெளில வச்சிக்னு துன்னு போ!" என்றான்.

பதிலுக்கு தாடிக்காரன் ஒன்று சொல்ல, இவன் ஒன்று சொல்ல வார்த்தைகள் முற்றிக்கொண்டன. நாராயணன் அதிக நேரம் பொறுக்கவில்லை... ரொம்ப ஆத்திரமடைந்தவனாய் வேட்டியைத் தூக்கி உள்ளே அரைக்கால் டிரௌசர் ஜேபியில் மடக்கிப் போட்டிருந்த பேனாக்கத்தியை நீக்கி தயார் பண்ணிக் கொண்டே மூர்க்கத்தனமாக தாடிக்காரனை நெருங்கினான்.

நல்ல வேளையாக வீராசாமி தடுத்து இழுக்கவே அசம்பாவிதம் ஒன்றும் நிகழவில்லை. "த்தா...னிமே வாயத்தொறந்த ஏத்திப்புடுவேன் ஏத்தி. ஜாக்கரத! அதுக்கல்லாம் பயந்தவன் இல்ல நானு! வேற எங்கனா போயி வச்சிக்கோ உன் வேலையெல்லாம்" வெறியோடு தள்ளாடியபடியே விலாஸைவிட்டு வெளியே வந்தான். கத்தியை மடக்கி பையில் போட்டுக் கொண்டு, ஜேபியில் கிடந்த கசங்கிப்போன சிகரெட் ஒன்றை எடுத்துக் கொளுத்திய படியே எதிர்த்தாற் போலிருந்த பார்பர் ஷாப்புக்குள் நுழைந்தான்,

"பேசாம இங்கியே குந்து. வீண்வம்புக்கெல்லாம் போவாத!" என்று அவனை சமாதானப்படுத்திக் குந்த வைத்துவிட்டு அஞ்சு ரூபாய் கிடைத்த நிம்மதியோடு நகர்ந்தான் வீராசாமி.

www.padippakam.com



கொஞ்ச நேரத்துக் கெல்லால் எவனோ ஒருத்தன் வந்தான். தின்றுகொண்டிருந்த தோசையை பாதியில் விட்டுவிட்டு வெளியே எழுந்து ஓடினானே தாடிக்காரன், அவனுடைய கைங்கரியம் தானோ என்னவோ! "தலைவர் உன்னக்கூப்பிட்டு வரச் சொன்னாரு'' என்றான்

"என்னாடா, எல்லாமா சேந்துக்னு என்னுமோ பூச்சி ராட்டிக்னுகிறீங்க எங்க கிட்ட. ஐயா இந்த எடத்த உட்டுய அசைமாட்டாரு. வேணும்னா ஒங்க தலைவர இங்கவந்து பாக்கச் சொல்லு''

இதை அவன் அப்படியே தலைவரிடம் போய் ஒப்பு வித்திருக்க வேண்டும். தலைவரே புறப்பட்டு வந்து கொண்டிருந்தார். பின்னாலேயே அந்தத் தாடிக்காரனும் சகாக்களும்.

யாருக்கோ மீசை வெட்டிக் கொண்டிருந்த பார்பர், ஸ்டூலில் கால்மேல் கால்போட்டு அமர்ந்து அமரிக்கையாக சிகரெட் குடித்துக் கொண்டிருக்கும் நாராயணனைப் பார்த்து எச்சரிக்கை கொடுக்கும் குரலில் "தலைவர் வர்றாரு" என்னான்.

"அடாட! வந்தா வரட்டுமே... வந்தா இங்க ஆருக் குன்னா என்னா கூவுதா? அவரு மண்ணுல கட போட் டிருந்தா நீ அவருக்கு பயப்படணும்... நாம் புடிக்கற சிகரெட்டுக்கு அவரா எனக்கு காசி குடுக்கறாரு...'' என்று அலட்சியமாகச் சொல்லிவிட்டு இன்னொரு தம் இழுத்து ஸ்வாரஸ்யமாகப் புகையை விட்டான்.

"நாராயணா ...!'' தலைவர் வெளியே நின்றபடி கர்ஜித்தார்.

உட்கார்ந்த இடத்தைவிட்டு அசையாமல், காலையும் கீழே போடாமல் தலையை மட்டும் உயர்த்தி "என்ன?" என்று கேட்கிற பாவனையில் அவரைப் பார்த்தான் நாராயணன்.

படிப்பகம்

www.padippakam.com



"என்னா உம்பாடு வரவர ரொம்ப துளுர் உட்டுக்னு போவுது, ஓட்டல் கடையிலெல்லாம் குந்திக்னு நம்பளப் பத்தி மானக் கொறவாய் பேசறியாமே"

நாராயணன் வேகமாய் எழுந்து அவரை நெருங்கினான். "யோவ்! உன்னப்பத்தி எவென்ய்யா இங்க பேச ஒடியாறான். பொதுவா ஊர்நெலமயப்பத்தி நான் பேசறேன். நீயே சொல்லு; இப்ப நம்ம ஊருல இருக்கிற பெரிய மனுஷன்ல யோக்கியமானவன் எவன்யா இருக்கிறான், ஆரு இருக்கிறான் சொல்லு? நீயே இந்த ஊருக்கு தலைவரா வர்ரத்துக்கு மின்ன என்னா வேபாரா பண்ணிக்கினுருந்த..." அவன் என்னப் பேசுகிறோம் என்று உணராமலேயே பேசிக் கொண்டிருந்தான்.

தலைவருக்குப் பின்னாலிருந்தவர்கள், நாராயணன் மேல் கைவைக்க சமயம் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"டாய்! எங்க தலைவரைப்பத்தி எதுனா பேசன... எலும்ப நொறுக்கிப் புடுவேன். ஜாக்கிரத!" என்றான் ஒருத்தன்.

"சும்மா நிறுத்துடா! சரிதான்! எத்தினிப் பேர பாத்துருப்பேன் இந்தமாதிரி" என்றான் நாராயணன்.

அவன் எலும்பை நொறுக்க தலைவருக்கும் ஆசை தான். ஆனால் இப்படிப்பட்டப் பகலில் நாலுபேருக்கு மத்தியில் அல்ல. உள்ளே வேக்காடும் ஆவேசமும் 'அவனை என்ன செய்யலாம்?' என்ற யோசனைக்கு எரு விட்டது. தன் சகபாடிகளைத் தடுத்து நிறுத்தி, தூர நின்ற வேடிக்கை பார்க்கும் ஜனங்களின் காதுகளில் விழுகிற மாதிரி அவர் ரொம்பப் பெரும் போக்காகச் சொன்னார்.

"பாவம் கெடக்கறான் உட்டுத் தள்ளுங்க; சின்ன பையன். அப்படிதான் கெடப்பான். வெவரம் தெரியாம

www.padippakam.com



குடிவெறில எதுவோ பேசறான். எத்தனா பேசிக்னு போவட்டும் ஒண்ணும் கண்டுக்காதீங்க. தெளிஞ்சா எல்லாம் செரியாயிடும்'' என்ற கண்யமான வார்த்தை களுக்கு கீழே கனன்று கொண்டிருக்கும் உணர்வுகளோடு அவர் நகர்ந்தார்.

பக்கத்தில் இரண்டு கல் தொலைவிலிருக்கும் கூட்டேரிப் பட்டு டூரிங் டார்கீஸில் கூட்டம் நிரம்பி விழிந்தது. தரை டிக்கெட்டுக்காரர்கள் நெக்கியடித்துக் கொண்டு நின்றிருந்தார்கள். முதலாட்டம் இன்னும் விடவில்லை. இன்னும் கொஞ்ச நேரத்தில் விட்டு விடுவான். நாராயணன் எதிர்த்தாற்போலிருந்த புளிய மரத்து வேரில் தலையைச் சாய்த்துக் குந்தியிருந்தான். கம்மலான வெளிச்சத்தில் சிகரெட் புகை முகத்தில் சூழ கண்கள் சொக்க உட்கார்ந்து கொண்டிருந்தான். அவனைப் பொறுத்த வரைக்கும் தலைவரோடு வாக்கு வாதம் பண்ணியதெல்லாம் ரொம்ப சாதாரண நிகழ்ச்சிகளே! ''ஒரு நயா பைசாவியும் ஒரு உண்மெயெயும் தலைக்காணி கிழ வச்சிக்கினு என்னால தூங்க முடியாது'' என்று அடிக்கடி சொல்கிறவன். எல்லாவற்றையும் மறந்திருந் தான்.

ஆட்டம் விட்டார்கள். அக்கம் பக்கத்துக் கிராமங் களிலிருந் வந்நு குழுமியிருந்த கூட்டம் தன்னை ஆசுவாசப் வாசப் படுத்திக் கொண்டே வெளியே வந்தது. மன்னாதன்கூட வந்திருந்தான். நாராயணனைப் பார்த்து ''என்னாபா இங்க குந்திங் கெடக்கற இருட்டுல?'' என்றான்.

''சினிமாவுக்குத்தான். வர்ரீயா?'' என்றான் நாராயணன்.

''இல்ல; இப்பதான் பாத்துட்டு வர்றேன் - மொத லாட்டம்'' என்றான் மன்னாதன். ''என்னா காத்தால

www.padippakam.com



உடல போலருக் குது ஆவ. தலைவர் தெவுச்சிபோயிட்டா ராமே! இருந்தாலும் உன்னாட்டம் இருக்கணும்பா: சுத்தமா நாப்பது ருவாயும் எண்ணியில்ல வாங்கியாந் துட்டா!''

''ஆமா போயேன், பெரிய பணம்! வாங்கனபொழு துக்கு பாதி பணம் செலவாயிடுத்து. என்னா தெனமா குடுக்கப் போறானுங்க...''

''என்னபா செலவு பண்ணிட்ட அதுக்குள்ள...''

''சாராயந்தான்...எல்லாம் கும்ப கூடிக்னு இண்ணிக்கு நீதாண்டா எல்லாருக்கும் வாங்கிக் குடுக்கணும்னு ரேக் கேத்தி உட்டானுங்க...போயேன். வச்சிருந்துதான் என்னா பண்ணப் போறேன்!''

''எனக்கு ஒண்ணுங்கெடையாதா...?''

தமாஷாகத்தான் கேட்டான் மன்னாதன். ஆனால் அதற்கு நாராயணன் ''வர்ரத்தான நீயும்; ஆரு வாணன் னது'' என்று சொல்லி மடியிலிருந்து ரெண்டு ரூபாயை அவிழ்த்துக் கொடுத்தான். ''இந்தா போவும்போது போட்டுக்னு போயேன்.''

''ம்...வாணா...வாணா சும்மா கேட்டேன்''

''அட, கேட்டுப்புட்டு அப்புறம் என்னாபா சும்மா. வச்சிக்கோ பரவால்ல...''

ஆனால் மன்னாதன் வாங்கவில்லை. ''அதல்லாம் வாணம்பா. காசா குடுக்கற வேலல்லாம் வாணாம். நாளைக்கு நீயே வேணா வந்து வாங்கிக்குடு.''

''சினிமாவுக்குதான் வாயேன். இன்னுருதாட்டி தான் பாத்துட்டு ரெண்டு பேருமா சேர்ந்தே போறது பேசிக்னே...''

www.padippakam.com



''வேணா். நா வேலைக்கு போவணும் நாளெக்கி ஊட்டுக்குப் போறேன். தூக்கம் வருது...நீ பாத்துட்டு பத்தரமா வந்துசேரு'' என்று சொல்லிப் புறப்பட்டு விட்டான் மன்னாதன். ''பாவம். நல்ல பையன்! கட்வாளம் இல்லாம இப்படி கெட்டு அலையிது...''

நாராயணன் தள்ளாடிக் கொண்டே எழுந்தான். மெல்ல நடந்துசென்று, பெஞ்சி டிக்கட் ஒன்றை வாங்கிக் கொண்டு உள்ளே நுழைந்தான். காலியாகக் கிடந்த பெஞ்சின்மேல், தலையிலிருந்த முண்டாசை அவிழ்த்துப் போட்டு உதறி காலை நீட்டிப்படுத்து விட்டான். டாக்கீஸில் என்ன படம் என்பதைப் பற்றி அவனுக்கு அக்கறையில்லை. திரையில் என்ன ஓடியது என்பதும் அவனுக்குத் தெரியாது. படுத்தவன் அப்படியே அசந்து தூங்கிவிட்டான். எவ்வளவு நேரம் தூங்கினானோ... கொட்டகைக் காவல்காரன் வந்து எழுப்பும் போதுதான் அவனுக்குத் தெரிந்தது. அவனுக்குக் கண்கள் எரிச்சல் எடுத்தன. திரும்பவும் படுத்துக்கொள்ள வேண்டும் போல் தோன்றியது. அங்கே, தான் மட்டுமே தனியா யிருப்பதை உணர்ந்தான் அவன்.

''ஆட்டம் உட்டு எவ்வளோ நேரம் ஆவுது?...'' என்று கேட்டான்.

''இப்பதான் கொஞ்ச நேரம் ஆவுது...''

''எல்லாம் போயிட்டாங்க போலக்குது''

அவன் தனக்குள் முனகிக் கொண்டே வெளியே வந்தான். கைகால்களெல்லாம் அடித்துப் போட்டாற் போல வலி தோன்றியது. பசி வயிற்றைக் கிள்ளியது. அவன் அசதியோடு நடந்தான். ஏதாவது சாப்பிடலாம் என்று அவன் சுற்றுமுற்றும் பார்த்தபோது எதுவும் இல்லை. கடையை ஏறக் கட்டிக் கொண்டிருந்தார்கள். வறண்டுபோன ஒரு பன்னையும் ரெண்டு கிளாஸ் பச்சத்

www.padippakam.com



தண்ணியையும் வாங்கி தொண்டையை நனைத்துக் கொண்ட பிறகு ஓரளவு இதமாக இருந்தது. மயக்கம் கூட கொஞ்சம் தெளிந்ததுபோல் தோன்றியது.

அவன் மெல்ல தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு ஊரை நோக்கி நடந்தான். கப்பி ரஸ்தாவை கரிய இருள் மறைத்துக் கிடந்தது. அக்கப் பக்கத்திலும் ஜன சந்தடி யென்பதையே காணோம். எல்லோரும் முன்னே ரொம்ப தூரம் போய்விட்டிருப்பார்களோ என்று நினைத்துக் கொண்டான். மொட்டு மொட்டு என்று தன்னந்தனிய னாக அவன் மட்டும் அந்தரஸ்தாவிலே நடந்தான்.

முன்னே கனத்த இருள் நீண்டு கிடந்தது. பழக்க வாசனையால் ரஸ்தாவின் தடம் மட்டும் மங்கித் தெரிந்தது. அவன் சரியான வழியிலேயே நடந்தான். அன்றைய சம்பவங்கள் அவனுக்குள் ஒரு கனவுபோல் தோன்றின. பணம் வந்ததும் போனதும்கூட கனவுதான்! ஏழோ எட்டோ மீதியிருக்கிறது. பாராபூர் ரெட்டியார் மறுநாள் அவனை ஏருக்கு ஆள் கூப்பிட்டிருந்தது ஞாபகத் துக்கு வந்தது. போக வேண்டும் என்று சொல்லிக் கொண்டான்.

ஊர் ஜனங்கள் தன்னைப் பற்றி என்ன நினைத்திருப் பார்கள் என்று நினைத்தான். ரொம்ப இருமாப்புக் காரன், கட்டுக்கு அடங்காதவன் என்றெல்லாம்கூட நினைத்திருப்பார்கள். எப்படியோ நினைத்துப் போகட்டும்...

அன்றைய சம்பவங்களில் அதுமாதிரியில்லாமல் வேறு மாதிரி தன்னால் நடந்து கொண்டிருக்க முடியுமா என்று யோசனை செய்தான். முடியாது என்று தோன்றியது. தான் சரியாகவே நடப்பதாகவும், தான் நடந்து கொள்வ தெல்லாம் சரியே என்றும் உணர்ந்தபோது அவனுக்கு நிம்மதி ஏற்பட்டது.

த—5

www.padippakam.com



ஆனால் 'இந்தத் தலைவர் பையன் ஏன் இப்படி ஊரை ஏமாத்திக் கொள்ள அடிக்கணும்' என்று கேட்டுக் கொண்டான். பிறகு அவருக்காக அனுதாபப்பட்டான். 'பாவம் நான் கேட்டதுமே அவன் மூஞ்சி கருத்துப்போச்சி இல்ல...அசிங்கமாயிருந்திருக்காதா பின்ன...அத்தினிபேர் மத்தில நான் மட்டும் ஒத்துக்கலண்ணா ரோஷம் பொத்துக்னு வந்திருக்காது அவனுக்கு அவனும் மனுஷன் தான...;

ஆனால் அந்த அநுதாபத்திற்கு அர்த்தமில்லாமல் போய்விட்டது. ஊரை நெருங்கி வரும் நிம்மதியில் எப்போது வீட்டில் போய்விழுவோம் என்ற ஆவேசத்தில் நடையின் சோர்வைத் கடித்து வேகத்தைக் கூட்டி நடந் தான் அவன். ரஸ்தாவை ஒட்டி நின்ற ஒற்றைப் புளிய மரத்தடியில் அவன் சற்றும் எதிர்பாராத சம்பவமொன்று அவனுக்காகக் காத்து நிற்பதை உணராமலேயே நடந் தான். மரத்தை நெருங்க மறைவிலிருந்து கையில் தடி களுடன் யாரோ நாலைந்து தடியன்கள் திடுதிப்பென்று ஓடிவந்து வழியை மறித்தார்கள்.

அவன் அதிர்ச்சியில் நிலைகுலைந்து நின்றான். பேனாக்கத்தியை எடுப்பதற்குக்கூட அவகாசமில்லை, என்ன ஏது என்று விபரம் புரியாமல் ஒண்டியாகவும் சமாளிக்க முடியாமல் அவன் தடுமாறிக் கொண்டிருக்கும் போதே அவன் மேல் சாரமாரியான அடிகள் கண் மண் தெரியாமல் விழுந்தன.

எங்கோ ஒரு நரி ஊளையிட்டது. தலைவர் மாரி முத்துக் கவுண்டர் தன் நெஞ்சின் அடியாழத்தில் புதைத்து வைத்திருந்த ஆத்திரம் வெடித்து அடங்கியது.

அவன் கீழே சாய்ந்தான். கனத்த காலொன்று கழுத்தை மிதித்துவிட்டு நழுவியது. தொடர்ந்து விடு

www.padippakam.com



விடுவென நடந்த காலடி சத்தங்கள் இருளின் அந்த காரத்தில் தொலைதூரத்தில் மறைந்தன.

அவனிடமிருந்து லேசான முனகல் மட்டுமே வெளிப்பட்டது. அதுவும் தேய்ந்து கரைந்துகொண்டே வந்து இரவின் நிசப்தத்தில் கலந்தது. அவன் குப்புற விழுந்து கிடந்தான். தலை நட்டுக் கொண்டிருந்தது. மண்டையிலிருந்து ஒழுகிய ரத்தம் மண்ணில் உறைய கண்டு கண்டாக வீங்கிய உடம்புடன், அந்த மண்ணைப் பிரியத்தோடே கட்டி அணைக்க முயன்றவனைப் போல் கரங்களைப் போட்டுக் கிடந்தான் அவன்.

அவனைமட்டும் தனியே ஏந்தி மௌனம் காத்த ரஸ்தா விடிவை எதிர்பார்த்துக் காத்துக் கிடந்தது.

பொழுது விடிய பெரிய கூட்டமே கூடியது. ஆனால் விசித்திரம் ஒன்றும் நிகழ்ந்து விடவில்லை.

அந்த ஊரிலே போலீஸ் ஸ்டேஷன் இருந்தது. ஆனால் அது யாருக்காகவோ...

அதைவிட அதிசயம், நாராயணனை ஒற்றைப் புளிய மரத்துமினீஸ்வரன் அறைந்து விட்டது என்றோ, கோயிலுக்கு காசு தரமாட்டேன் என்றதால் மாரியாத்தாள் பாவம் அவனை பழிதீர்த்து விட்டது என்றோ ஊர் மக்கள் பேசிக்கொண்டதுதான். □

செம்மலர் □ செப்டம்பர் 71 □

www.padippakam.com

# பொழுதுகள்

எட்டுக் கோடு. சத்திரத்துத் திண்ணை. நான்கு உருவங்கள் குத்துக்கால் போட்டு உட்கார்ந்து குனிந்திருக்கின்றன. தலைக்கட்டும், முண்டாசும், காதில் துண்டு பீடியும். முண்டா பனியனும், கருப்பு உடம்பில் வெறும் அழுக்கு சோமனும், அக்குளில் துண்டும். வத்தல் மார்பும் கூம்பிய தோள்களும் அரைக்கால் டிரௌசருடன் பரட்டை மீசையுமாக விதத்துக்கொன்று. காய்கள் நகர்கின்றன. கொட்டைகள் புரள்கின்றன. புளியங் கொட்டைகள், தேய்த்த புளியங் கொட்டைகள்.

"ஓர்ரெண்டு. மூணு—ஒண்ணு ரெண்டு மூணு."

"ஒரு மூணு, ஒண்ணு ஒண்ணு.

"நாலி போடுயா..."

"ஒலி நாலி. ரெண்டு-ஒண்ணு, ரெண்டு,"

"ஒரு எட்டு, மூணு, சே. என்னா எங்கை தொவியவே தொவியாதா."

நாமக்கட்டியால் கிழித்த வெள்ளைக் கோடுகள். கட்டங்களில் ஓட்டாங்கச்சிகள். செங்காமுட்டித் துணுக்குகள் தெரிகின்றன. வெளுப்பு வெய்யில் சூடேறி வருகிறது. எதிரே அரசமரத்திலிருந்து, வேப்ப மரத்திலிருந்து காற்று வருகிறது. நல்ல காற்று நல்ல நிழல். குளுகுளுவென்று.

படிப்பகம்

www.padippakam.com



படுத்தால் தூக்கம் தானாக வரும். சிலதுகள் அனுபவிக்கின்றன. கொட்டைகள் உருளுகின்றன.

"ஒரு மூணு, நாலி - நாலிம் பத்தாது, ரெண்டு, ஒரு நாலிக்கி, இது ரெண்டுக்கு."

"ஒரு எட்டு. மூணு."

"ஓர் ரெண்டு. ஒண்ணு"

"ஒரு நாலி. மூணு. ஒண்ணு ரெண்டு மூணு."

"ஒரு எட்டு. ரெண்டு"

"சீக்கிரம் தொவியா. என்னுமோ ரெண்டு ரெண்டுன்னு நொண்டற."

எதிரே கடைத்தெரு. ஹைஸ்கூல் பசங்கள் பள்ளிக்கூடம் போகின்றனர். வெளுப்பு உடைகள். வண்ணங்கள் சலவை மடிப்புகள். கசங்கல்கள். சுறுசுறுப்பான நடைகள். மலர்ச்சியான முகங்கள். சோம்பல் நடைகள். மந்தங்கள். தொடையோடு தொங்கவிட்ட கைகளில் புஸ்தகங்களை இடுக்கி அணைத்துக் கொண்டு போகிறார்கள். தாவணி போட்டு மூடிய நெஞ்சில் வைத்து அழுத்திக் கொண்டு போகிறார்கள். காய்கள் நகர்கின்றன.

"ஒரு நாலி. ஒண்ணு. ஒண்ணு."

"வெட்டாட்டம் போடுயா."

"இந்த ஒண்டி பத்தாது. ரெண்டு. ஒண்ணு. ரெண்டு."

ஒரு எட்டு. ப்ச்சங், மூணு.

"ஒரு துளியன். மூணு."

www.padippakam.com



"கொட்டைய நல்லா தேய்பா. வெறும் மூணு மூணாவே உழுது."

மரத்தடியில் கிழம் ஒன்று. வேப்ப மரத்தடி. நொடிந்த தேகம். பஞ்சடைந்த கண்கள். ஊற வைத்த தேங்காய் மட்டைகளை கையிலிருந்த மரக் கட்டையால் கருங்கல்லில் வைத்து அடிக்கிறது அடித்து, அடித்து பஞ்சாக்குகிறது. வெண்பழுப்பான பஞ்சு. ஒரு விதமான நாற்றம். வீசுகிறது. மக்கல் நாற்றம். அழுகல் மட்டை. முகத்தை புறங்கையால் வழித்து விட்டுக் கொண்டு அடிக் கிறது. நிதானமாகவும், சீராகவும் அகற்காகவே தயார் செய்யப்பட்டது போன்ற தான இயக்கம். கொட்டைகள் புரள்கின்றன.

"மூணு போடு"

"ஒரு மூணு. நாலி."

"கையாட்டம்..."

"ஒரு மூணு. ரெண்டு"

"ஒரு நாலி. மூணு."

"ஒரு நாலி. ஒண்ணு"

"அந்த ஒண்ணு இந்தக்கையில. ரெண்டு"

,'டேய் ஒரு அஞ்சி பைசா பீடி வாங்கியாட"

தெருவில் ரிஜிஸ்தராபீஸ் கிளார்க்குகள். ஹைஸ் கூல் வாத்தியார்கள். யூனியன் ஆபீஸ் குமாஸ்தாக்கள். அட்டண்டர்கள் டூட்டிக்குப் போகிறார்கள், கடைகளில் ஜனங்கள் சுழல்கிறார்கள், சுழன்று, சுழன்று வலம் வருகி றார்கள். கடைக்குக் கடை யோசனையோடு நிற்கிறார்கள்.

"நீ எப்பத்தான் தொலியுவியோ. போயா"

www.padippakam.com



''சும்மா இருய்யா. ஒரு நாலி. மூணு.''

"நீ சொல்லாத, அதுவா உழும்''

''இப்ப நான் சொன்னதுலதான் கெட்டுப்போச்சா நீ ஒரு மூணு போடேன்.''

''போடும் போது எதுவும் சொல்லாத''

''ஒரெட்டு. ஒண்டி ஒண்டிக்கி''

''ஒரு மூணு. மூணு. அப்பாடா ஒண்ணு ரெண்டு மூணு.

"வெட்டாட்டம்''

ஒரு எட்டு. மூணு,''

காய்கள் நகர்கின்றன. புளியங்கொட்டைகள் நகர்த்துகின்றன. வேப்ப மரத்து நிழலில் வயசுப் பெண்கள் நாலுபேர். அக்குளில் பஞ்சுச்சுருணை. தேங்காய்ப் பஞ்சு. கயிறு திரிக்கிறார்கள். ஒரு கையால் சுருணையை அடக்கி, ஒரு கையால் திரித்து சரிப்படுத்தி சீராக விட்டுக்கொண்டே பின்னால் நகர்கிறார்கள் முன்னால் மிஷின் கிற்றுகிறது. முருக்கேற்றுகிற மிஷின். குழி விழுந்த கண்களுடன் வயிறு ஒட்டிய பையன் ஒருவன் சுற்றுகிறான். பஞ்சு பிரியாகிறது. கை மிஷின். நிறுத்தி நிறுத்தி சுற்றுகிறது.

''ஒரு மூணு ரெண்டு. ரெண்டு."

"ஓர் ரெண்டு. நாலு நாலும் பத்தாது." மூணு.

"யோவ் ரவ வத்திப் பெட்டி போடுயா."

"என் ஜெயிச்சியே வாங்கியாரச் சொல்றத்தான."

"போடுயா. ஒரு வத்திகுச்சிக்கு போயி பேசற. பெரிய காசி. எட்டணா காசி ஜயிக்சிப்புட்டனே போதாதா."

www.padippakam.com



பெட்டி கைமாறுகிறது. வத்திப்பெட்டி. குச்சி உரசுகிறது. நெருப்பு ஜ்வாலை. பீடி நெருப்பு. புகை தலைகளில் கவிழ்கிறது. ரெண்டு தம் இழுத்துவிட்டு தரையில் ஒரு தேய்ப்பு. மீதி காதில் குடியேறுகிறது.

''யோவ் ஒரு பீடி இருந்தா குடுயா''

''ஏது. இதான்''

''குடுயா இருக்கட்டும்''

''சத்தியமா உட்டன்னு. ஏது ஒனக்குத் தெரியாத''

''ஒரு எட்டு. எட்டு எட்டோடக் கூட நாலி. நாலிம் பத்தாது. ரெண்டு...''

''யோவ் காதுலகிறதான் போடுயா''

''சரியான ஆளுயா நீ. பேசாமரு.''

அரச மரத்தடியில் பட்டறை இயங்குகிறது, கருமாரப்பட்டரை. ஒலகடம், பழுக்கக் காயச்சிய இரும்புகள். இரும்பு கனல்கிறது. சிவப்புக்கனல். கடப்பாரைகளும், கொடுவாள் கத்திகளும் அரிவாள்களும் இறைந்து கிடக்கின்றன. சுற்றிலும் பரவலாய் நிற்கிறர்கள். கருமான் இடுக்கியால் கடப்பாரை முனையைப் பிடித்து தூக்கிப்பார்க்கிறான், கிழிந்த சாக்கால் சூடு படாமல் பிடித்து புரட்டிக் கொடுத்து வெளியே எடுக்கிறான். வியர்வை வழியும் கறுத்த உடம்போடு காத்திருந்தவன் கைகளை உயரே தூக்குகிறான். ணங்... ணங்... சம்மட்டி அடி சீராய் விழுகிறது. ணங், ணங், காய்கள் நகர்கின்றன.

''ஒரு மூணு, நாலி'' - ''நாலி பத்தாது, நாலி'' - இரு நாலிம் பத்தது, ரெண்டு.''

''ஒரு மூணு. ரெண்டு.''

''ஒரு நாலி. நாலி. இது நாலிக்கி''

www.padippakam.com



"காயிருக்கும் போது என்னா தொவியாத வெட்டற"

"எங்க கிது காயி."

',ஏன் ஒண்ணு இல்லியா. தோ கீதேயென்னா"

"பச்ச்ங்..."

சாலையில் பஸ் ஓடுகிறது. கார் ஓடுகிறது. யார் யாரோ இறங்குகிறார்கள். ஏறுகிறார்கள். போகிறார்கள் ஸ்கூல் மணி அடிக்கிறது. ஒண்ணுக்கு மணி, கோவில் மணி அடிக்கிறது. ஆறுகால பூஜை. டாண் டாண் என்று அதிர்கிறது. பசங்கள் ஈசலாய் வருகிறார்கள். ஐஸ்காரன், மாங்காய், மசாலா, மிட்டாய் வண்டிக் காரனைச் சூழ்கிறார்கள். ஈக்களாய் மொய்க்கிறார்கள். கொட்டைகள் புரள்கின்றன.

"ஒரு எட்டு. ரெண்டு... ஒண்ணு..."

"ஏம்பா நாமகட்டியெடுத்து கோட்ட நல்லா கிழிபா."

"ஏன்? கண்ணு அதுக்குள்ள பொட்டையா போச்சா"

"சும்மார்ரங்கக் கூ கோடெல்லாம் கலஞ்சி போயி கட்டமே செரியா தெரியலன்னு சொன்னா"

"கொட்டைய கூடம் கொஞ்சம் தேயிபா அப்டியே"

பக்கத்தில் டீக்கடை. ரேடியோ பாடுகிறது. கடையில் கிளாஸ்கள் ப்ளேட்டுகள் கழுவுகிற சத்தம். சளசளப்புகள். புண்ணாக்கு மாதிரி புரட்டிய துணியுடன் பையன் ஒரு வன் கழுவுகிறான். ஒரு பத்து பன்னிரெண்டு வயசுப் பையன். எச்சில் கிளாஸ்கள். எச்சில் ப்ளேட்டுகள். பாட்டி ஒருத்தி. ரொம்ப வயசாகிப்போன பாட்டி. முக்கில் கண்ணாடி போட்டு அக்குளில் மூங்கில் பிளாச்சுக்த் கதைகளுடன் மரத்தடிக்கு வருகிறாள். முறம் பின்னுகிற பாட்டி. நிழலில் மூங்கில் கத்தையைப் போட்டு, காலை நீட்டிப்போட்டு வாகாய் அமர்கிறாள். கத்தையை அவிழ் கிறாள்.

www.padippakam.com



',ஒரு மூணு ஒண்ணு ரெண்டு மூணு''

''ஏன் பழம் பூறலியா''

''இருக்கட்டும். இந்தக் காயும் கொண்ணாந்துடுவம்.''

''ஒரு நாலி. ஒண்ணு.''

''ஒரு மூணு. எட்டு, எட்டோடக்கூட மறுவெட்டு. ரெண்டெட்டும் பத்தாது. ஒண்ணு.''

நேரம் ஓடுகிறது. பஸ் ஓடுகிறது. உச்சி வருகிறது. பள்ளிக்கூட மணி அடிக்கிறார்கள். பசங்கள் திரும்பு கின்றன. சாப்பாட்டுக்குப் போகின்றன. படித்துச் சோர்ந்த விழிகள். பசித்த வயிறுகள். வேகவேகமாக் காலடிவைத்து நடந்து போகிறார்கள். கொட்டைகள் உருள்கின்றன. காய்கள் நகர்கின்றன. உருண்டு உருண்டு நகர்த்துகின் .

',ஒரு எட்டு. மூணு.''

''ஒரு ரெண்டு போட்றா.''

''ஓர் ரெண்டு. நாலி''

''நாலி வேணாம். ரெண்டு மூணு''

''இன்னம் நம்ப வெட்டலியா''

''ஏன் ஒரு பழம் போச்சே என்னா.''

''ஆமா நெனப்போயில்ல''

''நீ எங்கடா ஆட்டத்த பாத்து போட்டாதான். எவனோ போடறான் காசின்னு ஆடனா...''

''எப்பா. அம்மா கூப்டாரச் சொல்லிச்சி''

''தோ வர்ரம் போ.''

''கையோட இட்டுக்னு வரச் சொல்லிச்சின்னா''

',# போ. கசுமாலம்''

''ஒரு மூணு, ரெண்டு, ஒண்ணு ரெண்டு.''

www.padippakam.com



"ஐய..."

"இப்ப ஓதைக்கறேன் பாரேன் இப்ப"

பசங்கள் சாப்பிட்டுத் திரும்புகிறார்கள். பள்ளிக் கூடப் பசங்கள். பள்ளிக்கூடம் போகிறார்கள். திரும்பவும் பள்ளிக்கூடம். திரும்பவும் படிப்பு. எல்லோரும் போகி றார்கள். ஆபீஸ் உத்தியோகஸ்தர்கள் எதிர் கொள் கிறார்கள். வீட்டுக்குப் போகிறார்கள். சாப்பாட்டுக்குப் போகிறார்கள். எவளோ புதுசாய் ஒருத்தி. பிச்சைக்காரி• தள்ளாடியபடியே நிழலுக்கு ஒதுங்குகிறாள். அப்பாடா! களைப்பு. திண்ணையை நெருங்குகிறாள். ஏறி முடங்கு கிறாள்.

"நாலணா போடுயா மீதி"

"ஏது சில்ற"

"இப்ப போனாட்டங் குடுத்தேனே என்னாயா! அதுங் காட்டியும் எங்க எடுத்து முடிஞ்சிக்ன."

"ஏது. தோ குடுத்தியே நேரு துட்டு இதான் எட்டணா"

"காந்தி துட்டு ஒண்ணு இல்ல"

',ஏதுயா நீ வேற ஒண்ணு. வச்சிக்னா புளுவரேன்"

"சரி மாத்யாரச் சொல்லு"

"இருயா அப்புறமா வாங்குகிக்வ. பொழுதாக ஒரு கிளாஸ் சாராயத்துக்கு ஆவட்டுமேன்னு வைச்சிருந்தா"

"மாத்தியாரச் சொல்லுடா மொதல்ல. நீ என்னா போட்ட"

',ஒரு மூணு. ரெண்டு."

"ஒரு ரெண்டு. மூணு ஒண்ணு ரெண்டு மூணு."

டீக்கடை பக்கத்தில் சோடாக்கடை. கடையில் சரக்கு பிடிக்கிறார்கள். கோலிபாட்டில் சரக்குகள்

www.padippakam.com



பாட்டில்கள் சுழல்கின்றன. கோலிகள் உருள்கின்றன. சளுக், சளுக், சளுக், 'ஸ்...கேஸ் ஏறுகிறது. பாட்டில்களை மரப்பெட்டிகளில் போட்டு அடுக்குகிற சத்தம் கேட்கிறது. லொட்டு லொட்டென்று. சரக்கு பிடிப்பவன் சீராய் சுற்றுகிறான். சுற்றி சுற்றி எழுந்து வந்து அடுக்குகிறான்.

"எட்டு, எட்டோடக்கூட ரெண்டெட்டு."

"ரெண்டெட்டும் பத்தாது"

"ரெண்டெட்டு ஒரு நாலி. நாலி"

"ரெண்டெட்டு ரெண்டு நாலி, ரெண்டு"

"இது நாலிக்கி, இது எட்டுக்கு. இது மறு எட்டு மறு நாலிக்கு. கையாட்டம் என்னா. ரெண்டா. இது ரெண்டுக்கு"

"வெட்டாட்டம்..."

"கொண்டா. ஒரு நாலி மூணு"

"ஒரு ரெண்டு. நாலி. நாலி பத்தாது ஒண்ணு"

"ஒரு எட்டு. எட்டு எட்டோடக் கூட மூணு"

"எதுவும் போவலியா"

"போவும் போவும். உங்கம்மாளுது இருந்தா"

ஏதோ ஒரு பெரிய சத்தம் கேட்கிறது. காற்று வெளிப் பட்டு கண்ணாடி நொறுங்குகிற சப்தம். சோடாக் கடையில் பாட்டில் வெடிக்கிறது.சோடா பாட்டில் கண்ணாடித் துண்டுகள். எவன் மண்டை கிழிந்ததோ, எங்கே காயமோ. காய்கள் நகர்கின்றன. கொட்டைகள் நகர்த்துகின்றன.

"ஒரு நாலி. ரெண்டு. ஒண்ணு ரெண்டு."

"டாய் போய் ஒரு டீ வாங்கியாடா"

"நான் ஒரு டீ சாப்பட்டுமா'ண்ணே"

www.padippakam.com



“போய் வாங்கியாடா மொதல்ல ஒங்கசி... இவருக்கு போவும் போதே வச்சிட்டணம்”

“ஓர் ரெண்டு... நாலு”

“நாலு வேணாண்டா, ரெண்டு எட்டு.”

“ஓர் ரெண்டு. எட்டு. கேக்கும் போது உழாதே”

“என்னா ஆட்டம் கெடையாதா”

“கையாட்டம் கூட உடமுடியாது”

நிழல் கீழ் நோக்கிச் சாய்கிறது. சாய்ந்து நீள்கிறது நீண்டு கொண்டே போகிறது. கிழவி இடம் மாறி. உட்காருகிறாள். பள்ளிக்கூடம் விட்டு பசங்கள் போகி றார்கள். ஓல கடம் போட்ட இடத்தில் வண்டி கட்டு விடுகிறார்கள். கட்டைச் கற்றி எருமுட்டை அடுக்கி வரகு வைக்கோல் போட்டு மூடி பற்ற வைக்கிறான் நெருப்பு வைப்பவன். வைக்கோலைச் சுற்றிக் காட்டிய படியே வலம் வருகிறான். வந்து அடுத்த வலத்துக்கு போகிறான்.

“நைனா அம்மா நாலணா வாங்கியாரச் சொல்லிச்சி”

“ஓதக் கழுதைய எங்கிட்ட ஏதுகாசி”

“ஐய கருவாடு வாங்கி கொழம்பு காச்சணுமாம். வாங்கியாரச் சொல்லிச்சின்னா”

“செறுப்பால அடிப்பேன். மரியாதையா ஊட்டுக்கு போயிடு. என்னா போட்ட”

“ரெண்டு. ரெண்டுக்கு”

மைதானத்தில் பந்து விளையாட்டுத் தொடங்குகிறது. அருணாசல அய்யர் ஓட்டலில் மெதுவடை வாசனை வருகிறது. உளுத்தவடை, மசால் வடை, ஸ்டிராங் காபி வாசனை மூக்கைத் துளைக்கிறது. நாலு மூலை ரோடில் ஏதோ சத்தம் கேட்கிறது. எவனோ வித்தை காட்டுகிற

www.padippakam.com



வன் டமாரச் சத்தம். கழைக் கூத்து வித்தை. நாடோடி கட்டைக் குரலில் கத்துகிறான். மேளம் இடையிடையே அதிர்கிறது.

''ஒரு மூணு. ஒண்ணு.''

''ஒரு எட்டு, நாலி. நாலோடக் கூட மறு நாலி. இரு நாலிம் பத்தாது. மூணு.''

''ஏயா ஒரு அஞ்சி பைசா பீடி வாங்கியாரச் சொல் லேன்''

''ஏன் நீ வாங்கியாரச் சொல்லேன்''

''இப்ப நாங்கதான் கெலிப்புல இருக்கறோம்.''

''அதுக்கென்னா. உங்கப்பமுட்டுதா போவுது''

''வாங்கியாரச் சொல்லுயா. காசி இல்ல''

''காசி இல்லன்னா போய் எவன்தியாவது... —ம்...''

''டேய் அங்க எங்கனா துண்டு கெடக்குதா பாரு.''

''யார் துண்டு''

''பீடி துண்ட்றா' உங்க சி-''

பொழுது நகர்கிறது. கூட்டம் சேருகிறது. அஞ்சாறு வயதே கூட நிரம்பாத ஒரு சிறுமி கழைக் கூத்தாடியின் உயரே தூக்கிய கழிமுனையில் தொத்தி வேடிக்கை காட்டு கிறாள். கார் ஓடுகிறது. பஸ் ஓடுகிறது. கயிறு மெஷின் சுற்றிகிறது. மட்டைகள் நசுங்குகின்றன. இரும்பு கனல் கிகிது. டம்ளர்கள் பிளேட்டுகள் புரள்கின்றன. பாட்டில் கள் அதிருகின்றன. கிழவி சீராக பின்னிக் கொண்டிருக் கிறாள். எல்லாரும் கூட்டமாய்ப் பார்க்கிறார்கள்.

''ஒரு மூணு. என்னடாயிது

''ஒரு எட்டு. ரெண்டு''

''ஒரு மூணு உழுந்தா போதும்''

''ஒரு எட்டு, மூணு''

படிப்பகம்

www.padippakam.com



"ஒரு மூணு. எட்டு"

"எட்டு வேண்டாண்டா. ரெண்டு"

"ஒரு எட்டு. நாலி"

"நாலி பத்தாது..."

அந்தி மயங்குகிறது. லேசாய் இருள்கிறது. தெருக்களில் கடைகளில் விளக்கு போடுகிறார்கள். சத்திரம் மங்குகிறது. தெருக்கோடி டூரிங் டாக்கீஸில் சினிமா பாட்டு போடத் தொடங்குகிறார்கள். முதல் பக்திப் பாடல் பாடுகிறது.

"ஒரு மூணுதான். ஆட்டம் முடிஞ்சிடும்."

"ஒரு மூணு. ரெண்டு. சரியாய் போச்சி."

"டொக்கா. சரிதான்."

"ஒரு எட்டு. மூணு."

"ஒரு புள்ளி. மூணு. போடா."

"ஒரு நாலி. ரெண்டு."

"ஒரு சின்ன புள்ளி... பச்சங்."

கருமான் சாமான்களை ஏறக்கட்டுகிறான். எல்லோரும் ஏறக்கட்டுகிறார்கள். புதுக்கட்டு போட்ட சக்கரத்தை வண்டியில் மாட்டுகிறார்கள். பழுக்க வைத்து சம்மட்டியால் அடித்து நீட்டி கூர்மைப்படுத்திய இரும்புச் சாமான்கள், குவியல் குவியலாய் அடித்துப் போட்ட பஞ்சுப்பொதிகள். நீள நீளமாய் முறுக்கிப்போட்ட தாம்பு வடக்கயிறுகள். பின்னிப்போட்ட முறங்கள். அன்றைய உழைப்பின் விளைச்சல்கள். கழைக் கூத்தாடி கையேந்தி வருகிறான், சிறுமி கையேந்துகிறாள். வயிற்றில் கை வைத்து தொட்டு தொட்டுக் காட்டி ஏந்திக் கொண்டு போகிறாள்.

'டொக்கு அறுத்துடுவாம் போலருக்குதே."

www.padippakam.com



"போறாத காலமா. பாரேன் பின்ன கடைசில வந்து உயிர வாங்கறத."

"ஒரு புள்ளி மூணு."

"ஒரு ரெண்டு, போச்சி."

சுற்றித் தலை கவிழ்த்த முகங்களிலே கலவரம், இருள், பதற்றம். வியர்வை, விகாரமெடுத்த முகங்கள். அலைச்சல் நிறைந்த கண்களை காய்கள் விழுங்குகின்றன. சுகமாய் திண்ணையில் சயனித்திருந்தவைகள் எழுந்திருக்கின்றன.

"ஏம்பா எழுப்பக் கூடாதா. பொழுதே பூடுச்சே" கடைத்தெருவில் அந்தி நேரத்து இரைச்சல். சுறுசுறுப்பு. சந்தடி. சினிமாவுக்கு போகிற கூட்டம் நடைபோடுகிறது.

"ஒரு நாலி. மூணு. சே!

"இனிமே எப்ப தொவிஞ்சி எப்ப வர்ரது."

"ஒரு புள்ளி' என்னடாயிது."

ரெண்டு உருவம் இடுப்பைப் பிடித்துக்கொண்டு எழுந் திருக்கிறது. எழுந்து குனிகிறது.

"ஒரு புள்ளி ப்ச்சங்,"

கொட்டைகள் புரள்கின்றன. காய்கள் நகர மறுக் கின்றன. கொட்டைகளை உருட்டுகின்றன. தேய்த்த புளியங் கொட்டைகள்.

"சீக்கிரம் போட்றா இருட்டுது."

"ஒரு நாலி. பச்சங்."

"ஒரு புள்ளி. அடச்சீ."

விழிப்பு □ ...... □

www.padippakam.com

# கிடக்கை

“இது பூரா ஏ.டி.டி. டொன்டி செவன். எப்பிடி. பாக்கறதுக்கே ரொம்ப அருமையாயில்ல. பச்சின்னு... ஜாப் மெத்தட். எல்லாம் நான் கூடஇருந்து செஞ்சது தான். எங்கப்பாரு எதையும் கவனிக்க மாட்டாரு எல்லாம் நான்தான்.’’

நண்பன் பின்தொடர அவன் வரப்பில் நடந்தான். மணிக்கட்டுக்கு மேலே பட்டையாக மடித்துவிட்ட கொஞ்சம் ஹூசான டெரிலின் சட்டை. முட்டிக்குமேலே மடித்துக் கட்டிய மெலிய லுங்கி, இடது கையால் அழகாக தலையை அணைத்துத் தடவி படியவிட்டு ஹவாய்ச் செப்பல்கள் புல்வரப்பில் பதிய அமைதியாக புன்முறுவல் பூத்து நடந்தான். பக்கத்திலிருந்த அடுத்த வயலைச் சுட்டிக் காட்டினான்.

‘‘இது ஒண்டிதான் இங்கத்தி நடவு. இது நட்டபோது நான் ஊருல இல்ல. எங்கப்பாரு நட்டாரு. ஏனோ தானோண்ணு எப்பிடி இருக்குது பாத்தியா... அவருக்கு இந்த பீல்டுல இன்ட்ரஸ்டே இல்ல...’’

கைகளை முன்புறம் கோர்த்து விரல்களோடு விரல்களைப் பின்னி இதமாக நெட்டி முறித்து நிறைவோடு சிரித்துக்கொண்டான்.

த—6

படிப்பகம்

www.padippakam.com



''நானே கண்டி இல்லண்ணா இதயெல்லாம் அவரு எப்போ வித்துத் தொலைச்சிட்டுப் போயிருப்பாரு. நான் தான் விடாப்புடியாயா ஒத்தக்கால்ல நின்னுஅவரு டாக்ட ருக்கு படிக்கச் சொன்னதக்கூட வேணாம்னு அக்ரிக்கு படிச்சேன். இல்லண்ணா நானும் உன்ன மாதிரியே டாக்டராயிட்டிருப்பேன். என்னா இருந்தாலும் தினம் பேஷண்டுங்களோட போர் அடிசிக்னு இருக்கறதவிட கண்ணுக்கு குளிர்ச்சியா பச்சிபச்சின்னு இந்த வயலுங்கள சுத்தி பாத்துக்னு இருக்கறதே ஒரு தனி சொகம்தான். எவ்வளவோ அமைதி. எவ்வளவு நிம்மதி... என்னா சொல்ற...''

கொஞ்சம் நின்று நண்பனைப் பார்த்தான். நண்பன் பேசாமல் உதட்டை மட்டும் நெளித்துச் சிரித்தான்.

''அதோ ஒரு பன மரம் இருக்குது பார். அதுவரைக் கும் நம்பளுதுதான். எல்லாம் சேத்தா மொத்தத்துல ஒரு பன்னெண்டு காணி தேறும். காணின்னா தெரியு மில்ல. இங்கல்லாம் காணி கணக்குதான். சுமாரா ஒண்ணேகால் ஏக்கர். நான் டாக்டருக்கு படிச்சிருந்தா அஞ்சி வருஷத்துக்கு எப்பிடியும் ஒரு அஞ்சி காணியாவது வித்து செலவு பண்ணியிருப்பாரு எங்கப்பாரு. அவருக்கு இந்த நெலபுலத்தையெல்லாம் வச்சிக்னு பயிரிட்டுக்னு இருக்கறதே பெரிய சள்ளையா தோணுது. எப்பிடியாவது இதுல இருந்து ஒதுங்கி வாழணம்னுதான் நெனைக்கறாரு. நான் தான் இதுல இன்ட்ரஸ்ட் எடுத்துக்னேன்.

''எங்கப்பாவது தேவலாம். எங்கம்மா சுத்த மோசம். அவன் ஒண்ணுக்குமே படிக்கவேணாம். படிச்ச வரைக்கும் போதும். சும்மா வீட்டோடவே கெடக்கட்டும் கல்யா ணத்தப் பண்ணிக்னு... இப்ப அவன் படிச்சி எந்த உத்தி யோகத்துக்கு போவப் போறான்னுவாங்க. வாழ்க்கன் றதே காலா காலத்துல ஒரு கல்யாணத்தப் பண்ணிக்னு

www.padippakam.com



கொழந்தகுட்டிங்கள பெத்துக்கறதுலதான் இருக்குதுன்றது அவங்க பாலிஸி.''

சிரித்துக் கொண்டே நண்பனைப் பார்த்தான். ஷேவ் மழ மழப்போடு இருக்கும் முகவாயை லேசாக தடவிவிட்டுக் கொண்டான்.

''இப்ப நெனச்சாகூட நான் ஏங்கியாவது வேலைக்கிப் போறதுன்னா போவலாம். உன்ன மாதிரி நாலு ஊர் சுத்தலாம். எத்தனையே விதமான ஜனங்கள பாக்கலாம். எடங்களப் பார்க்கலாம். ஆனா எனக்கு என்னவோ அதுல விருப்பம் இல்ல. எங்க வீட்லயும் விடமாட்டாங்க. எனக்கு இந்த லைன்தான் புடிச்சிருக்கு. இந்த ஃபீல்டு... அது அனுபவிச்சிப் பார்த்தாதான் தெரியும். என்னா சொல்ற...''

அமைதியாய் பின்தொடரும் நண்பனை மீண்டும் ஒரு முறை திரும்பிப் பார்த்தான்.

''காலையில தூங்கியெழுந்ததுமே பிரஷ்ஷ வாயில வச்சின்னு சோப் பாக்ஸ் டவலோட இங்க வந்துடுவேன். எல்லாத்தியும் சுத்திபாத்துக்னு இங்கயே குளிச்சிட்டு கிளிச்சுட்டு போய் டிபன் சாப்டுட்டு வந்தன்னா, ஏதாவதொரு இங்கிலீஷ் நாவல தூக்கின்னு வந்து அதோ அந்த மாமரம் தெரியுது பாரு. அந்த கட்டுல்ல படுத்துக்குவேன். நல்லா குளுகுளுன்னு காத்து வரும். அப்படியே சில நாள்ல தூங்கிக் கூடப் போயிடுவேன்...''

வலது மணிக்கட்டில் கனத்த செயின் போட்டுத் தொங்கும் வாட்ச்சை அழகாய் மேலே ஏற்றி விட்டுக் கொண்டான். சேடை ஓட்டுகிற பக்கம் கையைக் காட்டினான்.

www.padippakam.com



''அந்தக் கழினில தான் நாளைக்கி நடவு. எல்லாம் இயற்கை உரம்தான். கண்ட ஃபெர்டிலைசர் எதையும் வாங்கிப் போட்டு காசை வீண்செலவு பண்ணி நெலத்தை யும் கெடுத்துக்கறதில்ல. க்ளேரியா செடிக்கி மட்டும் தனியா ஒரு காணி உட்டுட்டேன். அது வேஸ்ட் மாதிரி தெரிஞ்சாலும் நல்ல பெனிஃபிட். இதப்பத்தியெல்லாம் ஒனக்கு அதிகம் தெரியாது இல்ல. மெடிசன், மிக்சர் இன்ஜக்ஷன் பேஷண்ட்... இப்பிடியே உன் நாள் ஓடுது. அது ஒரு மாதிரி வாழ்க்க. யந்திரம்மாதிரி ரசனையே யில்லாம; ஆனா அக்ரில அப்டி யெல்லாம் இல்ல. இத எடுத்துக்கோ நல்ல ரசன. இயற்கையோட ஒட்டன வாழ்க்க; திறந்த வெளில மனந்தெறந்த விவசாயிங் களோட சம்பாஷன பண்ணிக்னு அவங்களோட சிரிச்சி வெளையாடிக்னு அவங்களோட வாழறதே ஒரு தனி சொகம்தான். அதுவுமில்லாம இதுல பாரு. இதுல பிளான் இருக்கு, ப்ராஜக்ட் இருக்கு. எக்கனாமிக்ஸ் இருக்கு, ஜியாக்ரபி இருக்கு... அக்ரி டச் பண்ணாத சயன்ஸே உலகத்துல கெடையாது. எல்லாத்தோடவும் அது ரொம்ப அட்டாச்டு. என்னா சொல்ற... அப்புறம் நேஷனல் வியூ வேற...''

மடித்திருந்த லுங்கியை எடுத்து முனையால் சேலாக முகத்தை ஒற்றிக் கொண்டான். தலை எங்கே கலைந்து விட்டிருக்குமோ என்பது போல மீண்டும் ஒரு முறை தடவி அழுத்திவிட்டுக் கொண்டான்.

''இங்க ஓர்க் பண்றவங்க எல்லாருக்கும் என்ன ரொம்ப புடிக்கும். ஏன்னா எல்லார் கிட்டியும் ரொம்ப சோஷியலா இருப்பேன். பெரிய பணக்காரன்ற கொழுப்போ, தெனாவட்டோ காட்டறது கெடையாது. கூலில வயித்துல அடிக்கிறது கிடையாது. கஷ்டந் தெரிஞ்சி நடந்துக்கறது. பெரும்பாலும் நான்தான் கூலி குடுப்பேன். எப்பவாவது ஒரு சமயம் எங்கப்பா கூலி

படிப்பகம்

www.padippakam.com



குடுத்தார்னா கூடம் நான் அவருக்குத் தெரியாம ஏதாவது குடுப்பேன். அவங்களோட சரிக்குச் சரியா சகஜமா பழகுவேன். வித்தியாசமே பாராட்டறது கெடையாது. அதுல நமக்கு என்னா வந்துடப் போவுது சொய்லு...''

நண்பன் மெல்ல சிரித்தான்.

''சிலபேர் மாதிரி படிச்சிப்புட்டா கலப்பயப் புடிக்க மாட்டேன். களிமண்ண கையால தொடமாட்டேன்ற தெல்லாம் எங்கிட்ட கெடையாது. சொல்லப்போனா அந்த மாதிரி வாய்ப்பு கெடைக்காதான்னுதான் நினைப் பேன். எங்கப்பாரு எங்கியாவது ஊருக்குப் போவ மாட் டாரா நம்ம கொஞ்சம் ஒட்டிப் பாக்க மாட்டமான்னு தான் தோணும். ஒரு நாள் துண்ட எடுத்து தலையில கட்டிக்னு சேடகூடம் ஒட்டனேன். மொழங்கால்சேத்துல கால உட்டுக்குனு கையில மொழைய புடிச்சிக்னு...ஹாய் ஹாய்னு மாட்ட அதட்டிக்னு அது ஒரு தனி ஜாலி... இந்த மாதிரி எக்ஸ்பீரியன்ஸெல்லாம் உன் லயன்ல கெடைக்காது இல்ல. பாவம்... ரொம்ப அருமையான விஷயம்''

நெகிழும் லுங்கியை அவிழ்த்து சுருக்க மெதுவுமில்லா மல் தவழ விட்டு சீராக மடித்துக் கட்டிக் கொண்டான்.

''எனக்கு என்னமோ அந்த ஊருக்குப் போவணம் இந்த ஊருக்குப் போவணம்னு எப்பவும் எந்த ஆசையுமே தோண்ணது இல்ல. காலேஜ் படிக்கும் போது ஒருதடவ எக்ஸ்கர்ஷன் போய் வந்ததோட சரி. இப்பல்லாம் ஏதாவது வேலையா எங்கனா வெளியூர் போனாகூடம் ஒடனே ஊருக்கு வந்து சேர்ந்துடனும் போல இருக்குது... அப்படி அந்த...மோட்டார் ஷெட் பக்கமா போவமா...

''இந்த ஷெட் போன வருஷம்தான் கட்டனது. அதுக்கு முன்னாடி யான்மார் என்ஜின்தான் வச்சிக்னு

www.padippakam.com



லொடுக் லொடுக்னு ஒட்டிக்னு இருந்தாரு எங்க அப்பாரு நான்தான் ரொம்ப ட்ரை பண்ணி ஏயிக்கி அப்ளை பண்ணி சர்வீஸ் வாங்கி மோட்டர் போட்டேன். அதுக்காக ரொம்ப ஸ்டெப் எடுத்து வேல செஞ்சேன். இன்னும் எவ்ளோ பேருக்கு கூடம் வாங்கி குடுத்தேன். இதுல என்னாண்ணா நம்ப எஜுகேட்டடா இருக்குறது னால எங்க போனாலும் கொஞ்சம் மெரிட். நாலு ஆபீஸர்ங்கள பாத்து பேச கொள்ள, ஏதோ காசி வாங்கி னாலும் பரவால்ல குய்க்கா வேலைங்கள முடிச்சி குடுத் துட்றாங்க தெரியுமா. மத்தவங்க விஷயத்துல எப்பிடியோ, என் விஷயத்துல எதுவும் ஃபெயிலியர் ஆன தில்ல. டிலே ஆனதும் இல்ல.

கால்வாயில் ஓடும் நீரில் மெல்ல கால்களை நனைத்து கழுவிக் கொண்டான். நண்பனையும் கழுவிக்கொள்ளச் செய்தான்.

"நான் டாக்டருக்குப் படிச்சிருந்தேன்னா எங்கப்பாரு ஊருலியே டிஸ்பென்ஸரி வச்சிக் குடுத்திருப்பாரு. எனக்கு அதுல கொஞ்சம்கூட லைக்கிங் இருந்திருக்காது. வெளில எங்கனா போய் சுத்தணம்னு தான் ஆசைப்பட்டு இருப் பேன். நான் வெளில போயிட்டா இதெல்லாம் கவனிச் சிக்க யாரும் கெடையாது. எங்கப்பாரு எல்லாத்தியும் வித்து சுருட்டி எடுத்துக்னு எங்கூடவே வந்துட்டு இருப் பாரு. அவருக்கு அதுல தான் இஷ்டம். அப்புறம் இந்த ஊருல எங்க பேர் சொல்லக்கூடம் ஒருத்தரும் இருந்திருக்க மாட்டாங்க. இப்ப எவ்வளவோ சௌகர்யமா இருக்குது தெரியுமா...ஊரோட இருந்துக்னு நெலபுலத்த பாத்துக் குனுது...பல வகையிலும் நல்லதாப் போச்சி...

"தோ தெரியுது பார், இந்த எடத்துலதான் நான் ரிசர்ச் ஆரம்பிக்கலாம்னு நெனச்சிக்குனு இருக்கறேன் எடம் எப்டி. சௌகர்யமா இல்ல ஷெட்டுக்கு பக்கத்தி

www.padippakam.com



லியே பாதுகாப்பா. வழக்கமா நாத்து உடற துண்டு இது. வருஷம் பூரா இதுக்கு வேல கெடையாது பெரும் பாலும் சும்மாதான் கெடக்கும். பொழுது போக்கா ஏதாவது செய்து பாக்கலாம்னு...காலேஜ் படிக்கும் போதே எனக்கு இதுல ரொம்ப இன்ஸ்ரஸ்ட். அப்ப வசதிப் படல. ஒனக்கு இதெல்லாம் ரொம்ப வேடிக்கையா இருக்கும் இல்ல. ஆனா எனக்கு இதுதான் மனசுக்கு நிம்மதியா இருக்கு. உற்சாகமாகவும் இருக்கு. நீ ஏதா வது அந்த மாதிரி ரிசர்ச் பண்றதா உத்தேசம் இருக்கா மெடிக்கல்ல...எங்க ஒனக்கு நேரம் கெடைக்கப் போவுது தூங்கி யெழுந்தா பொழுதுபோனா எந்த நேரமும் பேஷண்டுகள கவனிக்கவே உனக்கு டைம் சரியா இருக்கும். அப்புறம் எங்க ரிசர்ச் பண்றது. ரொம்ப கஷ்டம்ப்பா உன் வாழ்க்கை... மெஷின் மாதிரி...''

அவன் மெல்ல புன்முறுவல் பூத்தபடியே பக்கத்தில் சிமெண்ட் கட்டையை நெருங்கி வாயால் மெல்ல தூசு ஊதி நண்பனை உட்கார் என்று சொல்லிவிட்டு உட் கார்ந்து கொண்டான். நண்பன் உட்காராமல் அவனை பரிவோடு பார்த்து மெல்ல சிரித்தான். தனக்கு நேர மாகிறது போகவேண்டும் என்று இதமாகச் சொல்லி அவனை விடைகொடுக்கக் கோரினான்.

அதைக் கேட்ட அவன் முகம் மாறியது. தெளிவற்ற நிலையில் என்னா இதுக்குள்ள அவசரம். இப்பதான் வந்த... சீக்கிரமா போயாவணுமா...'' என்றான்.

நண்பன் விசேஷமாக ஏதும் இல்லை என்றும், பக்கத்து ஊருக்கு மாற்றலாகி வந்திருப்பதால் சும்மா பார்த்துவிட்டுப் போகலாமே என்றுதான் வந்ததாகவும், தற்போது போகவேண்டும் என்றும் பிறகு வாய்க்கும் போது ஓய்வாக வருவதாகவும் சொன்னான்.

இவன் வாட்டத்துடன் விருப்பமின்றி விடை கொடுத் தான்.

படிப்பகம்

www.padippakam.com



நண்பன் சீராக அடியெடுத்து வைத்து வரப்பில் நடந்து சென்றான். கொஞ்ச நேரத்தில் வயல்களைக் கடந்து சாலையை அடைந்தான். புளிய மரத்தின் கீழ் நிறுத்திவைத்திருந்திருந்த மோட்டார் சைக்கிளை ஸ்டார்ட் செய்தான். சடக்கென்று அது தாவிக் குதித்து பாய்ந்து செல்லும் போக்கையும், சீரான சத்தத்தையும் அது கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து மங்கி சின்ன புள்ளியாகி மங்கி மரங்களினூடே மறையும் வரையும் வெகு நேரம் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு உணர்வு மரத்த நிலையில் பின்பக்கம் திரும்பினான்.

பின்னால் படியாள் வந்து பணிவோடு கைகட்டி நின்று நாளை நடவுக்கு எத்தனை ஆட்கள் வைக்க வேண்டும் என்று கேட்டபோது அவன் சலிப்போடு சொன்னான். "எத்தினி ஆளாவது வையேன். ஒனக்கு தெரியாதா... இதல்லாம் என்னக் கேட்டுக்னு..." □

□ செம்மலர் □ ஜனவரி 80 □

www.padippakam.com

# பயன்கள்

அது சுமார் மூன்றடி உயரமும்,நான்கரையடி சுற்றள வும் கொண்டதாயிருந்தது. கனமாகவும், வலுவாகவும், ஒரு ஆளால் தூக்க முடியாத அளவுக்கு பாரமாக பெரிய மூட்டை போலவும் இருந்தது. பழுப்பு நிறத்தில் தலைப் பாகம் கொஞ்சம் கூம்பாகவும், அடிப்பாகம் கனமாகவும், தரையிலே குந்த வைக்கிற அளவுக்கு ஓரளவு தட்டையாக வும் இருந்தது. முன் பக்கம் மேலிருந்து வழுவழுப்பாய் இறங்கி இடப்பக்கம் சுருண்டிருப்பது போல் தோன்றிய பகுதியை துதிக்கை என்று சொன்னார்கள் எதிரே கரடு முரடாய் மேடு தட்டியிருந்த பகுதி தொந்தி என்று ஆகியது.

வெய்யில் கொளுத்தும் ஒரு நாளின் முற்பகலில் ஊரின் நடுவே புகுந்து ஓடுகிற தார்ச்சாலையில் கடைத் தெருப்பக்கம் புதுசாய் மின்கம்பம் நடுகிற வேலை நடந்து கொண்டிருந்த சமயம் குழிதோண்டுகிற வேலையிலே ஈடு பட்டிருந்த மின்வாரியத்தைச் சார்ந்த ‘டி.சி.எல்’கள் அதைக் கண்டு பிடித்தார்கள். ஒருஅடி அளவுக்கு குழி தோண்டிய போது அது கடப்பாறையில் ‘ணங்’ என்று மோதியது. ஆரம்பத்தில் அது ஏதோ பெரிய பாறை யாக இருக்கும் என்று அவர்கள் நினைத்தார்கள். ஆனால் தோண்டத்தோண்ட அதன் பருமன் மாறியது. அது ஒரு உருவமாக வெளிப்பட்டது.

www.padippakam.com



அதற்குள் சமாச்சாரம் ஊர்முழுக்கவும் பரவியது. வேடிக்கை பார்க்க கூட்டம் கூடிவிட்டது. வயது முதிர்ந்த கிழவர்களும், மூதாட்டிகளும், பெண்களும் வந்துபார்த்து அதிசயித்துச் சென்றார்கள். சுற்றி நின்று பக்தி நிறைந்த குரலில் கசமுசத்தார்கள். விசித்திரமாக நோட்டம் விட்டபடி வாயைப் பிளந்து கொண்டு நின்றார்கள். சிலர் அது ஏதோ ஊருக்கு ஷேமம் வரப் போவதன் அறிகுறி என்று சொன்னார்கள்.

ஆர்வத்தோடு எட்டிப்பார்க்கும் ஜனங்களுக்கு மத்தியில் குழிதோண்டும் தொழிலாளர்கள் மிகவும் சிரமப்பட்டார்கள். ஆளாளுக்கு சொல்லும் யோசனையில் முழுசாய் அதை எப்படி வெளியே எடுப்பது என்கிற சிந்தனையிலே ஆழ்ந்து நின்றார்கள் கடைசியில் பெரிய தாம்புக் கயிறு மாதிரி ஒன்றை எடுத்து வந்தார்கள். சாதாரணமாய் நீர் மொள்ளப் பயன்படுத்தும் கயிற்றை விட மிகவும் கனமாகவும் உறுதியாகவும் இருந்தது அது. டிபார்ட்மெண்ட் கயிறு. வட கயிறு மாதிரியிருந்த அதை கிணற்றிலேயிருந்து தண்ணீர் மொள்ள தோண்டியில் சுருக்கு மாட்டியிழுப்பார்களே அந்த மாதிரி போட்டு கழுத்து மாதிரித் தெரிந்த பகுதியில் மாட்டி இறுக்கித் தூக்கினார்கள். மாடு கவலை இழுப்பது போல வெளியிலிருந்து பலபேர் சேர்ந்து கயிற்றை இழுக்க நாலைந்து பேர் குழியில் இறங்கி கடப்பாறைகளையும், கழிக் கம்புகளையும் கொடுத்துக் கிளப்ப, மிகவும் பிரயாசைப் பட்டு அதை வெளியே எடுத்தார்கள். இவ்வாறாக, அன்று அமிர்த யோகம் கூடிய சுபதினம், பஞ்சமி திதி, சிம்மலக்கினம், அவிட்ட நட்சத்திரத்தில், சூரியோதயத்துக்கு சரியாக ஏழே முக்கால் நாழிகை வாக்கில், மேலெல்லாம் செம்மண் திப்பிகள் படை படையாய் அப்பியிருக்க, நீண்டகாலமாய் அவதிக்குட்பட்டிருந்த நோயாளியைப் போலவோ, அல்லது தூக்கிலே போடப்பட்ட மரண

www.padippakam.com



தண்டனைக் கைதியைப் போலவோ அது வெளியேவந்தது. பலரும் கன்னத்திலே போட்டு நமஸ்கரித்துக் கொண்டார்கள். 'புள்ளையாரப்பா... விநாயகா...' என்றார்கள்.

குழி தோண்டும் தொழிலாளர்கள் தங்கள் பணிக்கு இடைஞ்சல் இல்லாத வகையில் ஒருபக்கமாய் அதை அசக்கி அப்பால் தள்ளி வைத்து விட்டு தங்கள் வேலைகளில் ஈடுபட்டார்கள். பொழுது சாய, அங்கே நடவேண்டிய கம்பத்தை நட்டு முடித்து மண்ணைத் தள்ளி மூடி கெட்டிப் படுத்தி விட்டுப் போய் விட்டார்கள்.

அன்று முழுவதும் அது அங்கேயே கிடந்தது. ஈரப் பசையோடு ஒட்டியிருந்த செம்மண் மத்தியான வெய்யிலில் காய்ந்து பொர பொரத்தது. கையினால் சுரண்டினாலே எல்லாம் உதிர்ந்து விடும் போல் இருந்தது. யார் யாரோ வந்து பார்த்து விட்டுப் போனார்கள். யாருக்கும் என்ன செய்வது என்று தெரியவில்லை. எல்லோருமே மௌன மாக வந்து, வியந்து வியந்து பார்த்து நகர்ந்து கொண்டிருந்தார்கள்.

சிலர் 'அங்கே கோயில் கட்ட வேண்டும்... முறையாய் அதற்கு பூஜை அபிஷேக ஆராதனைகளெல்லாம் செய்ய வேண்டும்,... புனிதமாய் அதை ஆசார அனுஷ்டானங் களோடு வைத்திருக்க வேண்டும்... என்றார்கள். உடனடி யாய் கோவில் கட்டமுடியா விட்டாலும், தற்போதைக்கு ஒரு கீற்றுக் கொட்டகையாவது போட்டு, கம்பத்தில் ஒரு உண்டியல் கட்டித் தொங்க விடலாம், உண்டியலில் சேரு வதோடு கூட ஊர்ப் பெரிய மனஷாள்களும் ஆளுக்குக் கொஞ்சம் போட்டு சக்திக்கேற்ப சின்னதாய்க் கட்டி விடலாம் என்று யோசனை தெரிவித்தார்கள்.

இவ்விதமாக, மனசுக்குத் தோணியபடி, அவரவர்களும் ஒரு அபிப்ராயம் சொல்லி பேசிமுடித்தபிறகு அந்த இடத்தை விட்டு அகன்றார்கள். ஏறக்குறைய ஊர் முழு

www.padippakam.com



வதும் இந்த விசித்திரத்தைக் கேள்விப்பட்டு வந்து பார்த்துப் போய் விட்ட பிறகும் அது தனியாகவே கிடந்தது. எடுத்து வைத்த இடத்தை விட்டு இப்படி அப்படி அசையாமல், வெளிவந்த கோலத்துக்குச் சிறிதும் பழுதில்லாமல், எந்த வகை மாற்றமுமில்லாமல் அது அங்கேயே கிடந்தது. பார்வைக்கு தன் எதிர் காலம் என்ன ஆகுமோ என்று புரியாத குழப்பத்தால், விசன முற்றது போல் வியாகூலத்தோடு காட்சியளித்தது. யாரோ ஒரு முக்கியஸ்தர் ஊரில் இல்லை என்றும், அவர் வந்தால்தான் இதற்கு ஒரு வழி பிறக்கும் என்றும் பேசிக் கொண் டார்கள்.

தார்ச்சாலையின் எதிர்ப்பக்கம், ஊருக்குள் நுழைகிற சின்ன மண்ரஸ்தாவின் திருப்பத்தில், முருகன் கோவிலைப் பார்த்தா மாதிரி அது வைக்கப்பட்டிருந்தது. அண்ண னும் தம்பியும் மானசிகப்பார்த்து அளவளாவிக் கொள் ளட்டும் என்கிற மனமுவந்த நிலையிலோ என்னமோ... முற்றாக ஓரம் நகர்த்தாமல், கற்று முன்வாட்டமாகவே அதைவைத்துவிட்டுப்போயிருந்தார்கள்மின்வாரியத்தொழி லாளர்கள். மாலை சாய்ந்து மஞ்சள் வெய்யில் படர்கிற சமயம். திறந்த மேனியும், நாலு முழ அழுக்கு சோமனும், கிகப்புத் தலைப்பாகையும் அணிந்த விவசாயி ஒருவன் அந்தப்பக்கமாக வண்டி ஓட்டிக் கொண்டு வந்தான். பக்கத்திலேயிருக்கும் நகரத்தில், மறுநாள் தானியக் கமிட் டியில் போடுவதற்காக மணிலாப்பயறு ஏற்றிக்கொண்டு ஊர் உள்ளிருந்து வெளிப்பட்ட அவன் வளைவிலே அதைக் கண்டு மாட்டின் கயிற்றை இழுத்தப் பிடித்து நிறுத்தினான். எப்படி ஒடித்து ஓட்டினாலும் திருப்பத்தில் அது வண்டியில் இடிக்கும் போல் தோன்றியது. அது அங்கேயே கிடந்து, வண்டியைத் திருப்பும்போது மாட்டுக் காலோ, வண்டிச் சக்கரமோ அதன் மேல்பட்டு, முதல் முதல் பயறு ஏற்றிக்கொண்டு போகிற நேரத்தில் ஏதாவது

www.padippakam.com



அபவாதத்துக்கு உள்ளாகி பயறு விலை குறைந்து விடப் போகிறது. அல்லது லாரிக்காரன்அடித்துப் போட்டு விடப் போகிறான்... ஏதாவது நேர்ந்து விட்டுப் போய் விடப் போகிறது என்று நினைத்தான். கரடு பாய்ந்த முகத்தை சுளித்து யோசனையோடு அதை உற்று நோக்கி னான். பிறகு ஏர்க்காலைவிட்டு கீழே இறங்கி ஜாட்டிக் கோலை முட்டையிடுக்கில் செருகி விட்டு, சோமனை இழுத்துக் கீழ்ப்பாய்ச்சுக் கட்டியவாறே, சுற்று முற்றும் பார்த்து, தெருவே போகும் ஒரு சக விவசாயியைத் துணைக்கு அழைத்தான்.

அந்தி மங்குகிற நேரத்தில் அது இடம் பெயர்ந்தது. இரண்டு பேருமாய்ச் சேர்ந்து கொஞ்சம் கொஞ்சமாக நகர்த்தி அதை ஒரு ஓரமாய்க் கொண்டு போய்ச் சேர்த் திருந்தார்கள், அதைப் பார்த்த பலரும் 'அதுதான் நல்லது, அதை அப்படிச் செய்ய வேண்டும் என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தோம். பஸ் வரும்போது போகும் போதுகூட ஓரம் கூட்டி நிறுத்த சௌகர்யப் படாமலும், வளைவில் திரும்ப கொள்ள இடைஞ்சலாக வும் இருந்தது. இப்போது இருக்கும் இடம் பிரச்சனை யில்லை. இதுதான் பொருத்தமானது. இப்படியே இருக் கட்டும் என்று சொன்னார்கள். ''இந்த மாதிரிப் பொருட் கள் எல்லாம் அது அதுக்கு உரிய இடத்தில் அதற்கு உரிய அந்தஸ்தோடு தீட்டுத் தடுக்கு படாமல் இருக்க வேண்டும். அப்போதுதான் மரியாதை'' என்றார்கள்.

ஏறக்குறைய சாலையோரமிருந்த சின்ன டீக்கடையின் தட்டிப்படல் ஓரம் அது குடி கொண்டது. அன்று இரவு முழுக்கவும் அது அங்கேயே கிடந்தது. இருளிலும், பனியி லும், தன்னந்தனியாய் நிராதரவோடு கிடந்தது. வீட்டை விட்டு விரட்டப்பட்ட, போக்கிட மற்ற அநாதை போல, தன் எதிர்காலம் என்ன ஆகுமோ என்கிற குழப்பத்

www.padippakam.com



தால் கவலை கொண்டது போல் ஆழ்ந்த யோசனையுடன் காட்சி யளித்தது. முக்கியஸ்தர் இன்னும் வரவில்லை. வழக்கமாக காலையில் டீக்குடிக்க கடைக்கு வந்தவர்கள் 'இது என்னா சும்மா இப்பிடியே போட்டு வச்சிட்டு கெடக்குகு' இதுக்கு ஒரு பூசையாவது போட்டு அபிஷேகம் எதாவது பண்ணாலும் பரவால்ல...'' என்று பேசிக் கொண்டார்கள். ஆனால் பஞ்சாங்க ஐயரைக் கூப்பிட்டதற்கு அவர் இன்று ஏதோ முக்கிய காரியமாய், பக்கத்தில் ஐந்து மைல் தூரத்தில் உள்ள ஒரு கிராமத்தின் மிராசு தாரர் விட்டு முப்பாட்டனாரின் சிரார்த்தத்துக்குப் போவதாய்ச் சொல்லி சைக்கிளில் புறப்பட்டு விட்டதாகச் சொன்னார்கள். மாரியம்மன் கோயில் பூசாரியைக் கூப்பிட்டதற்கு அவனும் வேலையிருக்கிறது கொல்லையில் நான்கு ஆட்கள் களைவெட்டுகிறது அதைப் போய்ப் பார்க்க வேண்டும் என்றதோடு, ''நான் பூச பண்ண வந்து என் வேல கெட்டுட்டா, அந்த நாலு ஆள் காசி நா முக்கா மூண்ருபா நீங்க குடுப்பீங்களா...' என்றும் கேட்டானாம்.

யாரும் அதைக் காதில் வாங்கிக்கொண்டது போல் காட்டாமல் ஒருவர் முகத்தை யொருவர் பார்த்து, அவரவர் டீக்காசை கொடுத்து விட்டு மௌனமாய் அப்பால் நடந்தார்கள் கொஞ்சம் சரிந்த தொந்தியும் வழுக்கை விழுந்த தலையும் உடைய ஒருவர் மட்டும்-அவர் பாம்புகடிக்கு மாலை போடுபவர் - எவனோ ஒரு பையனைப் பிடித்து பத்து பைசா தருகிறேன் என்று சொல்லி ரெண்டு குடம் தண்ணீர் கொண்டுவந்து ஊற்றி அதைக் கழுவச் சொன்னார் என்று பிறகு தெரிந்தது. இப்போது அது குளித்து முடித்துவிட்டு சுத்தமாக இருந்தது. பையன் தேங்காய்ப் பஞ்சைப் போட்டு நன்றாக அக்கறையுடனே தேய்த்துக் கழுவியிருந்தான் நாலைந்து இடங்களில் நாறு ஓட்டிக்கொண்டு கிடந்தது அதன் மேல் விபூதியை அள்ளி பட்டை பட்டையாக போட்

www.padippakam.com



டார்கள். குங்குமத்தை அப்பி நெற்றியில் பொட்டு வைத்தார்கள்.

அதற்குப் பிறகு ஊர் ஜனங்கள் சாரி சாரியாக அங்கே வந்து நின்று வேடிக்கை பார்த்தும், கையெடுத்துக் கும்பிட்டும், தொட்டு கன்னத்தில் போட்டு முணு முணுத்துக் கொண்டும் அதை விட்டுப் போனார்கள்.

சாயங்காலத்துக்கு மேலே பொழுது இருட்டிய பிறகு முக்கியஸ்தர் வந்தார். மல்லிப்பூ மாதிரி வாயில் வேட்டியும் தும்பைப்பூ மாதிரி மஸ்லீன் சட்டையும் தங்கச் செயின் கைக்கடிகாரமும் அணிந்த அவரது பெரிய வீட்டின் முகப்பில் ராந்தல் விளக்கு வெளிச்சத்தில் நாட்டாண்மைக் காரர்களும், அவரும் கூடிப் பேசினார்கள். அது கண்டெடுக்கப்பட்ட வரலாறு குறித்தும், அது பிரசன்னமான இடம் நேரம் குறித்தும், அவர்கள் ஆழ்ந்த அக்கரையுடனே பரிசீலனை செய்தார்கள். நீண்ட நேர ஆலோசனைக்கும், பலத்த ஆராய்ச்சிக்கும் பிறகு பூசாரியை அழைத்து வர ஆள் போயிற்று. அவன் வந்த பிறகு தினம் நாலணா வீதம் மாதத்துக்கு ஏழரை ரூபாய் தந்து விடுவதென்றும், பூசாரி தினத்துக்கும் காலை மாலை ரெண்டு வேளையும் அதற்கு அபிஷேகம் செய்து பூஜை போட வேண்டியது என்றும் ஏற்பாடாயிற்று.

'ஓஹோ' என்று பெரியதாகச் செய்யா விட்டாலும், குறைந்த பட்சம் நீர் ஊற்றிக் கழுவியாவது அதற்கு ஒரு பொட்டு வைக்க வேண்டும். வேளைக்கு அஞ்சி பைசாவுக்கு கற்பூரம் வாங்கி தீபாராதனை காட்ட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. கூடிய சீக்கிரமே அங்கே ஒரு பந்தல் போடவும் கருமார ஆசாமியிடம் ஆர்டர் கொடுத்து தகர டப்பாவில் ஒரு உண்டியல் செய்யவும் நடவடிக்கை மேற்கொள்வதென பேசி முடிவெடுக்கப்பட்டது.

www.padippakam.com



அது கண்டெடுக்கப்பட்ட அந்தப் பகுதியிலேயே இருப்பதுதான் நலம் என்றும், அது தற்போது உள்ள இடத்திலேயே இருப்பதுதான் உசிதம் என்றும் எல்லோரும் ஏகோபித்த வகையிலே கருத்து தெரிவித்தார்கள். பின் கடுமையான வாதப் பிரதி வாதங்களுக்குப் பிறகு 'அதை இக்கட்டைக் களையும் முக்கூட்டு விநாயகர்' என அழைப்பதென்றும், சுருக்கமாசு, இ க மு. விநாயகர் என்று அழைத்தாலும் தவறில்லை என்றும் ஒரு மனதாகத் தீர்மானமாகியது. உண்டி வசூல், நிதி நிலைமைகளின் வளர்ச்சி, இவைகளைக் கணக்கில் கொண்டுதான் அதற்கு தர்மகாத்தர் நியமிக்கப்படமுடியும் என்றும், அதற்குப் பிறகே அதன் திருப்பணிகள் சம்பந்தமாய் திட்டம் தீட்டமுடியும் என்றும், எனவே, இதற்கிடையில் அது சம்பந்தமாய் யாதொன்றும் செய்வதற்கில்லை என்றும் அவர்கள் ஏகோபித்தவகையில் முடிவு செய்தார்கள்.

ஏழரை ருபாய் கட்டுப்படியாகாது என்று பூசாரி முணு முணுத்துக் கொண்ட போதிலும், தினத்துக்கும் ரெண்டு வேளை அது உடம்பை நனைத்து பட்டை குங்குமத்தோடு காட்சியளித்து. அதன் எதிரே சாலையோரம் மாடு கட்டுவதற்கு அடிப்பது போன்ற சவுக்குக் கம்பத்தாலான ஒரு முளைக்குச்சியை நட்டு அதில் பழைய பாண்ஸ் டப்பாவினால் செய்யப்பட்ட ஒரு உண்டியைக் கட்டி சின்ன டைகர் பூட்டு போட்டு பூட்டித் தொங்க விட்டிருந்தார்கள். சாலையில் போகிற ஜனங்கள் சும்மா போகிறபோக்கில் நின்று அதை வேடிக்கை பார்த்துவிட்டுப் போனார்கள். சிலர் ரெண்டு கையையும் தூக்கி கும்பிடோ அல்லது ஒரு கையால் 'குட் மார்னிங்கோ' போட்டுவிட்டுப் போர்கள். யாராவது சிறுவர் சிறுமியர்களோ பெண்களோ வெள்ளிக்கிழமை மாலை வேளைகளில் எப்பவாவது வந்து கற்பூரம் கொளுத்தி கரியை நெற்றியில் இட்டுச் செல்கிற அளவுக்கு அதற்கு பிரசித்திவந்த

www.padippakam.com



போதிலும் அது அப்படியே கிடந்தது. நிராதரவாக வெட்ட வெளியில் வானமே கூரையாகக்கிடந்தது. அந்த உண்டியலிலும் எப்போதோ ஒரு முறை மிக அபூவமாகவே சத்தம் கேட்டது.

யாருக்கும் அதில் சிரத்தையோ அல்லது அசிரத்தையோ இருப்பது மாதிரி தெரியவில்லை. ஆனால் அது திருக் கோலம் பூண்டு அடைக்கலம் புகுந்த 'அண்ணா டீஸ்டால்' உரிமையாளன் அப்பாசாமி மட்டும் அதை ஒரு மாதிரி யாகப் பார்க்கத் தோடங்கினான். தலைக் கட்டும் முறுக்கு மீசையும் கொண்டிருந்த அவன், ரெட்டைக் கரைபோட்ட சோமனை மடித்துக்கட்டியவாறு பாய்லர் எதிரில் நின்றிருந்தான். மூணு குழந்தைகளையும் ஒரு சம்சாரத்தை யும் டீக்கடை வருமானத்திலேயே காப்பாற்றும் அவன் எப்போதும் இருமும் காச நோய் பிடித்த தந்தைக்கும், சதா வாய் ஓயாமல் பேசிக்கொண்டிருக்கும் ரவிக்கை அணியாத தாய்க்கும் சோறு போட்டான்.

கொஞ்ச நாளாய் குண்டாவில் எடைகட்டி ஊற்றி வைத்த பால் அப்படியே இருப்பதையும், வியாபாரம் பூராவும் பக்கத்துக் கடையிலே நுழைவதையும், அவன் சிந்தனையுடனும், செய்வதறியாத குழப்பத்துடனும், பார்த்துக் கொண்டிருந்தான். பக்கத்துக் கடையில் எந்த நேரமும் சள சளப்பாய் பேச்சு சத்தமும், டீ அடிக்கிற சத்தமும், லொட்டு பொட்டு என்று டீ க்ளாசைவைத்து எடுக்கிற சத்தமும், கலகலத்து கழுவுகிற சத்தமும்... அவன் ஈ ஓட்டும் தன் கடையிலிருந்தபடியே மெல்ல மீசையை முறுக்கி யோசித்துக் கொண்டிருந்தான்.

சேரி ஜனங்கள் அவன் கடைப்பக்கம் அதிகமாக வரு வதை நிறுத்திக் கொண்டார்கள். ஊர் ஜனங்களும் மிகக் கம்மியாகவே வந்தார்கள். வந்தவர்களும் முன்னே மாதிரி

த—7

www.padippakam.com



வாய்க்கு வந்ததைப் பேசி அரட்டையடிப்பதோ, கலகலப் பாக வம்பளப்பதோ இல்லாமல், வந்தமா, குடித்தமா, போனமா என்று இருந்தார்கள். ''ஒரு கிளாஸ் தண்ணி வாங்க வாயச் கொப்பளிச்சி முழியக்கூட ஒரு எடமில்லாமப் போச்சி'' என்று அவர்கள் பேசிக் கொண் டார்கள். செருப்புக் காலோடு அவர்கள் முகப்பைக் கடந்து உள்ளே வரத் தயங்குவதையும், தள்ளி நடந்து நுழைந்தாலும் அடக்கத்துடனும் பணிவுடனும், பிரார்த் தனைக்கு காவடி எடுக்க இருப்பவர்களைப் போன்ற பக்தி நிறைந்த முகத் தோற்றத்துடன் மெதுவாகப் பேசிவிட்டு வெளியேறுவதையும் மிகுந்த மனக்கிலேசத்துடன் உணர்ந் தான். எழுந்த கோலத்துக்கு அப்படியே நேராய் கோட்டு வாயைக் கூடத் துடைக்காமல் கடைக்கு வருபவர்கள், இப்போ குளித்து முடித்து பட்டை போடாமல் கடைக்கு வரமறுத்தார்கள், மொத்தத்தில் டீக் கடை வியாபார ஸ்தலமாயில்லாமல் மூலஸ்தானமாய் மாறிபோயிருந்தது.

பால் காசு கூட கொடுக்க முடியாமல் பாக்கி நிற்பதை யும், சர்க்கரை டீ பொட்டலம் வாங்கக்கூட கல்லாவில் காசு சேராமலிருப்பதையும் பற்றிய கோளாறுகளில் ஆழ்ந்தவனாக தீவிர யோசனைக்குள்ளாகியிருந்தான் அவன்.

வெகு நேர சிந்தனைக்குப்பிறகு வெப்பம் நிறைந்த பெருமூச்சொன்று அவனிடமிருந்து வெளிப்பட்டது. ஏதோ ஒரு முடிவுக்கு வந்த வனைப் போல அவன் மெல்ல வெளிப்பக்கமாக வந்தான். பாராமாய்க் கனக்கும் அடிப்பாகத்துடனும் அசைய விரும்பாததாய் அங்கேயே குந்தியிருக்க விரும்புவது போன்ற தோற்றத்துடன் இருந்த அதைக் கண்டான். அவன் முகத்தில் லேசான மகிழ்ச்சி நிலவியது. தனக்குள்ளேயே நெளியும் மெல்லிய சிரிப்பை மறைக்க ஷேவ் செய்யப்படாத தனது கன்னத்தை ஏதோ

www.padippakam.com



ஊரல் எடுத்து சொரிவது போல் சொரிந்து விட்டுக் கொண்டு உள்ளே வந்தான்.

மறுநாள் விடிய விடிய அது பக்கத்திலிருந்த பத்மநாபன் டீக்கடை ஓரம் குடிபெயர்ந்திருந்தது. யாரும் அது இடம் மாறியிருப்பது பற்றியோ, உண்டிக்கும் விநாயகருக்கும் இடைவெளி அதிகமாகியிருப்பது பற்றியோ பொருட்படுத்திக் கொண்டதாகத் தெரியவில்லை. கை கூப்புகிறவர்கள் எப்போதும்போல கூப்பி விட்டுச் சென்றார்கள். குட்மார்னிங் போடுகிறவர்களும் அப்படியே. பூசாரி கூடம் ஒரு விநாடி நின்று எங்கே அதைக் காணோம்' என்பதை போல ஒரு பார்வை பார்த்து விட்டு, பதினைந்து அடி தள்ளியிருந்த அதைக் கண்டு வழக்கப்படி தன் அபிஷேகத்தை முடித்துக் கொண்டு போய் விட்டான்.

சின்ன வயசிலிருந்தே கங்காதரவிலாசில் டீ அடித்து வளர்ந்தவனும், ஆளாகி ஆப்பம் சுடுகிற அஞ்சாலையை தனக்கென்று சேர்த்துக் கொண்ட பிறகு காலியாய்க் கிடந்த ஹைவேஸ் மண்ணில் சொந்தமாகக் கடை போட்டவனும், மூணாவது மாசம் பிறந்த பெண் குழந்தையின் அதிருஷ்டத்தில் கடைக்கு ‘வள்ளி விலாஸ்’ என்று பெயரிட்டவனுமான பத்மநாபன் புதுசாய் வந்து சேர்ந்த சீதனத்தை குழப்பத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான். அது ஏறக்குறைய பெயர்ப் பலகைக்குக்கீழேசற்றுத் தள்ளி, சனிமூலையைப் பார்த்த முகமாக அமர்ந்திருந்தது. பனியில் நமறு தட்டிய ருங்குமமும் விபூதியும் மேலே அப்பிக் கரைந்திருந்தன. அதன் தோள் போன்ற பகுதியில் மேலே பறந்து திரிந்து எச்சமிட்ட காக்காய்ப் பீ ஒட்டிக் கொண்டிருந்தது. தனக்கு என்ன நேர்ந்தது, தான் ஏற்கனவே இருந்த இடம் என்ன,தற்போது இருக்கும்இடம் என்ன என்பதெல்லாம் எதுவுமே புரியாததுபோல ஏதுமறியாக அப்பாவியாய் அது அமர்ந்திருந்தது.

www.padippakam.com



'என்னப்பா இது' என்கிற பாவனையில் அவன் அப்பாசாமியைப் பார்த்தபோது அப்பாசாமி பார்க்காத மாதிரி முகத்தைத் திருப்பிக் கொண்டான். பத்மநாபன் யோசனையில் ஆழ்ந்தான். களைகட்டி வரும் வியாபாரத்தையும், கால்மணி நேரத்தக்கு ஒரு டீ குடித்து ஊர்ப் பஞ்சாயத்து பேசும் கும்பலையும், அவர்களுக்கு அவ்வப்போது படியளந்து கொண்டிருக்கும் நபர்கள் மூலம் கிடைக்கும் வரும்படியையும் நாளாவட்டத்தில் தான் இழக்க வேண்டி வரும் என்பதை அவன் முன் கூட்டியே உணர்ந்தான். பழைய இடத்திலேயே நகர்த்திக் கொண்டு போய் வைத்து விடுவது சுலபம்தான் என்றாலும் அது புத்திசாலித்தனமான காரியமாக அவனுக்குப் படவில்லை. ரெண்டு பேருக்கும் நடுவில் இது பந்தாடுகிற மாதிரி ஆகிவிடக்கூடாது வேறு வழியைப் பார்க்க வேண்டும் என்று நினைத்தான். அன்று பூராவும் அவன் சோர்வுடனேயிருந்தான். ஆழ்ந்த யோசனைகளிலேயே பொழுதைக் கழித்தான். இரவு சாப்பாட்டுக்குப் பிறகு அவனுக்கு ஒரு மார்க்கம் கிடைத்தது.

அடுத்த நாள், ஏறக்குறைய எல்லா தலைகளையுமே எட்டணாவுக்கும், முக்கால் ரூபாய்க்கும் வெட்டும் பெருமாள் பண்டிதர் தனது 'கிராப் ஷேவிங் செய்யுமிட'த்தைத் திறக்கும் போது அதைத் தன் கடையெதிரில் கண்டான். அது சாந்தமாகவும் அமைதியாகவும் அமர்ந்திருந்தது. இரவு அங்க புராணம் வந்ததால் ஏற்பட்ட கடைத் தெருப் புழுதி எங்கு பார்த்தாலும் திட்டு திட்டாய் அப்பியிருக்க, ஒரு பாவமும் அறியாததைப் போல் அது அடக்கமாகக் குந்தியிருந்தது.

வழக்கமாய்ப் பொழுது விடிந்ததும் பக்கத்துக் கடையிலே அதைப்யார்த்து மனசைத் திருப்திப் பட்டுக் கொள்ள இருந்த அப்பாசாமி அது அங்கே காணாமல் இருப்பதைக்

படிப்பகம்

www.padippakam.com



கண்டு குழப்பமடைந்து கேள்விக் குறியோடு பத்மநாபனை நோக்கினான். பத்மநாபன் பதிலேதும் சொல்லாமல் மெதுவான புன்சிரிப்புடன் 'பார்பர் ஷாப்பை' நோக்கினான்.

பெருமாள் பண்டிதர் பக்தி சிரத்தையோடு அதைக் கையெடுத்துக் கும்பிட்டான். விடிய விடிய கடை திறக்கும் சமயத்தில் சுப சகுனம் போல் தன் முன்னே எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானால் தனக்கு அருள் கிட்டப் போகிறது; பெரிய சுபீட்சம் வரப் போகிறது; அதாவது சனி திசை ஒழிந்து சுக்ர திசை ஆரம்பமாகப் போகிறது என்று நினைத்தான். தினம் அதற்கு ரெண்டு வத்தி வாங்கி கொளுத்தி வைத்து, கடையில் லட்சுமி படத்துக்குப் போடுகிற பூவில் கொஞ்சம் கிள்ளி இடுக்கிலே செறுகி நமஸ்காரம் பண்ணினான்.

அதன் இடமாற்றத்தைப் பற்றி பூசாரிக்குத் தெரிந்திருந்த போதிலும், அது பற்றிய ஆராய்ச்சிகளில் இறங்க விரும்பாதவன் போலவோ, அல்லது அதன் மர்மத்தை அறிந்தவன் போலவோ, வியப்புக் கலந்த ஒரு பார்வை பார்த்து, லேசான புன்சிரிப்புடன் எப்போதும் போலவே குளுப்பாட்டிச் சிங்காரித்து தன் கடமையை முடித்து விட்டுப் போனான். இதல்லாம் நான் எதிர்பார்த்தது தான் என்பது போல, ஒவ்வொரு நாளும் விடிய அதை வேறு இடத்திலே தேடிப் பார்க்கும் நோக்கில் வருபவன் போல பராக்கு பார்க்கும் கண்களுடனே சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டு வந்தான்.

தர்மகர்த்தாவாக வரப் போகிறவர்களோ, நாட்டாண்மைக்காரர்களோ விநாயகர் தினத்துக்கும் வெவ்வேறு இடங்களில் கிரகப் பிரவேசம் செய்வதைப் பற்றி அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை. நெட்டையான தோற்றமுடையவனும் கால்களை உதறி உதறி

www.padippakam.com



நடப்பவனும், மோட்டுத் தெரு நாட்டாண்மைகளில் ஒருவனுமான தாடிக்கார குடிகாரன் மட்டும் ஒருநாள் பிற்பகலில் சாலையோரம் அனாதையாகக் கிடந்த உண்டியலை அவிழ்த்து எடுத்து ஆட்டிப் பார்த்து அதிலிருந்த முப்பத்து அஞ்சு பைசாவை—ஒரு பத்து பைசா, ரெண்டு அஞ்சி பைசா, மீதியெல்லாம் ரெண்டு பைசா,ஒரு பைசா—எடுத்துக் கொண்டு காலி உண்டியலை தெருவிலே வீசியெறிந்து விட்டு நடந்தான்.

பெருமாள் பண்டிதர் வியாகூலம் நிறைந்த கண்களுடன் அதைப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, தார் ரோடிலே உருண்ட உண்டியலை எடுத்து வந்து விநாயகருக்கு எதிரே கம்பம் நட்டு மாட்டி கட்டி வைத்தான். கீழவே ஒரு அட்டையில் 'இக்கட்டைகளையும் முக்கூட்டு விநாயகர் கைங்கர்யம்' என்று எழுதுவதாக மனதில் நினைத்து அவனுக்குத் தெரிந்த, மூணாங் கிளாஸ்,தமிழில் கோணல் மாணலாக எதுவோ எழுதி வைத்தான். முன்புறம் திட்டு திட்டாகக் கிடந்த பில்லாமூச்சிகளைச் செத்தி, பரவலாகக் கிடந்த குப்பை கூளங்களையும் பெருக்கி சுத்தம் செய்தான்.

எல்லாவற்றையும் முடித்து மனநிறைவோடு ஒருமுறை பார்த்து சரி செய்து—சற்று சாய்வாயிருந்த அட்டையை நேராக நிமிர்த்தி ஒழுங்கு பண்ணி விட்டு—கடைக்குள் நுழைந்தான். காலையில் இனி விநாயகரைத் தரிசிக்க வேண்டி வருவதால் குளிக்காமல் கடைக்கு வரக்கூடாது என்று நினைத்துக் கொண்டான். தினமும் வத்தியோடு ஒரு அஞ்சு பைசாவுக்கு சூடமும் வாங்கிக் கொழுத்தி தீப ஆராதனை காட்டி விடவேண்டும் என்றும் மனசுக்குள் சங்கல்ப்பம் செய்து கொண்டான்.

www.padippakam.com



ஆனால் நடுவில் ஒரு துரதிருஷ்டமான சம்பவம் நடந்து விட்டது. கடந்த ஏழெட்டு மாத காலமாகவே வயிற்று வலியால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தவளும், நாளுக்குபத்து தடவைக்கு மேல்'வச்ச சூத்து வாங்காமல்' கழிந்து கொண்டிருந்தவளுமான, பெருமாள் பண்டிதரின் பாரியாளும், கொயிந்சாமிப் பண்டிதரின் திருக்குமாரத்தியுமான ஸ்ரீமதி அகிலாண்டேசுவரியம்மாள், இடியுடன் கூடிய அடை மழை பொழிந்த ஒரு நாளின் நள்ளிரவில் சிவலோக பதவியடைந்து மறுநாள் தகனக் கிரியைகளும் நடந்து முடிந்தன.

நாடி நரம்பெல்லாம் ஒடுங்கி நடப்பதே தள்ளாட்டமாய்க் கிடந்தாலும், குஞ்சானும் குசுமானுமாய் ஆண்டுக்கு ஒன்று என்ற கணக்கில் பெற்றுத் தள்ளிய ஏழெட்டுக் குழந்தைகளை இழுத்துக் கட்டி மேய்த்துக் கொண்டிருந்த அவள் திடுதிப்பென்று இப்படி போய்ச் சேர்ந்தது பெருமாள் பண்டிதரை ஒரு மாபெரும் துயர சம்பவமாக ஆட்டி உலுக்கி விட்டது. விநாயகர் வரவையும் கிளி ஜோசியக்காரன் சொன்னதையும் நினைத்துப் பார்த்தான்.

'விநாயகர் படம் உனக்கு வந்ததாலே, வெட்ட வரும் பகையுமுன்னை விலகிப் போகும்;பட்டாடை நகைகளுடன் துட்டு சேரும்; பலநாளாய் தொடர்ந்து வந்த பாவம் நீங்கும்; இனி வரும் நாளில் திருநாளாய் மகிழ்ச்சி பொங்கும். என்றதோடு ''கடத் தெருவுல இத்தினி பேர் இருக்கும் போது அது உன்னத் தேடி உன் கடை முன்னாடி வந்துருக்குது. சாதாரணமா எல்லாருக்கும் கெடைக்கிற பாக்கியமா இது. இனிமே உனக்கு எந்த கொறையும் கெடையாது. இனி உனக்கு எந்த கஷ்டம் வந்தாலும் எல்லாம் சூரியனைக் கண்ட பனி போல மறையும்... இதெல்லாம் ஒரு மனுஷனுக்கு உபகாரம் செய்யத் தான் வருமே தவிர அபகாரம் செய்ய வராது. வர

www.padippakam.com



ஆனிமாசம் இருவத்தோராம் தேதியோட உன் துக்க மெல்லாம் தீந்துதுபோ......'' வாயைப்பிளந்துஅவன்சொல் வதைக் கேட்டுக் கொண்டிருந்து முதலில் கொடுத்த பத்து பைசாவோடு, கூடவே பத்து பைசா கொடுத்துவிட்டு வந்தவன் அந்த வாசகத்தின் பொருள் புரியாமல் குழம்பி னான். ஒரு வேளை சம்சாரத்தின் சாவுதான் தனக்கு பரோபகாரமா... என்பது அவனுக்குப் புரியவில்லை. அவன் தீவிர சிந்தனையில் ஆழ்ந்தான். மனைவி கருமாதிக்கு பத்திரிகை அடிக்கப் போன போதுதான் தெரிந்தது, ஜோசியக்காரன் சொன்ன தேதியும் அதுவும் ஒன்றாக வந்திருப்பது. அவனுக்கு எப்படி எடுத்துக் கொள்வது என்று தெரியவில்லை.

இடையில் மனைவிக்கு எட்டாந் துக்கம் கொண்டாடு வதற்கான செலவுக்கு ஒரு முப்பது நாப்பது ரூபாய் தேவைப்பட்டது. கையிலிருந்து அற்ப சொற்ப காசெல் லாம் சாவு செலவுக்கே சரியாய்ப் போய்விட யார் யாரிடமோ போய்க் கடன் கேட்டுப் பார்த்து அவன் சோர்வோடு கடைக்குத் திரும்பினான். அன்று பூராவும் தெருவையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான்.

வீட்டுக்குத் தெரியாமல், பெரியவர்கள் கண்களில் படாமல், தட்டி மறைப்பில் தம் அடிக்கிற பசங்கள் மட்டும் வந்து, தினத்தந்தியைப் புரட்டி கசக்கிப் போட்டு போனார்களே தவிர வருமானம் வருகிற கிராக்கியாய் எதுவும் இல்லை. நாள் முழுக்க இப்படியே உட்கார்ந்தி ருந்தவன் இரவு கடையைக் கட்டும் போது ஒரு முடிவுக்கு வந்தான்.

மறுநாள் அது மூன்று கடை தள்ளியிருந்த சுபான் சாயபு பெட்டிக் கடைக்கு எதிரில் அமர்ந்திருந்தது.

சாயபுக்கு வயது ஐம்பத்தைந்தைத் தாண்டியிருக்கும். எதிலும் 'ஏக் மாரா தோ துக்கடா' வெட்டு ஒன்று

www.padippakam.com



துண்டு இரண்டு என்றுஇருப்பவர். எத்தனை இடங்களைத் தாண்டி அது இங்கே வந்திருக்கிறது என்பதை அவர் நன்றாகவே அறிவார். எந்தச் சின்ன விஷயமானாலும் அதை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும் என்று நினைப்பவர் அவர். வழ வழா கொழ கொழா சமாச்சாரமெல்லாம் அவருக்குப் பிடிக்காது. எதிலும் ஒரு உறுதியோடும் தெளிவான முடிவோடும் நிற்பவர் .

காலையில் கடையைத் திறந்து பலகையைத் தூக்கி மேலே கொக்கி மாட்டும் போதே அதை ஒரு மாதிரியாகப் பார்த்து சிரித்துக் கொண்டார். உண்டியல் அட்டையையும் கூட கழுத்திலேயே கட்டி மாட்டித் தொங்க விடப்பட்ட நிலையில் கமுக்கமாக உட்கார்ந்து காட்சி கொடுத்தது அது. எத்தனை பேரால் கைகழுவி விடப்பட்டு இங்கே வந்திருப்பது இது......ஒரு மனுஷனின் வாழ்க்கையில், மகிழ்ச்சியிலாகட்டும், துக்கத்திலாகட்டும் அதில் அல்லாவைத் தவிர வேறு யார் சம்பந்தப்பட்டிருக்க முடியும்... இது தெரியாமல் கடைத் தெருவில் இருக்கிற இந்தப் பசங்களெல்லாம் அவனவன் சங்கடத்திற்கும் இது தான் காரணமென்று நினைத்து, இதைப்பார்த்து பயந்து போய் இங்கே கொண்டு வந்து போட்டு விட்டுப் போயிருக்கிறான்களோ ...... என்ன பசங்கள்...'' என்று நினைத்தார். சோடா பாட்டில்களையெல்லாம் எடுத்து ஸ்டாண்டில் மாட்டி, கல்லாப் பெட்டியைத் துடைத்து கடையில் ஏறி உங்கார்ந்த பிறகு 'எல்லோருக்கும் மத்தியில் இதைத் துணிச்சலோடு தன் கடையெதிரிலேயே வைத்திருக்க வேண்டும். வேறு எங்கும் அப்புறப் படுத்தக் கூடாது. சூடு பிடித்து வரும் வியாபாரத்தை நன்றாகப் பெருக்கி ஓஹோ என்று வாழ்ந்து, எல்லா பசங்களுக்கும் இதனால் எந்தக் தொந்தரவும் இல்லை என்பதை நிரூபித்துக்காட்ட வேண்டும்.'' அல்லது ரெண்டுத்துக்கும் சம்பந்தமில்லை என்றாவது அவன்களை

www.padippakam.com



உணர வைக்க வேண்டும். 'அல்லாஹு அக்பர்...' என்று சபதமெடுத்துக்கொண்டார்.

சாயங்காலம் பூசாரி வந்தபோது 'என்னா பாய் இது இங்க இருக்குது' என்றான். "எங்க கெடந்தா என்னா அது வெறும் கல்லுதான... அது என்னா அல்லாவா அது" என்றார் அவர், பூசாரி பதிலேதும் சொல்லாமல் சிரித்த படியே பூசையை முடித்துக் கொண்டு போய் விட்டான்.

அது அங்கேயே இருந்தது.

அடுத்த நாலாம் நாள் காலை பாய் பெயருக்கு ஒரு நோட்டீஸ் வந்தது. வெள்ளைக் குல்லாய் கவிழ்த்தது போன்ற தலை முடியும், எப்போதும் சுருட்டு வலித்ததால் ஒட்டிப் போன கன்னமும் உடைய அவர் நடுக்கத்துடன் நோட்டீசைப் பிரித்தார். முழுக்கவும் படித்து முடிப்பதற் குள்ளாகவே 'அரே அல்லா' என்று அலறினார். மொத்தத் தில் பிழைப்புக்கே உலைவைப்பதற்கான நோட்டீஸ் அது. சாலை அகலப்படுத்தப் போகிறார்களாம். சொந்த மண் அல்லாத ஹைவேஸில் ஆக்ரமித்திருக்கும், தலைநீட்டியிருக் கும் அல்லது குடிகொண்டிருக்கும் கடைகளை, நோட்டீஸ் கண்ட பதினைந்து தினங்களுக்குள் பிரித்து விட வேண்டும். தவறினால் சட்டப்படி நடவடிக்கை எடுத்து பொருள்கள் பறிமுதல் செய்யப்படும்...

எல்லா கடைகளுக்கும் தான் அப்படுப்பட்ட நோட்டீஸ் வந்தது என்றாலும் அவரால் அதை நம்ப முடியவில்லை, போன மாதம்தான் கடையைப் பிரித்துக் கட்டி, கழி கீற்றெல்லாம் மாற்றி ஐநூறு ரூபாய்க்கு மேலே செலவு செய்தது... அதற்குள் இப்படி ஒரு நோட்டீசா... அவர் அதைத் திரும்பித் திருப்பிப் பார்த்தார். அதிக விலை கொடுத்த வாங்கி விட்ட நோஞ்சான் ஆட்டை கசாப்புக் கடைக்காரன் பார்ப்பது மாதிரி முகத்தைச்

www.padippakam.com



சுளித்து வெறுப்போடு பார்த்தார். பிறகு அதன் பக்கம் பார்வையைத் திருப்பினார். அது காலையில் பூசாரி போட்ட பூசைகளுடன அழுத்தமாகக்குந்தியிருந்தது. கரடு முரடாய் ஏதோ பார்ப்பதற்குக் கொஞ்சம் உருண்டை வடிவாய்த் தோன்றிய அதன் மேனியில் எங்கு பார்த்தாலும் இழுத்த விபூதிப் பட்டைகளுடன் அது அவரைப் பார்த்து நமுட்டுத்தனமாய்ச் சிரிப்பது போலிருந்தது. அல்லது சீண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பது போல் தோன்றியது. பாய் தன் கரிய உதடுகளைக் கசப்போடு பிதுக்கி மனசுக்குள் ஏதோ மறுப்பு தெரிவிப்பவர் போல தலையாட்டிக் கொண்டார்.

மறுநாள் அது ஊரை விட்டுக் கொஞ்சம் தள்ளியிருந்த சாலையோரத்துப் புளிய மரத்தினடியில் கிடந்தது. இது காறும் உட்கார்ந்த நிலையில் சூரியோதயத்தைக் கண்டு வந்த அது அன்று மல்லாந்த வாக்கில் காண நேர்ந்தது. பட்டப்பகலில் ஒருவன் இல்லாவிட்டாலும் ஒருத்தன் வாயைத் திறப்பான். எதற்கு பொல்லாப்பு, என்று ராவோடுராவாக தன்மூத்த மைந்தர்களை வைத்து காரியத்தைக் கச்சிதமாக முடித்திருந்தார் பாய்.

காலையில் வந்த பூசாரி அது துப்புறவாகவே காணாமல் போய் விட்டதைப் பற்றி கொஞ்சமும் அதிர்ச்சியடையாமல், கற்பூரம் வாங்க கொண்டு வந்த காசில் கரீம்பீடி வாங்கி பற்றவைத்து புகைத்துக் கொண்டு அவன் பாட்டுக்கு போய்விட்டான். முக்கியஸ்தரும் மாசத்துக்கு ஏழரை மிச்சம் என்று அது பற்றி எதுவும் காதில் போட்டுக் கொள்ள விரும்பாமல் ஒரு மாதம் தெண்டமாய் அழுதததை எண்ணியே, அடிக்கடி சொல்லி அலுத்துக்கொண்டார். இப்படி ஒரு சம்பவம் நடந்ததாகவோ கொண்டதாகவோ ஜனங்களும் இது பற்றி அதிகம் கேட்டுக் கொண்டதாய்த் தெரியவில்லை,

எத்தனையோ மாதங்கள் உருண்டோடி விட்டன.

www.padippakam.com



தார்ச்சாலையும், டீக்கடைகளும், பண்டிதர்கடையும், சாயபு கடையும் அப்படியேதான் 'அசகொலையாமல்' ஊருக்கு புதுசாய் வந்த மின்சாரத்தில் சர்வீஸ் வாங்கி பளிச்சிட்டுக் கொண்டிருக்கிறது. ஹைவேஸ்ரோடு எப்போது விரிவு படுத்தப் போகிறார்களோ தெரியாது. நோட்டீஸ் மட்டும் ஆறுமாதத்துக்கொருதடவை தவறாமல் வந்து கொண்டிருக்கிறது.

இப்போது அது இவர்களையெல்லாம் விட்டுப் பிரிந்து வெகு தூரத்தில் தனியாகவும் நிராதரவாகவும் கிடந்தது. வழிப் போக்கன் எவனாவது அதன் மேல் சிறிது நேரம் குந்தி இளைப்பாறுகிறான். அல்லது மூட்டையை இறக்கி வைத்து ஆசுவாசப்படுத்திக் கொள்கிறான். தினம் உதிக்கும் சூரியன் தன் இளம் கிரணங்களை காலையிலும் மாலையிலும் அதன் மீது பாய்ச்சி ஒளியூட்டும் முயற்சியில் தோல்வி கண்டு வருகிறது. புளிய மரம் படர்ந்து விரிந்த தன் அடர்ந்த கிளைகளால் நிழல் கொடுத்து அதைப் பாதுகாத்து வருகிறது. சமயத்தில் எப்பவாவது சாலையிலே ஓடும் நாய் நின்று காலைத் தூக்கி அதைப்பார்த்து அபிஷேகம் செய்துவிட்டுப் போகிறது. □

செம்மலர் □ மே 1972 □

www.padippakam.com

# இழை

அவள் வாயிற்படியிலேயே நின்று வரவேற்புக் கொடுத்தாள். "இந்நேரம் வரிக்கும் சுத்திட்டு இப்பத் தான் வர்ரீங்களா!"

அவன் உள்ளே நுழைந்து சட்டையைக் கழற்றினான். "வரும் போதே ஆரம்பிச்சிட்டியா"

அவள் சட்டையை வாங்கி ஆணியில் மாட்டினாள். "பின்ன என்னா ஒண்டிக்காரி புள்ளைய வச்சிக்னு அவஸ்த பட்டுக்னு கெடப்பாளேன்னு கொஞ்சம்கூட இல்லாம சுத்திப்ட்டு வர்ரீங்களே... ஒரு நாளப் போல; தெனம் ஏழு மணிக்கி."

அவன் பேண்டைக் கழற்றி, லுங்கியை மாற்றினான். "ஆபீஸ் உட்டதும் நேரா ஊட்ல வந்து பூந்துக்கோடான்றியா."

அவள் கை கால் அலம்ப தண்ணீர் மொண்டு வந்து கொடுத்தாள். "இல்ல இல்ல. நீங்க சுத்திப்டே வாங்க. ஒரு நாளைக்கி போட்டு வச்சாதான் தெரியும் சோறு ஆக்காத. நீங்க என்னா:டாண்ணா எப்டியாவுது ஜாலியா பொழுத ஓட்டிட்டி வரணம்னு இருங்க. அது என்னாண்ணா எந்நேரமும் தூக்கி வச்சிக்னே இருடீன்னுது இடுப்ப உட்டு எறங்காம, நான் அதப்பாப்பனா, இல்ல சோத்த பாப்பனா".

படிப்பகம்

www.padippakam.com



அவன் செம்பை வாங்கிக்கொண்டு வாசல் பக்கம் போனான். "அடாடடா! என்னுமோ ரொம்ப காட்டிக் றியே ஒரேடியா, ஊர்ல இல்லாத விநோதம்போல. அங்கங்க கொழந்தைங்கள வச்சிக்னு ஆக்கல."

அவள் கொடியை ஆராய்ந்தாள். "ஆமாமா, மத்த புள்ளங்களாட்டமா இருக்குது இது. கீழ ஏறங்குவனாண்ணுது. எறக்கி உட்டா வீல்வீல்னு கத்துது. இன்னிக்கு சோறு வடிக்க உடல. ஒரே சத்தம். ஆத்தரம் வந்துது. நாலு வச்சேன் நாலு. இந்நேரம் வரிக்கும் கத்திப்ட்டு இப்பத்தான் தூங்குது."

அவன் முகத்தை அலம்பிக்கொண்டு காலி செம்புடன் திரும்பினான். "கொழந்தய பதமா வச்சிக்னு இருக்கத் தெரியல. போட்டு அடி. என் எதிர்க்க பாக்கணம் ஒரு நாளைக்கி; அது என்னா பழக்கம் அது. கொழந்தைய போட்டு அடிக்கறது."

அவள் டவல் எடுத்துக்கொண்டு வந்து கொடுத்தாள், "அக்கரையாயிருந்தா வந்து தூக்கி வச்சிக்னு இருக்கணம் அதுக்கு, எண்ணைக்காவது ஒரு நாளைக்காவது பொழு தோடே வந்து புள்ளைய தூக்கி வச்சிக்னு இருந்திருப்பீங் களா, புள்ளையாச்சே பொண்டாட்டியாச்சேன்னு ஒரு இது இருந்தாத்தான".

அவன் முகத்தைத் துடைத்துக்கொண்டான். "த சும்மா கெட. நாங்க தூக்கி வச்சிக்னே இருந்ததில்ல கொழந்தைய. என்னா வேற வேல வெட்டியில்லாமலா கெடக்கறம். எந்த நேரமும் தூக்கி வச்சிக்னு, ஊட்லேயே உக்காந்துக்னு இருக்க."

அவள் டவலை வாங்கி கொடியில் போட்டாள். "என்னாதான் அப்டி ஆபீஸோ இரவத்திநாலு மணி நேரமும். அங்கங்க உங்களாட்டம் உத்தியோகம் பாக்கற வங்க பொழுதோட ஊட்டுக்கு வரல்ல."

www.padippakam.com



அவன் லுங்கியை சரியாய் இழுத்துக் கட்டிக் கொண் டான். ''எவன் அவன் ஆபீஸ் உட்டதும் நேரா ஊட்ல வந்து பூந்துக்றவன்?''

அவள் மணையை எடுத்துப் போட்டாள். ''இல்ல இல்ல உங்களாட்டம் சுத்திப்புட்டுதான் வர்ராங்க. ஊடாச்சே வாசலாச்சேன்னு இல்லாம''.

அவன் மணையை சரிப்படுத்திக் கொண்டு உட்கார்ந் தான். 'சே ஒங்கிட்ட யார் பேசுவா. ஒரு விஷயம்னா நீ உடமாட்டியே அதோட'.

அவள் தட்டு எடுத்து வைத்து சோறு தோண்டினாள். ''பாவம் நல்லா அடிச்சிட்டேன். செவந்து கூடப்போச்சு முதுவு. பின்னா என்னா பின்ன. சும்மா கத்தனா. சோறு வேற வெந்து போச்சி. கொஞ்சம் உட்டா அழிஞ்சிடும் போல இருக்குது. கீழ உட்டா இது கத்துது. என்னா கத்துன்றிங்க...ப்பா?''

அவன் தட்டை இழுத்து வாகாய் வைத்துக்கொண் டான். ''அதான் வடிச்சி வச்சிட்டியே. அப்பறம் சும்மா ஏன் அதையே பேசிக்னு கெடப்ப தொண தொணன்னு''.

அவள் சோற்றை அள்ளி தட்டில் வைத்தாள். ''நீங்க கொஞ்சம் பொழுதோடே வந்து கூட மாட ஒத்தாசையா கொழந்தைய தூக்கி வச்சிக்னு இருந்தீங்கன்னா எவ்வளோ இதுவாயிருக்கும். நானும் தெனந்தான் சொல்றேன். நீங்க என்னாடாண்ணா நீ யென்னடி சொல்றது, நான் என்னடி கேக்கறதுன்னு கெடந்துட்டு வர்ரீங்களே ஒரு நாளப் போல''.

அவன் சோற்றில் நறநறத்த கல்லைத் தேய்த்துப் பொறுக்கினான் ''வாய்தான் இருக்குதே தவர ஒனக்கு காரியத்துல ஒண்ணுக் கெடையாது. எப்ப உக்காரேன். போடும் போதே கல்லு. இதக் கொஞ்சம் ஒழுங்கா கல்லு

www.padippakam.com



இல்லாம அரிச்சி போட்டுட்டின்னா அப்பறம் ஒன்ன புடிக்கவே முடியாது'.

அவள் எவர்சில்வர் குண்டானை வைத்து விட்டு அன்ன வெட்டியை வழித்தாள். "தோ நீங்க பாத்து வச்சிருக் கிறீங்களா ஆளு. அதுங்க கிட்டதான் கொழந்தைய குடுத்துட்டு ஒக்காந்து அரிக்கணும் ஆர அமர".

அவன் கிளறிக் கிளறித் தேய்த்து சோற்றை உற்றுப் பார்த்தான். "ஆமா! எதுக்கெடுத்தாலும் கொழந்தைய எடுத்துக்கோ. அது ஒரு சாக்கு உனக்கு".

அவளும் அவனோடு சேர்ந்து சோற்றைக் கிளறிக் கூடப் பொறுக்கினாள். "பின்னா என்னா நானு வேணும்னா ஆக்கிப்போடறேன். உங்களுக்கு கல்லோட போடணம்னு".

அவன் அவளுக்கு இடம் விட்டு நிமிர்ந்தான். "இல்ல இல்ல ரொம்ப பொறுப் போடதான் ஆக்கிடப் போடற நீ. வெளில சொல்லிக்காத."

அவள் சந்தேகமில்லாமல் கிளறிப் பார்த்து விட்டு குழம்புக் கிண்ணத்தை எடுத்தாள். "இந்த நெட்டு எடுக்காதீங்க, அங்க எங்க எங்கனா ஆபீஸ்ல சண்ட போட்டுக்னுவந்து சோத்து மேல மொறப்பக் காட்றீங்களா."

அவன் குழம்பைப் பார்த்து முகத்தைச்சுளித்தான். "மத்யானமும் வெண்டக்கா இப்பவும் அதே வெண்டக் காயா ஒரே கொழ கொழன்னு சே. இத உட்டா ஒனக்கு வேற எதுவுமே பதார்த்தம் கிடைக்காது இல்ல."

அவள் குழம்பு ஊற்றுவதைப் பாதியில் நிறுத்தினாள். "பதார்த்தம் ஒண்ணுமில்லன்னு உங்ககிட்ட சொன்னதுக்கு தான் காதுல வாங்கிக்காத பூட்டீங்க. அப்பறம் என்னா பண்றது. தெருவுல இதாம் வித்தும் போச்சி."

www.padippakam.com



அவன் சோற்றைப் பிசைந்தான் "ஏதாவது ஒரு சாக்கு சொல்லு. அப்பளம்னா நாலு வாங்கி வறுத்து வக்யறது. இதெல்லாம் கூடமா சொல்லணும் ஒனக்கு.

அவள் கையிலிருந்த கிண்ணத்தைக் கீழே வைத்தாள். "உங்களுக்கென்னா வாய்க்கி சுளுவா சொல்லிட்டுப் போயிடறதுக்கு. யார உட்டு வாங்கறதாம்".

அவன் அவளைப் பார்த்தான் "எத்தினி பசங்க போவுது தெருவுல".

அவள் அவனைப் பார்த்தாள். "ஆமா எல்லாம் நம்ப ஊட்டுப் புள்ளைங்க தான சொன்னதும் அப்படியே போய் வந்துட. எல்லா புள்ளைங்களையும் ஊருல நம்ப ஊட்டுக்கு வேல செய்ய தான் பெத்து போட்டு வச்சிருக்காங்களா எதுக்கெடுத்தாலும் டக்னு அனுப்ப"

அவன் அவளை முறைத்தான். "ஆமாமா உங் கொணத்துக்கு எதுவரும் கிட்ட, பாத்தாலே அது அது பயப்புடுது".

அவள் எழுந்து அறைக்குப் போனாள். "த இந்த மாதிரில்லாம் பேசாதீங்க. என்னாவாம் எனக்கு. எது ஒண்ணும் மனஸுல வக்யாத கேட்டா ஆவாதவளா".

அவன் அறையைப் பார்த்தான் "ரொம்ப ஆனவதான் போ. தோ தெரியுதே உன் லட்சணம். கொஞ்சம் நல்லெண்ணையாவது எடுத்தும் வா. அகட்டறா மாதிரி இருக்குது"

அவள் பாட்டிலோடு வெளியே வந்தாள். "எங்கனா ஓட்டல்ல சாப்ட்டுட்டு வந்திருப்பீங்க அதான் அகட்டுது.

அவன் எண்ணெயை விட்டு பிசைந்தான், "ஆமா எங்களுக்கு இதான் வேல; ஓட்டல்ல பூந்து தின்றது.



படிப்பகம்

www.padippakam.com



சம்பாதன அதிகம் பாரு போயும் போயும் ஒனக்கு புத்தி போவுதே. ஒண்டியா ஒட்டல்ல பூந்து தின்றதாம்''

அவள் மீண்டும் அறைக்குப் போனாள்'' ரொம்ப அக்கறைதான். போறதேயில்ல நீங்க ஒட்டலுக்கு''

அவன் அவளை பின்புறம் பார்த்தான். ''த உங்கிட்ட யார் பேசுவா; ரவன்னா மண்டையில இருந்தா பரவாயில்ல''.

அவள் மோர்க் கப்புடன் வெளியே வந்தாள். ''மண்டையில இருக்கறவளா பாத்து கட்டிக்கறத்தான அதுக்கு. எங்களுக்குதான் ஒண்ணுமில்லியே''

அவன் சோற்றை அளைந்தான். "நீ கொஞ்சம் சும்மாரு தாயே நீ. எதுக்கெடுத்தாலும் எதாவ தொண்ணு சொல்லிக்னு.''

அவள் ஷெல்பிலிருந்த உப்பு பாட்டிலுக்காகத் தேடினாள். ''நீங்க எதுவும் ஏடா கூடமா கேட்டுட்றது, எதுனா திருப்பிக் கேட்டா பேசாம கெட்றீன்றதா. மத்தியானம அப்டிதான் பொடவகாரன் வந்தான். எங்கிட்ட பொடவகாசி குடுத்துட்டன்னுதான சொன்னீங்க''

அவன் சோற்றைப் பார்த்தான். ''கொஞ்சம் கொழம்பு ஊத்து. ஒரே எண்ணெயா இருக்குது.''

அவள் கரண்டியில் கொஞ்சம் திட்டமாக அள்ளி ஊற்றினாள். '' அவனுக்கு காசு குடுத்துட்டன்னுதான சொன்னிங்க எங்கிட்ட. அப்புறம் ஏன் அவன் ஊட்டுக்கு வர்ரான்''

அவன் குழம்போடு வந்த காய்களை ஓரமாய் ஒதுக்கினான். ''ஊட்டுக்கு வர்ரவனெல்லாம் கடன் காசி கேக்க தான் வர்ரான்னு அர்த்தமா''

www.padippakam.com



அவள் மீண்டும் உப்பு தேடினாள். "எனக்கு தெரியாதா. பொடவகாரனுக்கு தர்ரேன்னு சொல்லி எடுத்து வேட்ட உட்டுப்ட்டு அவனுக்கு குடுக்காத உட்டுட்டு இருப்பீங்க. அதான் வர்ரான். என்னதான் அப்பிடி செலவோ எனக்குத் தெரியாம, உங்களாட்டம் ஆம்பளைங்க இப்படி தான் செலவு பண்றாங்களா"

அவன் சோற்றை விழுங்கினான். "சும்மா கெட ஒனக்கு ஒண்ணும் தெரியாது"

அவள் உப்பு பாட்டிலை எடுத்து பக்கத்தில் வைத்தாள். "ஆமாமா; ஆன்னா ஊன்னா இது ஒண்ணு கத்துக்கோங்க. எதுக்கெடுத்தாலும் உனக்கொண்ணும் தெரியாது. உனக்கொண்ணும் தெரியாதுன்னு. எங்குளுக்கு எதுனா தெரியும்ன்றீங்களா என்னா. உங்க திருட்டெல்லாம்"

அவன் மோர் சாதம் தள்ளிக் கொண்டான் "நீ இந்த மாதிரி தான் ஏதுனா பேசிக்னு இருப்ப அர்த்த மில்லாம"

அவள் கப்பை எடுத்து வைத்தாள். "யாரு? நாங்க அர்த்தமில்லாம பேசறமா...? ஊறுகா கூடம் ஆய்ப் போச்சி. எப்டின்னா சாப்டுங்க ஒரு வேளை."

அவன் மோரை ஊற்றிப் பிசைந்தான். "அதெல்லாம் பார்த்து கவனிச்சு வாங்கி போடாத. அவன் என்னா பண்றானோ......ஏது பண்றானோண்ணு ஆள மேய்க்கறதிலியே இரு நீ."

அவள் கால்களைக் கட்டிக் கொண்டு அவனைப் பார்த்தாள். "இப்ப எங்க விக்யுதாம் எலுமிச்சம்பழம்"

அவன் அவளைப் பார்த்தான். "ஊடு தேடி எடுத்தாந்து குடுப்பான் இரு"

படிப்பகம்

www.padippakam.com



அவள் தண்ணீர் மொண்டு வைத்தாள். "இத சொல்ல வந்துட்டீங்களே பெருசா. கொழந்தைக்கி ஒரு ஃபீடிங் பாட்டல் ரப்பர் வாங்கியாங்கண்ணு சொல்லி எவ்வளோ நாளாவுது. பாலாடையில போட்டா குடிக்க மாட்டேன் றான். மூக்கு சொம்புலியும் குடிக்கத் தெரியல. ரப்பர் மாட்டி உட்டா அவன் பாட்னு குடிப்பானில்ல"

அவன் தட்டை வழித்தான் "நாளைக்கி போவும் போது ஞாகபப்படுத்து சொல்றேன்"

அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள். "ஆமா அப்டியே வாங்கியாந்துட்றாப் போலதான்"

அவன் கையைக் கழுவினான். "எதுக்கும் வழி உட மாட்டியே நீ"

அவள் தண்ணீர் மொண்டாள் "ஆமா அந்த பொடவகாரனுக்கு குடுத்துட்டீங்களா இல்லியா, உண்மைய சொல்லுங்க"

அவன் தண்ணீர் குடித்தான். "இப்ப அதப் பத்தி என்னா ஒனக்கு"

அவள் காலியான டம்ளரை வாங்கி தவலையில் மொண்டாள், "அவன் ஊடு தேடி வர்றது நல்லா இருக்கா."

அவள் வாங்கிக் காலியாக்கினான். "எல்லாம் அடுத்த மாசம் குடுத்துக்கலாம். உடு"

அவள் குனிந்து அவன் சாப்பிட்ட தட்டைக் கழுவி னாள். "அதான கேட்டேன். நீங்களாவது சொன்ன படி நடந்துக்கறதாவது."

அவன் கைகளைத் துடைத்துக் கொண்டு எழுந்தான். "போதும் அதோட நிறுத்து."

அவள் தட்டை அலசி ஊற்றினாள். "ஒண்ணொன் னும் நீங்க இது மாதிரி பண்ணிட்டு எங்கிட்ட வந்து பொய்

www.padippakam.com



சொல்றது, அப்புறம் எதுனா கேட்டா தொண தொணன்னு பேசாதறீன்றது. திட்றது''

அவன் கொடியில் போட்டிருந்த பேன்டை துழாவி சிகரெட் பாக்கட்டை எடுத்தான். ''சும்மா கத்தாத. அடுத்த மாசம் குடுத்துக்கலாம்னா அதோட உடேன், என்னுமோ குடியே முழுவிட்டாப் போல பேகிக்னு''

அவள் தட்டு எடுத்து வைத்துக் கொண்டு சாப்பிட உட்கார்ந்தாள், ''எப்பிடியாவது போங்க. நீங்களாச்சி உங்க சம்பாதனையாச்சி. எங்க பூட்டிங்க. சோதனையா நானும் பாக்கறேன். நான் சாப்ட உக்காரும் போதுதான் இதுக்கு முழிப்பு வந்துடும். அதுங்காட்டியும் தெருவுக்கு பூட்டீங்களா''

அவன் கொளுத்திய சிகரெட்டுடன் திரும்பி வந்தான். ''த ஏன் இப்டி கத்தற. இங்கதான இருக்கறேன்.''

அவள் தூளியைக் காட்டினாள். ''கொழந்தையப் பாருங்க. முழுச் சிக்னான் போலருக்குது. ஒதச்சிக்றான்.'

அவன் சிகரட்டை வாயில் வைத்துக் கொண்டு தூளியை நெருங்கினான். ''ஒரு நிமிஷம் சும்மா உடாத• சாப்டதும் எனக்கு இது ஒரு வேல. ஒரு சிகரட் கூட நிம்மதியா புடிக்க உடாம''

அவள் கிண்ணத்தை வழித்தாள். ''ம...ம் வேணாம் வேணாம். தூக்காதீங்க. அப்டியே ஆட்டி உட்டுடுங்க. தூங்கிடுவான். முழிச்சிக்னாண்ணா அவ்வளோதான். ஒரே கூத்து. நான் சாப்டுட்டு வந்து பாத்துக்கறேன்.''

அவன் புகையை இழுத்து விட்டான். ''ஆமா அந்த புதுப்பாயில எங்க ஒண்ண காணோம்''

அவள் கையைக் கழுவிக் கொண்டு எழுந்தாள். ''அதுவா...பக்கத்து ஊட்ல கேட்டாங்கன்னு ஒண்ணு வெலைக்கி குடுத்துட்டேன்.''

www.padippakam.com



அவன் நேராய் நின்றான், ''வெலைக்கி குடுத்தியா''

அவள் சாமான்களை ஏறக் கட்டினாள். ''ஏன் என்னா பாய் நல்லா டிசைனா இருக்குது. யார்னா வந்தா போனா போட்டு ஒக்காரச் சொல்லலாம். எல்லா பாயும் பழசாய்ப் போச்சி. ஒண்ணு எனக்கு குடுத்துடேன் வெலைக்கின்னாங்க குடுத்துட்டேன்''

அவன் ஏணையை ஆட்டி விட்டு நாற்காலியில் உட்கார்ந்தான். ''எதுனா இருக்குதா ஒனக்கு. என்ன எதுனா கேட்டியா நீ''

அவள் தண்ணீர்த் தவலையை மூடினாள். ''ஏன்? பூரா பணமும் கையிலியே குடுத்துட்டாங்க''

அவன் சிகரெட்டைத் தட்டி புகையை உறிஞ்சினான். ''எவ்வளோவுக்கு குடுத்த. ரெண்டார்ர ரூபாய்க்கா''

அவள் துடைப்பம் எடுத்து எல்லாம் தள்ளினாள். ''ஆமா ரெண்டார்ர ரூபாதான சொன்னீங்க''

அவன் அவளுக்கு பெருக்க இடம் விட்டு நாற்காலியை விட்டு எழுந்தான், ''ஆமா சொன்னேன் அது என்னா வெல தெரியுமா''

அவள் பெருக்கி முடித்து துடைப்பத்தை மூலையில் வைத்தாள். ''என்னா வெல''

அவன் சிகரெட்டை அணைத்து ஜன்னலில் போட்டான். மூணே முக்கால் ரூபா. நூல் பாயி. இங்க எங்கியும் கெடைக்காது அந்த மாதிரி. நல்லாருக்குது. கெடக்கட்டுமேன்னு ரெண்டா வாங்கிப் போட்டேன்''

அவள் பழைய ரெட்டாள்பாயை விரித்தாள். ''பின்ன எங்கிட்ட ஏன் ரெண்டார் ரூபாய்ன்னு சொன்னீங்க. காலம் பூறா இதே மாதிரி பொய் சொல்லிக்னே இருங்க நீங்க''.

www.padippakam.com



அவன் புழுங்கிற உடம்பை துண்டால் விசிறிக் கொண்டான். "நீ போறதெல்லாம் இந்த மாதிரி தெண்டத்துக் குத்தான் போவ."

அவள் நீட்டு தலையணையை எடுத்து பாயில் போட்டாள். "மூணே முக்கால் ரூபாய்னு எனக்கென்னா தெரியும். நீங்க எதிலியும் எங்கிட்ட உண்மையை சொன்னாத்தான...புளுவு, புளுவு. உங்களுக்கு உடம்பெல் பெல்லாம் புளுவு."

அவன் படுக்கை விரிப்பை உதறி அவளிடம் கொடுத்தான். "எங்களுக்கு ஜோசியம். இந்த மாதிரி நீ எடுத்து பக்கத்து ஊட்டுக்கு வியாபாரம் பண்ணுவேன்னு"

அவள் செம்பும் க்ளாஸும் எடுத்துக் கொண்டு தவலையை நெருங்கினாள். "ஏதோ ஆசப்பட்டு கேட்டாங்க போவட்டும் போங்க. நீங்க மொதல்லியே உண்ம வெலய சொல்லிருக்கறத்தான. சொல்லியிருந்தா ஏன் இப்படி வருது"

அவன் வாசலில் வாயைக் கொப்பளித்து துப்பினான். 'நீ எது வேணும்னாலும் செய்துடலாம். அதுல ஒண்ணும் எதுவும் தப்பு கெடையாது. நான் எதுனா செய்துட்டா மட்டும் 'தம்'புடிச்சிக்கினு கத்துவ."

அவள் கிளாஸை வாங்கி சொம்பைப் போட்டு மூடி தலை மாட்டுப் பக்கமாய் வைத்தாள். "இப்ப என்னா செய்யச் சொல்றீங்க. குடுத்தது குடுத்தாச்சி"

அவன் தெருக்கதவை தாழ்ப்பாள் போட்டுத் திரும்பினான். "உன்ன என்னா செய்யச் சொல்றேன். உன் அறிவ மெச்சிக்கவேண்டியதுதான்"

அவள் தோட்டக் கதவை தாழ்ப்பாள் போட்டுவிட்டு வந்தாள். "இப்ப போயி பாயி இது மாரி மூணே மூக்கால் ரூபாயாம் இன்னும் ஒண்ணே கால் ரூபா குடுங்கன்னு சொல்லிவாங்கியாரச் சொல்றீங்களா"

www.padippakam.com



அவன் தலையணையில் படுத்தான். "உன்ன யாரு விக்யச் சொன்னதுன்னேன்"

அவள் பாயிலே படுத்தாள். "ஆமா ஒண்ணோட ஒண்ணு பழகறது ஒரு பொருளு ஆசப்பட்டு கேட்டா எப்டி இல்லண்றது."

அவன் கையை எட்டி விளக்கை அடக்கினான். "கேட்டா அவரு வரட்டும். கேட்டு சொல்றேன்னு சொல்றது."

அவள் முந்தானையை இழுத்து அப்பால் போட்டாள். "ஆமா போங்களேன். எவ்வளோ செலவு பண்ணிட்டுப் போறோம். இப்ப இதுலதான் குடி முழுவிடப் போவுதா. போவட்டும் போங்க"

அவன் அவள் மார்பில் கையைப் போட்டான். "நீ செஞ்சத மட்டும் தப்புன்னு ஒத்துக்க மாட்டியே. மூச்ச புடிச்சிக்னுதான பேசுவ"

அவள் ஒருக்களித்து அவன் முதுகை வளைத்தாள். "நீங்க செய்துட்ட தப்புக்கு எம்மேல பழியப் போடறீங் களா. நான் என்னா பண்ணுவேன் அதுக்கு"

அவன் கொஞ்சம் சரிந்து படுத்தான். "போதும் போதும். அதோட உடு நீ. அதியே பேசிக்னு கெடப்ப. உடாத."

அவள் தாலியை ஒரு புறமாக இழுத்து ஒதுக்கினாள். "இப்ப நான் பேசறனா இல்ல நீங்க பேசறீங்களா. எதிலி யும் நீங்க எங்கிட்ட உண்மைய சொல்றது கெடையாது. கட்டனவளாச்சே பொண்டாட்டியாச்சேன்னு ஒரு இது இல்லாம வேலக்காரி மாரி இல்ல வச்சிக்னு இருக்கறீங்க."

அவன் இருளில் அவள் முகத்தை ஆராய்ந்தான். "நான் அப்பவே சொல்லியிருப்பேன் மூணே முக்கா ரூபா தான்னு. நீ நான் எதுக்கெடுத்தாலும் கத்தறியே."

www.padippakam.com



அவள் மார்பிலிருந்த அவன் கையை விலக்கினாள். ''ஆமா நான் கத்தறத்தான் தெரியும் உங்களுக்கு ஒண்டிக் காரி புள்ளைய வச்சிக்னு பொழுதனைக்கும் லோல் பட்டுக்னு கெடக்கறாளேன்னு கொஞ்சமாவது நெனைக்க றீங்களா நீங்க. சமைக்கறதும். பாத்தரம் தொலக்கறதும், துணி தொவைக்கறதும், மாவு ஆட்றதும் ஊடு பெருக் கறதும்னு ஒரு நாளைக்கி எவ்வளோ வேல. உங்களுக் கென்னா ஜாலியா ஆபீஸ்சுத்திட்டு ஊருகத பேசிட்டு ஊடு வந்ததும் வேளைக்கி பொண்டாட்டியும் சாப்பாடும் இருந்துட்டா போதும்னு நெனைக்கிறீங்க; இங்க நான் ஊட்ல பட்ற கஷ்டம் தெரியுதா உங்ககளுக்கு. ஒரு நாளைக்கு இருந்துபாத்தீங்கன்னா தெரியும்...''

அவன் கையை எடுத்துக் காத்திருந்தான். ''எல்லாம் எனக்கு தெரியாமலா இருக்குது. ஆனா என்னா பண்றது சொல்லு. வேற யார் இருக்கா செய்யறதுக்கு...''

அவள் தலைமுடியை எடுத்து பின்னால் விட்டுக் கொண்டாள். ''ஆமா ரொம்ப தெரிஞ்சவர்தான் போங்க. கொஞ்சம் கூட பச்சாதாபம் இல்லாம எப்பப் பாத்தாலும் சொட சொட்டன்னிக்குனு... கொஞ்சம் இருங்க...இந்த கொக்கி வேறஎங்கியோ போய் மாட்டிக்னு இருக்குது வகத்தொக இல்லாம.'' ☐

விழிப்பு☐.........☐

www.padippakam.com

# ஊற்றுக் கண்கள்

வேலைவெட்டி எதுவுமில்லாமல் சும்மாவே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தால் ஒரு மாதிரி வெறி பிடித்தாற்போல இருக்குமே... அந்த மாதிரி ஒரு வெறி. என்ன செய்வது ஏது செய்வது என்று புரியாமல், செய்வ தற்கும் எதுவுமில்லாமல் வெறுமனேயே உழன்றுகொண் டிருப்பதானால் ஸ்மரணையே மங்கி ஒரு பிடிப்பற்ற நிலை தோன்றுமே அந்த மாதிரி ஒரு மந்தம். திண்ணையில் குத்துக்காலிட்டு அமர்ந்தபடி தெருவையே வெறித்து நோக்கிக் கொண்டிருந்தான் வீராசாமி.

ஒடு வேய்ந்த எதிர்வீட்டுக் கூரையின் வேல் மாலை வெய்யில் மங்கி அழுந்தியிருந்தது. பாசி ஏறி பழுத்துக் கறுத்துப்போன ஓடுகளின் மீது அதன் பிரகாசம் எடுபட வில்லை. வெளிறி வெளிறி கரைந்துகொண்டிருந்தது. கண் இமைக்கக்கூட மறந்த நிலையில் ஆடாமல், அசையா மல் குந்திக்கிடந்தான் அவன். முகம் அடிக்கடி சுருங்கி நெளிந்தது. கண்கள் இடுங்கி நெற்றி சுருங்கியது. கன்னத் தசைகள் சுருங்கின. மனதில் என்னென்னவோ வறட்சி யான நினைவுகள்.

''நம்பளுக்கும் ஒரு வேல கெடைச்சிருந்தா! இந்நேரத் துக்கு எப்படியிருந்திருப்போம். மூணு வருஷம் அநியாயமா ஓடிப்போச்சே...'' உதட்டைப் பிளந்து பல் லிடுக்குகளின் வழியே ஜீவனின்றி சப்புக்கொட்டிக் கொண்டான்.

உதவாக்கரையோ, உருப்படாதவனோ, அல்ல அவன். எவ்வளவோ கஷ்டத்திலும் அம்மா அவனைப் படிக்க வைத்தாள். எஸ். எஸ். எல். சி. பாஸ் பண்ணியதும், ஐ. டி. ஐ. அனுப்பினாள். ஜன்மத்தை உழைத்து உடம்பைத் தேய்த்து மாசா மாசாம் அனுப்பிய பணத்தில்

படிப்பகம்

www.padippakam.com



ஒழுங்காகாவே 'மோல்டர்' டிரேட் எடுத்து பாஸ் செய்து விட்டுவந்தான்.

வந்த நாளாக வேலை கிடைக்கவில்லை.

யார் இருக்கிறார்கள் அவனுக்கு வேலை வாங்கிக் கொடுக்க?எல்லார் மாதிரியும் கத்தை கத்தையாய் அள்ளி முதுகுப் புறம் கொடுக்க வக்கில்லாவிட்டாலும் ஜேபியில் செறுகுவதற்காவது நாலைந்து நோட்டுக்கள் வேண்டாமா? அதுகூட இல்லாவிட்டாலும் ஒரு பெரிய மனுஷனாவது. தெரிந்திருக்க வேண்டாமா...? சிபாரிசு செய்ய!

அவன் போகாத இன்டர்வ்யூ கிடையாது. கடனோ உடனோ வாங்கி அம்மா எப்படியோ அனுப்பிக்கொண்டு தானிருக்கிறாள். ஆனால்செலக்ஷன்...

படித்ததற்குத்தான் சர்டிபிகேட் இருக்கிறது. தொழி வில் தேர்ச்சி பெற்றதற்குத் தான் அத்தாட்சி இருக்கிறது. அப்புறம் எதற்காகவோ இன்டர்வ்யூவாம். அது எதற்கு... அதிலும் தொழிலோடு சம்பந்தப்பட்ட கேள்விகளாகவா கேட்கிறார்கள்? சும்மா ஒப்புக்கு... சம்பந்தா சம்பந்தமில்லமால்... ஏதோ கேட்க வேண்டும் என்பதற்காக அல்லவா கேட்கிறார்கள். இந்த மாதிரி கேள்வியெல்லாம் கேட்டுத்தான் செலக்ஷன் செய்ய வேண்டுமென்றால், அப்புறம் இந்தச் சர்டிபிகேட் எதற்கு...?

ஒவ்வொரு இன்டர்வ்யூக்குப் பிறகும், அவன் முகம் வாடி திரும்பினான், அல்லது திரும்பிக் கொஞ்ச நாளைக்குப் பிறகு முகம் வாடிப் போனான். அம்மா மூக்கில் இருந்த ஒரே ஒரு மூக்குத்தியையும் கழற்றி வைத்ததுதான் மிச்சம். அதுவும் போய்விட்டது. வீட்டில் இருந்த கொஞ்சம் சுமாரான வெங்கலப் பாத்திரங்களும் மார்வாடி கடையில் நிரந்தரமாய் குடியேறி விட்டன. தான் ஒரு வயசுப்பிள்ளை குடும்பத்துக்கு ஒத்தாசையாக ஒரு நாலணா சம்பாதித்துக் கொடுக்க வகையில்லாமல்

www.padippakam.com



சுழன்று சுழன்று வரவேண்டியிருக்கிறதே...! சதா இதுவே நெஞ்சையரிப்பதாக இருந்தது அவனுக்கு.

அந்த அவமான உணர்ச்சியில், இனிமேல் வேலையே கிடைக்காதா என்ற அவநம்பிக்கையில், அவன் மேலேயே அவனுக்குள் ஒரு வெறுப்பு எழுந்தது.

தெரிந்தவர்கள் சொல்கிறார்கள், "பாவம் அந்தப் புள்ளைக்கு ஒரு வேல கெடைக்கல பாத்தியா!" என்று.

ஆனால் எல்லோருக்குமா எல்லாமும் தெரிகிறது?

"நல்லா வேளா வேளைக்கி துன்னுப்புட்டு தீவட்டி தடியனாட்டம் சுத்தி வர்ரதப்பாரு..."

"இம்மாம் பெரிய புள்ள எதுனா ஒரு வேல வெட்டிக்கி போவணம்னு துப்பு இருக்க வேணா. எம்மாம் நாளைக்கி தான்பெத்தவங்களே வடிச்சி கொட்டிக்னு இருப்பாங்க..."

அக்கம் பக்கத்தில் இப்படியும் பேசிக் கொள்ளுகிறார் கள். நயினா கூட இதேதான் சொல்கிறார். வேலை என்னமோ வீடு தேடி வந்து இவன் போய் உடம்பு வணங்கி செய்யாத மாதிரியிருக்கிறது அவர்கள் பேச்சு. மனசே உடைந்து போய் விடுகிறது.

ஊரை விட்டு எங்காவது ஓடி விடலாமா... எதிலாவது தூக்கு மாட்டிக் கொண்டு தொங்கி விடலாமா... எதற் காக வாழ வேண்டும் இந்த உலகத்தில்? யாருக்கு நம்மால் பைசா பிரயோசனம்? எல்லோருக்குத் பாரமாக இருந்து கொண்டு...

சிலநேரம் இப்படியெல்லாம் கூட நினைக்க ஆரம்பித்து விடுவான். பித்துப் பிடித்தமாதிரி ஒவ்வொன்றையும் வெறுப்புடன் நோக்குவான். அம்மா மட்டும் மகனைப் பார்க்க மனம் வெதும்புவாள். கண்களிலிருந்து மளமள வென்று நீர் வந்து விடும். "நம்ம என்னாடா பண்றது...! ஒனக்கு ஒரு நல்ல நேரம் வரல்ல..." என்று மூக்கை சிந்திக் கொண்டு சொல்வாள்.

www.padippakam.com



"என்னமோ நேரம்..." வீராசாமி கசப்புடன் முனகிக் கொள்வான். அதன்அர்த்தம் எப்போதுமே அவனுக்கு பிடிபட்டதில்லை. "அந்த பாஸ்கரனும் என்னை மாதிரி தானே கிடந்தான். அவனுக்கு மட்டும் எங்கேயிருந்து வந்தது இந்த நேரம்...!"

வீட்டுக் கூரைமேல் வெய்யில் சுத்தமாய் மறைந்தே போய் விட்டது. எங்கும் பிரகாச மில்லாத வெளிச்சம். படித்துக் கொண்டிருந்தபோது இந்த மாதிரி மாலை நேரங்கள்ரெம்பஉற்சாகமாக இருந்தன.எந்த பேக்டரியிலே தான் வேலை செய்யப் போகிறோம் என்கிற கனவுகளிலே மூழ்கியிருப்பான் அவன். சக தொழிலாளர்களோடு கைகோர்த்துக் கொண்டு தொழிற்சாலை கேட்டுக்குள்ளே நுழைவதையும், கேன்டீனில் குஷாலாக பேசுவதையும் கண் முன்னாடி காண்பான். முதல் மாச சம்பளம் வாங்கியதும் அம்மாவுக்குப் புடவை, நைனாவுக்கு வேஷ்டி சட்டை; பாப்பாவுக்கு பூ பொட்டலம் எல்லாம் வாங்கிக் கொண்டு வீட்டுக்குள் நுழைகிற காட்சியை மானசீகமாக நினைத்து கிளு கிளுப்பான. எல்லாம் உயிரோட்டமுள்ள ஒரு வாழ்வின் மகிழ்ச்சிகரமான காட்சிகளாக, மனதில் ஓடிக் கொண்டிருக்கும்.

தினமும் இதே கனவு. நினைத்து நினைத்து, அந்த நினைப்பே வறட்சியாகி பொட்டல் நிலம் போல காய்ந்து விட்டது. மாலை அழுது வடிந்தது.

இருள் தன் கோரக் கரங்களை மெல்ல மெல்ல பரப்பி விரித்துச் கொண்டு வந்தது. பாஸ்கரன் வேலை முடிந்து வந்து கொண்டிருந்தான். களைத்து சோர்ந்த உடம்பு. ஆனால்முகத்திலே ஒருபிரகாசம். வேலை செய்து வியர்த்த முகத்தை நீர் விட்டுக் கழுவி கர்ச்சீப்பால் துடைத்து விட்டுக் கொண்டதும் கண்ணாடி மாதிரி பளபளக்குமே. அப்படி ஒரு பளபளப்பு! கையிலே டிபன் கப். தலையை

www.padippakam.com



கொஞ்சம் ஒழுங்காய்க் கோதி சரி செய்து கொண்டு வந்தவன், வீராசாமியைப் பார்த்ததும் லேசாய் ஒரு சிரிப்பு சிரித்தபடியே எதிர் வீட்டில் ஏறி நுழைந்தான்.

பதிலுக்கு ஒப்புக்குச் சிரித்தான் இவன். உயிரில்லாத சிரிப்பு. பழகிய தோஷத்து தொடர்பறுந்து போகாமலிருப்பதற்கு இப்போது இந்த சிரிபபு ஒன்று தான் பிணை. முகத்தில் தேங்கிய சோகத்துடன் அதை மறைக்கக்கூட முடியாமல் உதட்டை மட்டும் கோணையாக நெளித்து, லேசாய் ஒரு சிரிப்பு, போய் மறைந்தவனின் வீட்டு வாசற்படியையே விரக்தியுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

பாஸ்கரனை நினைக்க நினைக்க வீராசாமிக்கு வெறுப்பு எழுந்தது. வேண்டாதவனைப் பற்றி நினைக்கும் போது தோன்றுமே அந்த மாதிரி ஒரு வெறுப்பு. அவன் ஏன் எதிர் வீட்டில் கண்ணெதிரில் இப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறான். எங்காவது கண் மறைவாய் ஒழிந்து போய் விட்டிருக்கக் கூடாதா...

தினமும், மணிக்கணக்கு தவறாமல் டூடிக்குப் போவதும், தெருவிலே டிபன் கப்பை தூக்கிக்கொண்டுநாலு பேர் பார்க்க நடப்பதும், விடுமுறை நாட்களில் ரேடியோவை முடுக்கி வைத்து விட்டு, வெளி வெரண்டாவில் ஈஸி சேர் போட்டு சாய்த்து கொண்டு பாட்டு கேட்பதும்... எந்த வகையில் அவன் தன்னை விட ஒஸ்தி... தன்னை மாதிரியே தன்னோடேயே சுற்றிக் கொண்டிருந்தவன் தானே அவனும்... இப்படி நினைத்து ஆத்திரப்பட்டான் வீராசாமி.

ரொம்ப நெருங்கிப் பழகிய நண்பன் மேலேயா இந்த மாதிரி எண்ணமெல்லாம்... சே! என்ன இது... எங்கிருந்து வந்தது இந்த ஈனப்புத்தி... என்று சுதாரிக்கப் பார்த்தான். அவனால் சமாதானம் செய்ய முடியவில்லை.

இரண்டு வருடங்களுக்கு முன்பு, பாஸ்கரனுக்கும் வேலையில்லை. டிரெயினிங் முடித்துவிட்டு சும்மாதான்

www.padippakam.com



கிடந்தான். இரண்டு பேருமே வேலையில்லாதவர்கள். ஒன்றாகவேயிருந்தார்கள். ஒன்றாகவே சுற்றுவார்கள். டீக்கடையில்குந்தி பேசுவார்கள். வாண்டட்கலத்தில் ஏதாவது கண்ணில் கிடைக்குமா என்று மேய்வார்கள். ஒன்றாகவே அப்ளிகேஷன் போடுவார்கள். இன்டர்வ்யூ அல்லது ஆர்டர் எப்போது வருமோ என்று சேர்ந்தே அசை போடுவார்கள்.

பாஸ்கரனுக்கு கொஞ்சம் வசதி. கொஞ்சம்தான். ஏதேர அவன் அன்றாடச் செலவிற்காவது அவனிடம் காசு இருக்கும். அவன்தான் டீ வாங்கிக்கொடுப்பான். சிகரெட் வாங்கிக் கொடுப்பான். ஸ்டாம்ப் வாங்கி ஒட்டுவான். இண்டர்வ்யூக்கு எப்போதாவது ஒன்றாகப் போக வேண்டி வந்தால் கூட முடிந்தவரைக்கும் வஞ்சனையில்லாமல் செலவு செய்வான்.

மாலை நேரங்களிலே வழக்கமாய் உட்காருகிற சின்ன வாராவதியின் மேல் அமர்ந்து, வேலையில்லாதிருப்பதால் உண்டாகும் மனச் சடங்கங்கள் பற்றி இரண்டு பேருமே மனம் விட்டு பேசிக் கொள்வார்கள்.

''பத்து ரூவா சம்பளமாயிருந்தாலும் ஏதாவதொரு வேலையில இருக்கணும்ப்பா... வருமானம் ஒரு பக்கம் கெடக்கட்டும்... வேலையில இருக்கறேன்னாதான் நாலு பேர் மனுஷனாவே மதிக்கறான்......''

''இப்ப என்னா நாம்பளா வேல வேணாம்னு ஊட்லெ உக்காந்திக்னு இருக்கறோம்... கெடைச்சா தான!''

''எப்ப கெடைக்குமோ...!''

ஏக்கப் பெருமூச்சாக வெளிப்படும். அப்போது அதில் இரண்டு பேருக்குமே பங்கு இருந்தது.

ஆனால், இப்படியா தனிமைப்படுத்தப் படுவான்...!

படிப்பகம்

www.padippakam.com



அந்த இன்டர்வ்யூவும் இரண்டு பேருக்குமேதான் வந்தது. இரண்டு பேருமே தான் போனார்கள். எல்லோர் முகத்திலுமே குழப்பம் எத்தனை பேர் எடுப்பார்களோ... யார் யாருக்கு கிடைக்குமோ...

பாஸ்கரனின் தாய் மாமனுக்கு அந்த கம்பெனியின் மேனேஜிங் டைரக்டரின் மச்சான் பிள்ளை ஏதோ கொஞ்சம் பழக்கமாம். எப்படியோ... என்னென்னமோ ஜகஜ்ஜாலப் ப்ரயத்தனமெல்லாம் பண்ணி, பாஸ்கரனின் அப்பா அவனுக்கு ஒரு இடத்தை வாங்கி விட்டார். சொற்ப சம்பளம்தான்...! ஆனால் அது கூட யார் கொடுக்கிறேன் என்கிறார்கள்...

வீராசாமிக்கு அப்போது உண்மையிலேயே மகிழ்ச்சி தான். ரெண்டு பேராக அவஸ்தை பட்டுக் கொண்டிருக்காமல், ஒருத்தருக்காவது கிடைத்ததே என்ற மகிழ்ச்சி.

பாஸ்கரன் மட்டும் கொஞ்சம் வருத்தப்பட்டான்.

"என்னாடா இது கடைசில ஒனக்கு இல்லாம பூடுச்சே..!"

"நீ வேற ஏன்னாடா சுத்த இவனாயிருக்கற... எங்க ஓடிடப் போவுது... ரெண்டு பேருல யாருக்கு கெடைச்சா தான் என்ன...!

நம்பிக்கையோடு தட்டிக் கொடுத்தான்.

அந்த நம்பிக்கையெல்லாம் அடுத்தடுத்த இன்டர்வ்யூ களில் தகர்ந்து போய்விட்டது. அதனால் மட்டுமே மனசு தளர்ந்து போய்விட்டது என்றும் சொல்ல முடியாது. ஒன்றாகக் கூடியிருந்தவர்களில் ஒருத்தன் மட்டும் வேலைக்குப் போகிறான்; ஒருத்தன் சும்மா சுற்றிக் கொண்டிருக்கிறான் என்றால் அக்கம் பக்கத்தில் இருப்பவர்களுக்கு என்ன தெரிகிறது......

"ஒடம்பு வணங்கி ஒரு வேலைக்குப் போவ முடியல; சும்மா ஊர சுத்தி வருது பார்..."

www.padippakam.com



"அந்தந் புள்ள எங்கியோ போய் உடம்ப ஒழைச்சி சம்பாரிசிக்னு வருது. அதுங்கூட கூடி புடுங்கித் தின்னு கிறானே, நல்லா செக்கு ஒலக்கையாட்டம் இருந் துக்னு ..."

"ஓசிப் பொழப்பு... வெக்கங் கெட்டுப்போயி எச்ன டீகுக் சுத்துது அவன் பின்னால..."

சில வார்த்தைகள் இவன் காதுபடவே விழுந்தன சில சிலர் மூலம் கேள்விப்பட்டான். முதலில் ரோஷம் தாங்காமல் கொதிப்பு ஏற்பட்டது. யோசிக்க யோசிக்க அதுவும் அடங்கி மனசே நைந்து போய் விட்டது.

'நாம்ப யாரு அவன் காசில் போய் டீ குடிக்க... அவனே பிரியப்பட்டு வாங்கிக் கொடுப்பதானால் கூட வேண்டாம் என்று சொல்லிவிட்டு விந்துவிட வேண்டியது தானே... சம்பாதிக்காத கட்டைக்கு டீ என்ன ஒரு கேடு...'

பாஸ்கரன்கூட அதிகம் சுற்றக்கூடாது; எங்கு வெளி யில் போகக்கூடாது' என்று நினைத்துக்கொண்டான். ஏதாவது பேசவேண்டியிருந்தால் மட்டும்; என்ன என்று கேட்டால்... என்ன... என்று பதில் சொல்கிற அளவு பழக வேண்டும் என்று நினைத்தான்.

பாஸ்கரனின் அப்பா கூட, "எந்த நேரமும் அந்தப் பையனோட என்னடா சுத்திக்னு...நம்ப சம்பாரிச்சு நாலு காசி மிச்சம் பண்ணி புத்தியோட பொழைப்பம்னு இல்லாம..." என்று சொன்னராம்.

அதைவிட டீக்கடையில் ஒரு அருமையான சம்பவம் நடந்தது. மாமூலாகப் போகிற கடைதான் என்றாலும், கொஞ்ச நாளாகவே டீக்கடைக்காரன் போக்குகூட

த—9

www.padippakam.com



இவன் விஷயத்தில் ஒரு மாதிரியாக, ரொம்ப அசட்டை யாக இருப்பது போல் தோன்றியாது.

இரண்டு பேருக்குமே டீ போட்டு வைத்தான் அவன். அதில்தான் எத்தனை வித்தியாசம்?

வீராசாமிக்கு உண்மையிலேயே கோபம் வந்தது. க்ளாஸைத் தூக்கி முகத்துக்கு நேரே பிடித்து, "என்னாபா... டீயா இது...!" என்று கேட்டான்.

"ஏன் என்னாவாம்...?"

"என்னா; என்னாண்ற...... எப்படியிருக்குது உன் கண்ணுக்கு?"

கடைக்காரன் ஒன்றும் பதில் பேசவில்லை. கிளாஸை வாங்கிவைத்துவிட்டு, "குடிக்கறதே ஓசி டீ.. இதுல வீறாப்புல ஒண்ணும் கொறைச்சல் இல்ல" என்று முனகி கொண்டே வேறு டீ போட்டுக் கொடுத்தான்.

பாஸ்கரனுக்கு இது காதில் விழுந்ததோ இல்லையோ! விழுந்தால்கூட இதற்காகவெல்லாம் பரிந்துகொண்டு போவான் என்று சொல்ல முடியாது. அவன் சுவாபம் ஒரு மாதிரி. எதிலும் தொட்டுக் கொள்ளாமல் போகிற சுவாபம். நியாயத்தைக் கேட்க தனக்கு உரிமையிருக்கிறது என்று தெரிந்தால்கூட, என்னத்திற்கு வீண் வம்பு என்று பேசாமல் போகிறவன். அதற்காகப் பின்னால் நினைத்து வருத்தப்படுவதைக்கூட அவனிடம் எதிர்பார்க்க முடியாது. அவன் பேசாமல் வழக்கம் போல சாவதான மாகவே டீயைக் குடித்துக் கொண்டிருந்தான்.

வீராசாமிக்கு உள்ளேயே வெந்தது. டீ குமட்டியது. டீ க்ளாஸை பொட்டென்று வைத்துத் தன் பலவீனத்தை வெளியே காட்டிக் கொள்ள விரும்பாமல் பல்லைக் கடித்துக்கொண்டு குடித்து பொறுமையாகவே அங்கிருந்து வெளியேறினான்.

www.padippakam.com



அதிலிருந்து பாஸ்கரனோடு எங்கும் வெளியில் போவதில்லை அவனாகவே வந்து கூப்பிட்டால்கூட "நான் வல்லப்பா...நீ போயிட்டு வா" என்று சொல்லி அனுப்பி விடுவான்.

அதற்காக பாஸ்கரன் வருத்தப்பட்டதாகவோ, சங்கடப்பட்டதாகவோ தெரியவில்லை.

"ஊருல எதனா பேசிம் போறாங்க... அதுக்காக நீ ஏண்டா கவலைப்படறே"

"நமக்குள்ளே இதெல்லாம் என்னடா கெடக்குது"

இப்படி அவன் ஏதாவது சமாதானம் சொல்லி ஒரு சகஜ பாவத்தை ஏற்படுத்தியிருந்தாலும், நன்றாயிருந்திருக்கும். ஆனால், அவன் எதுவுமே பேசவில்லை. எப்போதும் போலவேஇருந்தான். சனியன் தொலைந்தது என்று விலகி ஓடிவிட்ட மாதிரியும் தெரியவில்லை. ரொம்ப ஒட்டுதலாயிருக்கிற மாதிரியும் தெரியவில்லை.

சொல்லப்போனால் வீராசாமியின் நிலைமையை புரிந்துகொள்ளாதவனாய்... அதை ஒரு பொருட்டாய்க் கருதாதவன் போலவே இருந்தது அவன் போக்கு.

வீராசாமிக்கு உள்ளூர வருத்தம் ஏற்பட்டது.

நாளாக ஆக, நண்பன் எங்கோ வெகு தூரம் விலகிப் போய் விட்டது போல் ஆகிவிட்டது. அதுவும் போன வருஷம் அவனுக்குக் கலியாணமும் ஆகிவிட்ட பிறகு... தொடர்பே சுத்தமாய் விட்டுப்போன மாதிரிதான்.

காலையில அவன் வேலைக்குப் போகும்போது ஒரு முறுவல். மாலையில் வீடு திரும்பும்போது ஒரு முறுவல். இதுதான் பழைய பழக்கத்துக்கு அத்தாட்சி...

அம்மா தலையில் கைவைத்து, தூணில் சாய்ந்து குந்தியிருந்தாள். கிராமமாயிருந்தலும் நடவு நடவோ அறுப்பு அறுக்கவோ போய் ஒரு முக்கால் ரூபாயாவது

www.padippakam.com



சம்பாதித்துக்கொண்டு வருவாள். நகரத்தில் இவளுக்கு என்ன வேலை கிடைக்கும். நைனா ஒரு மூலையிலேயே குந்தி எல்லாவற்றையும் எரிச்சலுடன் பார்த்துக் கொண்டிருந்தார். எலும்புந் தோலுமாய் சும்மா உடம்பில் சும்மா உயிரை வைத்துக்கொண்டு... அவரால் எதுவுமே முடியாது. உடம்பு நல்லாயிருந்தவரைக்கும் கொலுத்து வேலைபார்த்தார். பாழய்ப்போன இந்த இளைப்பு இருமல் நோய் வந்ததிலிருந்து அவர் எந்த வேலைக்கும் போவது கிடையாது. யாரும் கூப்பிடுவது மில்லை.

வீடு இழவுக் கோலத்தில் காட்சியளித்தது. மத்தியானத்தில் எதுவும் கிடையாது என்பது தினப்படி பழக்கப்பட்டுப்போன விஷயம். ராத்திரிக்காவது என்ன செய்வது என்பதுதான் இப்போது எல்லோருக்குமே பிரச்சினை.

அடுப்பிலே சாம்பல் கூட இல்லாமல் வாயைப் பிளந்து கொண்டு பசியோடு காத்திருந்தது. சோற்றுப் பானையும், குழம்புச் சட்டிகளும் காலையில் துலக்கி வைத்த கோலத்திலேயே கருமை பளிச்சிள அழுக்குப்படாமல் இருந்தன. பழஞ்சோறு என்பது ராத்திரியில் சமைத்து, விடிந்ததும் மிகுந்து கிடந்தால் மட்டுமே கிடைக்கக்கூடிய ஒன்று. ராத்திரியே அடுப்புக்கு எந்த வேலையும் இல்லை. பாப்பாவே ஒன்றும் சாப்பிடாமல் வெறும் வயிற்றோடு தான் ஸ்கூலுக்குப் போயிருக்கிறது. அம்மாவைக் காணச் சகிக்கவில்லை.

பிணத்தைக் கிடத்திவைத்து வெறித்துப் பார்ப்பதைப் போன்ற சோகமயமான அந்த அமைதியைத் தாங்காதவனாக வீராசாமி வெளியில் வந்தான். கொஞ்சம் யோசித்து முன் அறைக்குப் போனான்.

"டீ"ன்னா—ஒண்ணு போயி குடிச்சிட்டு வர்ரீயாடா... அதுக்குகூட எட்டு பைசாதான் இருக்குது... ரெண்டு

படிப்பகம்

www.padippakam.com



பைசா இருந்தா போட்டு குடிச்சிட்டுவா... போ!'' என்று முந்தானையைப் பிரித்தாள் அம்மா. அவள் குரல் அடைப்பட்டு கரகரத்தது.

''வேண்டாம்மா... இருக்கட்டும் வச்சிக்கோ...!'' என்றான் வீராசாமி.

தூசு தும்பு படிந்த பழைய மக்கிப்போன அட்டைப் பெட்டியைத் திறந்தான். உள்ளே பழைய ஹைஸ்கூல் புத்தகங்கள் நோட்டுகள், பைண்ட் நோட்புக்குகள். பிராக்டிகல் தியரிகள்... எப்போதாவது தடமாடிப்போய் வந்து தங்கிவிடும் வாரப் பத்திரிகைகளெல்லாம் பழுப் பேறிப்போய் அடைத்துக் கிடைந்தன.

எல்லாவற்றையும் கிளறி நோண்டிப் பார்த்து ரொம்ப முக்கியமானவை என்று தோன்றியதைத் தவிர மற்றதை யெல்லாம் எடுத்து பிய்த்து நூலையும் பின்கிளிப்பையும் அகற்றி தரையில் அழகாய் அடுக்க ஆரம்பித்தான்.

''எதுக்குடா இதெல்லா?'' என்றாள் அம்மா

''கடையில போடறத்துக்கும்மா...''

''படிச்ச பொஸ்தகத்தை யெல்லாமா...''

''வேற என்னா பண்றது...''

அதற்குமேல் அம்மா எதுவும் பேசவில்லை. எல்லா வற்றையும் ஒழுங்காய்த் தட்டி அடுக்கிச் சுருட்டி எடுத்துக் கொண்டு வெளியே வந்தான் அவன்.

மளிகைக் கடைக்குப் போக வேண்டும். தெருவில் இதைத் தூக்கிக் கொண்டு போக வேண்டுமே... என்று கூச்சம் எழுந்தது. அசிங்கமான பொருளைத் தூக்கிக் கொண்டு போக வேண்டும் என்கிறபோது எழுகிறதே... அந்த மாதிரி கூச்சம் இல்லை. தன் வறுமையை தெரு வுக்கு பறை சாற்றுகிற மாதிரி இந்த பழைய கூளத்தை

www.padippakam.com



விற்று காசாக்குகிற நிலைமையை ஓடி ஓடி ஒவ்வொருத் தரிடமும் சொல்லிக் காட்டுகிற மாதிரி... ஊர்வலமாய்த் தூக்கிக் கொண்டு போக வேண்டுமே என்ற கூச்சம்.

பாஸ்கரனுக்கு வேறு இன்று விடுமுறை. அவன் வேறு பார்த்தாலும் பார்ப்பான். தெருவில் எத்தனை கண்கள் நோக்குமோ... பாஸ்கரன் இல்லாமலே தன்னால் கௌரவத்துடன் வாழ முடியும் என்பது போல வீறாப் புடன், சுய மரியாதை குறையாமல் எல்லோரிடமும் கட்டுத் திட்டமான மிடுக்குடனே பழகி வந்ததற்கெல் லாம் உலை வைக்கிற மாதிரி...' விளக்கு வைக்க இருட்டின பிறகாவது கொண்டு போய்ப் போடலாமா என்று நினைத் தான்.

தெரு வெறிச்சென்றிருந்தது. மனசையிறுக்கிக் கொண்டு, எதிர் வீட்டை ஓரக்கண்ணால் பார்த்தபடியே நடையைக் கட்டினான்.

கொஞ்சம் தூரம் போயிருக்க மாட்டான். அதற்குள் சூபர்வைசர் வீட்டிலிருந்து பாஸ்கரன் எதிர்ப்பட்டான். உடம்பே ஒரு ஜாணாய் குறுகிப் போய் விட்டது. தரை யைப் பார்த்தபடி நடந்தான் வீராசாமி,

“எங்க கடைக்கா...” என்றான் பாஸ்கரன்.

அவனுக்கு பதில் சொல்ல நிமிர்ந்தான் இவன், பாஸ்கரன் முகத்தில் ஒளியே இல்லாமல் கண்கள் இருண்டு போய்க் கிடந்தன.

“என்னா ஒடம்பு சரியில்லையா...?”

“இல்ல... கம்பெனி ஸ்டிரைக்...”

“ஸ்டிரைக்கா?”...”

கொஞ்சம் ஆச்சரியத்துடன் கேட்டான். உள்ளூர ஜிலுஜிலுவென்று எதுவோ சுரந்தது. அதை வலிந்து

படிப்பகம்

www.padippakam.com



அடக்கி முகத்தில் கொஞ்சம் அநுதாபத்தை வரவழைத்துக் கொண்டு, ''அப்பிடியா எனக்கு தெரியாதே... எத்தினி நாளா...'' என்றான்.

''நாலு நாளா... இதோட அஞ்சாவது நாளு...''

''உன்ன வெளியிலியேகாணோம்...''

''உள்ளவே கெடந்துடறது. என்னுமோ மாதிரி இருக்குது. வேலைக்கி போயிட்டு சும்மா ஊட்டுல ஒக்காந்திங்கிறதுன்னா...''

நண்பனின் மனசுத் திருப்திக்காக ஒரு சப்புக் கொட்டி விட்டு அப்பால் நகர்ந்து நடந்தான் வீராசாமி. அவனைக் கடந்ததும் முகத்திலே ஒரு பிரகாசம் ஜொலிப்பு. குரோதம் கலந்த சிரிப்பு. ஸ்டிரைக்கா... சந்தோஷம்... இனிமேல் அவனும் வேலையில்லாமல் குந்திக் கிடக்க வேண்டியதுதான்.

மனசில் பெரிய திருப்தி தோன்றியது. சற்று முன் தோன்றிய பெரிய பெரிய விசனமெல்லாம் இப்போது ரொம்ப துச்சமாகத் தெரிந்தது. அர்த்தமற்ற கவலையாகத் தெரிந்தது.

இந்த ஸ்டிரைக் இப்படியே நீடித்தால்... கம்பெனியைச் சுத்தமாய் இழுத்து மூடி விட்டால்... அவனும் தன் மாதிரியே...

இப்படியெல்லாம் சரசரவென்ற எண்ணங்கள்....

சே! என்ன இது... இவ்வளவு கொடூரமாய் நினைக்கிறோமே... கீழ்த்தரமாய்...மட்டமாய்... என்றும் நினைத்தான், அவனால் நினைக்கத்தான் முடிந்ததே தவிர, அணை போட முடியவில்லை.

பெருமிதத்துடன் நடந்தான். பேப்பர் கட்டு பளு தெரியவில்லை. தலை குனியாமல் நிமிர்ந்து அலட்சிய

www.padippakam.com



மான பார்வையுடன் நடந்தான். உண்மையில் அதற்கு அர்த்தம். 'பாஸ்கர் ...பாஸ்கர்... என்று பீத்திக் கொள்கிறீர்களே... பார்த்தீர்களா அவனுக்கு வந்த கதியை... வேலை விஷயம் உண்மையில் அப்படித்தான்... அவனவன் இஷ்டத்துக்கு இல்லை இங்கே வேலை...' என்பதுபோல இருந்தது.

அதற்குப் பிறகும் மறுநாளும் பாஸ்கரனை தெரு முற்றத்தில் பார்க்கும் போதெல்லாம் இதே நினைவே தான் எழுந்தது. அவன் ரொம்ப கிட்டத்தில், மிக நெருக்கத்தில் வந்து விட்டதாகத் தோன்றியது.

போய்த் துக்கம் விசாரிக்க வேண்டும்... பழையபடியே நட்பு பாராட்ட வேண்டும்... என்று நினைத்த போதிலும், எதுவும் பேசாமல் ரொம்ப அழுத்தமாகவே கம்மென்று இருந்தான் அவன்.

அவனா வரட்டுமே...''

பொழுது உற்சாகமாக விடிந்தது. ஜனங்கள் உற்சாக மாயிருந்தார்கள், அம்மா சோற்று மூட்டை கட்டிக் கொடுத்தாள். நைனா முகத்திலும் ஜீவன் தோன்றியது. தெரு கல கலப்பாயிருந்து, கார்களும் பஸ்களும் ஹாரன் அடித்து ஓடின. ஜட்கா வண்டிக் குதிரைகளின் சலங்கைகள் குலுங்கின. பேக்டரி சங்கு மகிழ்ச்சிப் பெருக்கோடு பெருமிதம் பொங்க ஊதி அழைத்தது.

வீராசாமிக்கு வேலை கிடைத்து விட்டது.

வேலை ஒன்றும் பெரிய வேலை இல்லை. தினக் கூலி தான். ஆறு மாசமோ ஒரு வருஷமோ பொறுத்து திருப்தி பட்டால் பர்மனன்ட் செய்வார்களாம். அதுவரைக்கும் டெம்பரவரிதான்.

அவனுக்கு உடம்பெல்லாம் கிளுகிளுத்தது. நரம்புகள் புடைத்து, முறுக்கேறுவதைப் போலிருந்தன. இத்தனை

படிப்பகம்

www.padippakam.com



காலமும் தேங்கிக் கிடந்த சக்திகளெல்லாம் ஒரு சேர திரண்டு ஒரு புதிய பலத்துடன் வெளிப்படுவதைப் போலிருந்த்து, உலகத்தையே அடித்து நொறுக்கித் தகர்த்து வெற்றி கொள்ளப் போகும் உவகையுடனும் உற்சாகத்துடனும் அவன் தெருக்களிலே நடந்தான். பெருமிதத்தால் நெஞ்சு விம்மியது. தன்னுள்ளே இத்தனை காலமும் உறைந்து கிடந்த ஆற்றல்களையெல்லாம் எண்ணி வியந்தவனாக கம்பெனி வாயிலில் நுழைந்தான். மலர்ச்சி பொங்கும் முகத்துடனே வேலை செய்யத் தொடங்கினான்.

திடீரென, பாஸ்கரனின் ஞாபகம் வந்தபோது, அவன் மிகவும் சோர்ந்து போனான். அவனது முகம் கறுத்து இருண்டது. சுறுங்கிச் சூம்பியது. மகிழ்ச்சியும் உற்சாகமும் எங்கேயோ போய் மங்கி மறைந்தன. அனைத்துமே ஒரு நாள் கூத்துக்காக போடப்பட்ட வேஷம் போல வெளிறித் திகட்டியது. பிடிபடாத ஏதோ ஒரு நிராதரவான நிலையை மங்கலாய் உணர்ந்தான். சுற்றிலுமுள்ள எல்லாமே ஏதோ அர்த்தமற்ற சூன்யம் போலத் தோன்றி யது. செயலற்றவனாக அப்படியே நின்றான்.

அவனது வெறித்த கண்களிலே ஆயிரமாயிரம் தொழிலாளர்கள் வந்து மறைந்தார்கள். சாரிசாரியாக நின்றபடி லேத்துக்களில் எலும்பொடிய வேலை செய் கிறார்கள். வாங்கிய சம்பளத்தை என்ன செய்வதென்று தெரியாமல் குழப்பமடைந்தவர்களாக கலவரத்துடன் விழிக்கிறார்கள். கைகளை உயர்த்தி கோஷமிட்டபடி தெருக்களில் நடந்து செல்கிறார்கள். மூடப்பட்ட கம்பெனி வாயிலை முற்றுகையிட்டு போராடுகிறார்கள். சிலர் கம்பெனி வாயிலில் காத்துக் கிடக்கிறார்கள். சோர்ந்து வீடு திரும்புகிறார்கள். அந்த முகங்களைக் காணச் சகியாமல் வதைந்தான் அவன்.

www.padippakam.com



இருள் கவிந்த அந்த முகங்களுக்கு அப்பால், கொழுத்த பூதாகரமான உருவம் ஒன்று எங்கேயோ எக்காளமிட்டு கெக்கலி கொட்டியது. கொடூரமான அதன் கோரப் பற்கள் இன்னும் எத்தனை பேருடைய ரத்தத்தை உறிஞ்ச காத்துக் கொண்டிருக்கிறதோ...

அவன் தாங்க மாட்டாமல் தலையைச் சிலுப்பிக் கொண்டான். கொஞ்ச நேரத்துக்கு முன்னே ஏற்பட்ட மகிழ்ச்சி அவனுக்கே ஒரு அருவருப்பை அளித்தது. தன்னையே நொந்து கொண்டான். பாஸ்கரனைப் பற்றி நினைக்க நினைக்க அவனுக்கே துக்கமாயிருந்தது. அவனிடம் தான் சரியாக நடந்து கொள்ளவில்லை என்பதுபோல வேதனையுடனே அறிந்தான். அவனைப் பற்றிய சிந்தனைகளிலேயே வெகு நேரம் மூழ்கிக் கிடந்த பிறகு, கொஞ்சம் தெளிவு ஏற்பட்டது; நிம்மதி தோன்றியது. ஏதோ முடிவுக்கு வந்தவனைப் போல தனக்குத்தானே தலையை ஆட்டிக் கொண்டான். முகத்தில் திருப்தி நிலவியது.

பேக்டரி முடிந்து வீடு திரும்பும் போது, பையில் அன்றையக் கூலி இரண்டரை ரூபாய் இருந்தது. நேரே வீட்டுக்குக் கூட போகாமல் எதிர் வீட்டை அடைந்து, பாஸ்கர்' என்று அழைத்தான்.

பிராயச்சித்தம் போல் குரல் தழுதழுத்தது.

சோங்கிய முகத்துடனே வெளியே வந்தான் பாஸ்கர்.

"என்னாப்பா...!"

"என்னா பண்ற ஊட்டுல! சும்மாதான இருக்கற..." அவனது துக்கத்திலே உண்மையிலேயே இவனுக்கு பங்கு இருப்பதைப் போல் உணர்ந்த ஆதரத்துடன் கேட்டான். "வாயேன் சும்மா இப்படி டீக்கடைக்கா போயிட்டு வருவம்..."

www.padippakam.com



"டீக்கடைக்கா" பாஸ்கரன் குழப்பத்துடன் கேட்டான்.

"ஆமா. வா... ரெண்டு பேரும் சேர்ந்து போயி ரொம்பநாளாச்சி. ரெடியா இரு. தோ போய் சாப் பாட்டுக்கப்ப வச்சிட்டு வந்துடறேன்."

அவன் அழைப்பில் பழைய பழக்கத்துக்கும் மீறின சகஜபாவம் இன்னும் நெருக்கமாக வெளிப்பட்டது. □

செம்மலர் □ பிப்ரவரி 71 □

www.padippakam.com

# அவரோட லோகம்

காலை நேரம். அதாவது பலபல வென்று விடிகிற நேரம், பனிப்படலம் இன்னும் மறையவில்லை. காற்றில் பஞ்சு பறக்கிற மாதிரி லேசாய், பத்து கெஜ தூரத்தில் நிற்கிற ஆள் தெரியும். மாம்பலம் ரயில்வே ஸ்டேஷனில் வண்டியைப் போட்டிருந்தேன். டோரைத் திறந்து வைத்து, ஒரு கால் உள்ளும், ஒருகால் வெளியிலுமாக, வாங்கி வந்திருந்த நியூஸ் பேப்பரை விரித்து வைத்துக் கொண்டு குந்தியிருந்தேன், இன்னும் கொஞ்ச நேரத்தில் 'ட்ராண்ட்ரம் எக்ஸ்பிரஸ்' வரும். வந்ததும் சவாரி கிடைக்கும்.

சுற்றிலும் என்னைப் போலவே நிறைய டாக்ஸிகள் அணிவகுத்திருந்தன. ஏழெட்டு வருஷத்துக்கு முந்தி யென்றால் பட்டணத்தில் டாக்ஸி பஞ்சம், வண்டிக்கு கொராக்கி. தொழிலும் கௌரவமாக இருந்தது. இப் பவோ நாய்படாதபாடு, ரிக்ஷாக்காரன் பொழப்பாட்டம். அந்த அளவுக்கு வண்டி பெருத்துவிட்டது பட்டணத்தில் முந்திக் கொண்டால்தான் சவாரி. இல்லாவிட்டால் எம்ப்டிதான்.

பேப்பரில் ஒரு கண்ணும், சற்றைக் கொருதரம் தலையை நிமிர்த்தி தண்டவாளத்தில் ஒரு கண்ணுமாய், வண்டி வருகிற சத்தத்துக்குக் காது கொடுத்து உட்கார்ந் திருந்தேன்.

படிப்பகம்

www.padippakam.com



டீக்கடைகள், பெட்டிக் கடைகள் திறந்திருந்தன. 'விளையாட்டு விநாயகர் கடையும் '(கோவில்)' திறந்திருந் தது. விடிய விடிய குளுப்பாட்டி பொட்டிட்டு சிங்காரித்து வைத்திருந்த சாமி இங்கிருந்து பார்த்தாலே நன்றாகத் தெரிந்தது.

காலங் காத்தாலை வேலைக்குப் போகிறவர்கள் சாமியை வணங்கிவிட்டுப் போனார்கள். நல்லா டீக்காய் டிரஸ் பண்ணிக் கொண்டு டக், டக்கென்று பூட்ஸ்கால் ஒலிக்க வந்த ஒருவன் நின்று வணங்கிவிட்டுப் போனான். அப்பறம் பரபரப்பாக போகிற போக்கில் ஒருத்தன் கையை மட்டும் தூக்கி 'குட்மார்னிங்' போடுவது மாதிரி இல்லை சலாம் போடுவது மாதிரி போட்டுவிட்டுப் போனான். அப்பறம் ஒரு அய்யர் வந்தார்.

இந்த அய்யரை எனக்கு நன்றாகத் தெரியும். தெரியும் என்றால் பழக்கம் கிடையாது. தினப்படி இந்த நேரத் தில் பார்த்திருக்கிறேன். நல்ல உயரம். மெல்லிசாய் பூஞ்சை படிந்த மாதிரி தேகம். வயது நாப்பத்தஞ்சி ஐம்பதை எட்டும். கட்டுக் குடுமி, கறுப்பும் வெள்ளையு மாய். இடையில் பஞ்சக் கச்சம் வேஷ்டி. சிவப்பு உடம்பு, வெள்ளைப் பூணூல். வெள்ளை விபூதிப் பட்டை. எல்லாம் பளிச் பளிச்சென்று. உடலில் துளி அழுக்குப் பார்க்க முடியாது. அப்படி ஒரு சுத்தம். ஆசாரம்.

முணுமுணுவென்று எதையாவது, ஸ்லோகமாயிருக் கும் முணுமுணுத்துக் கொண்டே வருவார். இடதுகை மடக்கியிருக்க ஒரு பை முழங்கையில் தொங்கும். நடக்கும் போதே இப்படியும் அப்படியும், முன்னாலும் பின்னாலும் சலிப்பும் சிடுசிடுப்புமான பார்வை. எந்த அனாசாரம் எப்போது தன் மேல் பாயுமோ என்பது போல.

நாலு பேருக்கு மத்தியில் புகுந்து, நிறுத்தி வைத்திருக் கும் டாக்ஸிகளின் இடுக்கில் நுழைந்து, நடக்கும்போது

படிப்பகம்

www.padippakam.com



இடது கையில் பை தொங்க, வலது கையில் புஸ்ஸென்று கிளம்பிக் கொண்டிருக்கும் தும்பைப்பூ வாயில் வேஷ்டியைப் பாந்தமாய் எதிலும் படாமல் இழுத்து ஒதுக்கிக் கொண்டு, ஒவ்வொரு அடியையும் அழுக்கில்லாத இடமாய்த் தேடி வைத்து நடந்து வருவார்.

கோவிலில் நுழைந்தால் தரிசனம் முடிந்து திரும்ப ஒரு பத்து நிமிடமாவது ஆகும். ஸ்தோத்திரம் பண்ணி கீர்த்தனையெல்லாம் பாடி வெளியே வர. வரும்போது இப்போதுதான் தூங்கியெழுந்தவர் மாதிரி கண்களில் ஒரு மசங்கல் வெளிப்படும்.

இன்றைக்கும் அவரைப் பார்த்ததும், அவரையேதான் பார்க்கத் தூண்டியது. பங்க் கடையை கடந்து வந்து கொண்டிருந்தார். 'டப், டப்' என்று செப்பல்கள் அடிக்க வேகமாய் அவரை உரசுவது மாதிரி கடந்து சென்றான் ஒரு வாலிபன்.

சிவுக்கென்று ஒதுங்கி, எரித்து விடுவது போல் அவனைப் பார்த்து என்னவோ முனகிக் கொண்டார்.

இரும்புக் கிராதியோரம், இருப்பிடமாக்கியிருந்த ரிக்‌ஷாக்காரக் குடும்பத்தில் அப்போதுதான் விழித்தெழுந்த பெண்மணி யொருத்தி எழுந்த வேகத்தில் 'இசுக்' கென்று துப்பினாள். நல்லகாலமாய் மேலே படவில்லை.

திரேகத்தை சிலுத்து அருவருத்துக் கொண்டே நடந்து வந்தவர், கோவில் எதிரில் பூசியிருந்த சிமெண்ட் தளம் ஓரம் செறுப்பைக் கழற்றி வைத்து விட்டு உள்ளே சென்றார். பை இடதுகையிலே தொங்க கரம் கூப்பிக் கண்களை மூடினார்.

பக்கத்தில் எவனோ ஒருவன் அவசரமாக வந்து நின்றான். காற்று வேகத்தில் வந்ததை உணர்ந்தாரோ என்னவோ, முகம் சுளித்தது. மூடிய கண்களுடனே

www.padippakam.com



அப்பால் நகர்ந்து கொண்டார். அவன் போன பிறகு முகத்தில் நிம்மதி படர்ந்தது.

இவருக்கெல்லாம் தனியாக ஒரு உலகம், ஒரு கோவில், ஒரு சாப்பாடு, ஒரு வழி படைத்து விட்டிருக்க வேண்டும். பாவம் மனுஷன். இந்த ஜனங்களிடம் மாட்டிக் கொண்டு என்ன பாடு படுகிறார் என்று நினைத்துக் கொண்டேன்.

சாயங்காலம் நாலு மணியிருக்கும். ஒரு ரெண்டு நாள் கழித்து சொல்கிறேன். அன்றைக்குப் பூராவும் வண்டியே சரியாய் ஓடவில்லை. தினத்துக்கும் இந்த நேரத்துக்கு முப்பது ரூபாய்க்கு கிட்டவாவது ஓட்டிவிட்டிருப்பேன். இன்றைக்கு பதிமூணு ரூபாய் சொச்சம் தான். 'டல்' லடித்துப் போய் திருவல்லிக்கேணி ஸ்டாண்டில் வண்டியைப் போட்டு, சாலையைப் பார்த்துக்கொண்டிருந்தேன். என் வண்டிதான் முறை.

அப்போது இந்த அய்யர் வந்தார்.

''ஏண்டாப்பா, எந்த டாக்ஸி வர்ரது''

''நான்தான் சாமி. ஏறுங்க'' என்றேன் நான்.

வண்டியை விட்டு அரையடி எட்டவே நின்றார்.

''பின்ன டோரை தெறையேன்''

டோரைக் கூடத் தொட்டுத் திறக்க மாட்டார் போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டே, உள்ளே கையைக் கொடுத்துத் திறந்துவிட்டேன்.

மீட்டரைப் போட்டு வண்டியை ஸ்டார்ட் செய்தேன்.
''எங்க சாமி;''

''மாம்பலம் போ...'' என்றார் ஐயர். உடம்பைக் குறுக்கிக் கொண்டு, சீட்டின் பின்புறமும் சாயாமல் பக்க வாட்டிலும் இப்படி அப்படி கையை வைக்காமல், எதையும் தொட்டுக் கொள்ள நேக்கு சம்மதம் இல்லை. என்பது

www.padippakam.com



மாதிரி, தலையை மட்டும் நிமிர்த்தி உட்கார்ந்து கொண் டிருந்தார் அவர்.

"ஏன் சாமி; மாம்பலத்திலேயேதான் உங்களுக்கு ஊடா"

"என்னாடா கேள்வி இது பாஸஞ்சர் கிட்டே"

"இல்ல சாமி தெனம் உங்கள ரயில்வே ஸ்டேஷன் கோவிலண்ட பாக்கறது...அதான் கேட்டேன்"

"பாத்திருப்பே.. நல்லா ஞாபகம் வச்சிண்டிருக்கியே."

என்றார் அவர். வண்டி ஓடிக் கொண்டிருந்தது. நான் ரெண்டொரு வார்த்தைகள் பேசியிருப்பேன். அவர் பதிலுக்குக் கொஞ்சம் பேசினார்.

"இந்த ஜெனங்களுக்கு நாசூக்குன்றதே தெரியறதில்ல சாமி" என்றேன் நான்.

"அதையேண்டாப்பா கேக்கறே லோகம் ரொம்பக் கெட்டுப் போச்சி; மனுஷாள்ல்லாம் கெட்டுப்புட்டா. ஆசார அனுஷ்டானமெல்லாம் ஒழுங்கா அனுஷ்டிக்கற தில்லே. பகவான ப்ரார்த்தன பண்றதில்லே. பேருதான் பட்டணம்.சுத்தபத்தமில்லே. எங்கப் போனாலும் நாத்தம் அடிக்கறது. மனுஷாள் மேலே நாத்தம், தெருவிலே நாத்தம். ஒண்ணும் சகிக்க முடியறதில்லே. மாயூரத்துல என் பெரிய பையன் இருக்கான்லியோ. அங்க போயிட் டேன்னா நேக்கு இந்த சிரமமெல்லாம் கெடையாது. என்ன செய்யறது உத்தியோகம் பட்டணத்துல. இன்னும் ஒரு அஞ்கிவருஷ காலம் இவாளோட மல்லடிச்சாவணம். என் கஷ்டம் நோக்கு நன்னா புரியறது. தெனத்துக்கும் பாக்கறியோல்லியோ, என்னா பாடு படறேன் பாரு. ஆத்துலர்ந்து போய் பகவான தர்ஸனம் பண்ணிட்டு வர்ரதுன்னா அவ்வளோ சிரமம். மாடு மாரின்னா மேல விழாத குறையா இடிச்சிண்டு போறான்கள். அவாள்ல்

www.padippakam.com



லாம் குளிச்சாளோ இல்லியோ, எல்லாரியும் தொட்டுக்க வேண்டியதாயிருக்கு. அவாள்லாம் என்ன கொலமோ, என்ன கோத்திரமோ, நேக்கு ஜன்மமே குன்னிப் போறது அவாள்ல்லாம் பாக்கறச்சே, எல்லாம் அவளோட போச்சி''

''யாரு சாமி'' என்றேன்.

''என் மொத சம்சாரம்''

''எப்படி சாமி... ரைட்டா. லெஃப்டா'' என்றேன் நான்,

''நேராவே போய் அடுத்தாப்ல வர்ர சந்துல திரும் பிடு... லெஃப்டுல மூணாவது வீடு. பொறுமையாவே போடாப்பா; வேகம் வேண்டாம்''

வண்டியை ஓட்டி திருப்பி நிறுத்தினேன். வீடு வசதி யான வீடு. டிஸ்டம்பர், கலர் பெயிண்டு. முன்புறம் இரும்புக் கம்பி கேட்டு. பச்சைவர்ணம். நெஞ்சு உயரத் துக்கு மதில் சுவர். கேட்டிலிருந்து வீட்டுக்குப் போகும் சிமெண்ட் பாதையின் ரெண்டு பக்கமும் புல் தரை பச்சென்று. வீடும் கண்ணாடி மாதிரி பளிச்சென்று.

''டோரை தெரையேண்டா''

நான் திறந்து விட்டேன்.

''ஏண்டாப்பா வண்டிய நல்லா தூசு தட்டி சுத்தம் பண்ணி வச்சிருக்கப் படாதோ... தோ பார் தோத்தியெல் லாம் ஒட்டினுடுத்து. என்னமோ நீயும் அவாளாட்டம் தான் இருக்கறே... பஸ்ஸில நேக்கு சௌகர்யப் படா துன்னு தான் டாக்ஸில வர்ரது... டாக்ஸில வந்தும் இப்பி டன்னா... எவ்வளோ ஆச்சி பாரு!''

குனிந்து குனிந்து அவர் தூசி தட்டிக் கொண்டார். வாயால் ஊதிக் கொண்டார். இப்போதும் வெற்று



படிப்பகம்

www.padippakam.com



உடம்புதான். வெள்ளிக் கம்பி படர்ந்த நெஞ்சில், நெற்றியில், அடிவயிற்றில் வியர்வைத் துளிகள். இடது கையில் மாட்டியிருந்த பையில் கையை விடுகிறார். சுத்த மான கை. சுத்தமான விரல்கள். ஒட்டவெட்டிய நகம். செவ செவ என்று சிவந்த விரல் நுனிகள்.

பக்கத்தில் நிற்கவே கூச்சமாயிருந்தது எனக்கு.

நோட்டை எடுத்து, சில்லரையையும் கணக்காக எண்ணி என் கையில் படாமல் தூக்கிப் போட்டு விட்டு உள்ளே நுழைந்தார்.

"வர்ரேன் சாமி" என்று வண்டியை ரிவர்ஸ் எடுத்துத் திருப்பிக் கொண்டு வந்தேன்.

அதற்குப் பிறகு வண்டியைப் போட்டு விட்டு சும்மா இருக்கும் போதெல்லாம் அடிக்கடி எனக்கு அவர் ஞாபகம் தான் வரும். நல்ல வீடு. வசதியான உத்தியோகம். பெருமை தரக் கூடிய பிள்ளை பெண்டுகள். அது அது களும் அங்கங்கே கௌரவமான உத்தியோகத்தில், மனுஷன் ரொம்ப குடுத்து வச்சவர் தான். என்ன சுத்த பத்தம். என்ன ஆசாரம். எப்படியிருக்கிறார் எந்நேரம் பார்த்தாலும் துலக்கின பாத்திரம் மாதிரி. அதனால்தான் மத்தவர்கள்மேல் அப்படி சிடுசிடுவென்று இருக்கிறார் போலிருக்கிறது. இருக்க வேண்டியது தானே பின்னே.

எனக்குக் கூட முதலில் அவரைப் பார்க்கும்போது கொஞ்சம் கசப்பாகத்தான் இருந்தது. கோயிலுக்குப் போகிறவர் இவர் பாட்டுக்கு போவதுதானே எல்லார் மேலும் ஏன் எரி புரியென்று விழுந்து கொண்டிருக்க வேண்டும் யார் மேலும் படக்கூடாது என்றால் அதற்கு வீட்டிலேயே இருக்கவேண்டும்...என்றெல்லாம் நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

ஆனால் இப்போது எல்லாம் மாறிப்போய் விட்டது. அவர் அந்தஸ்து என்ன ஐதீகம் என்ன... பெரிய ஆபீஸ்

படிப்பகம்

www.padippakam.com



உத்தியோகம். ஆபீஸ் போவும் போதாவது சட்டை போட்டுக் கொள்வாரா. எந்நேரமும் சட்டையில்லாமல் இருக்கிறாரே...

புத்தி போன போக்குக்கு எதையாவது நினைத்துக் கொண்டிருப்பேன். அவர் மாதிரியே சுத்த பத்தமாக இருக்கவேண்டும் என்று நான் கூட 'தெனம்' குளிக்க ஆரம் பித்து விட்டேன்.

அன்று மிட்லண்டில் வண்டியைப் போட்டிருந்தேன். முதலாட்டம் விட்டு கூட்டம் கலைந்து கொண்டிருந்தது. நாகரீகமும் மிடுக்கும் நிறைந்த வாலிபன் ஒருவன் அருகில் வந்தான். பக்கத்தில் அவன் வயிசுக்கு—அவன் வயிசு என்று சொல்ல முடியாது; கூடவே கூட ஒன்றிரண்டு இருக்கும்—அழகான பெண்ணொருத்தியும் வந்தாள்.

"ஏம்பா வண்டி வருமா...?

"எங்க சார்...?"

"புரசவாக்கம் போயிட்டு அப்படியே மாம்பலம் வரணம்"

"வராது சார். ஷெட்—அடையார் போவுது"

"எக்ஸ்ரா எதுனா வாங்கிக்கோப்பா"

இறங்கி மீட்டரைப் போட்டு கதவைத் திறந்து விட்டேன்.

வண்டி வெளிச்சத்தில் ஓடியது. காருக்குள் இருட்டு. ரெண்டு பேருக்கும் விசாலமாக இடம் இருந்தும் நெருக்கிக் கொண்டு உட்கார்ந்திருப்பதுபோல் தோன்றியது.

மனசு சும்மா இல்லை. தொழில் புத்தி இரண்டு பேருக்கும் என்ன உறவாக இருக்கும் என்று கணக்குப் போட்டது. தம்பதிகளா... இருக்காது. அவர்கள் நடந்து வந்ததும் அவன் கேட்டதும் அப்படித் தோன்றவில்லை.

www.padippakam.com



அவள் தளதளவென்று இறுக்கிப் பிடித்த ரவிக்கும் உடம்போடு ஒட்டிய புடவையும், செய்து மாட்டியதைப் போன்ற உறுப்புகளுமாய் கச்சிதமாக இருக்கிறாள். கழுத்தில் தாலியிருக்கிறது. வண்டிக்குக் கேட்டு நின்ற போது ஆறு விரற்கடை அகதத்துக்கும் மேல் சிவப்பு வயிறு பளபளத்தது; நியோன் விளக்கில். ஆசைக்காவது சும்மா அப்படித் தொட்டுப் பார்க்கலாமா என்று தோன்றுகிற மழ மழம்பு. பையன் கொடுத்து வைத்தவன் தான்.

அவர்கள் ஏதோ பேசிக் கொண்டார்கள். அடக்கமான தொனியில் இருந்தது பேச்சு.

''அப்பறம் எப்போ'' என்றான் அவன்.

''ஆபீஸுக்கு ஃபோன் பண்றேன்'' என்றாள் அவள்.

''அடுத்த வாரம் பார்க்கலாமா? ஆனந்த்ல ஒரு நல்ல படம் போவுது''

''எப்பிடி சொல்ல முடியும். அவர் இருந்தார்னா''

அவன் ஏக்கத்தோடு பெருமூச்சு விடுவது கேட்டது.

ஸிக்னலுக்காக வண்டி நின்றது.

''ஒன் மினிட். தோ ஓடி சிகரெட் வாங்கிக்னு வந்துடறேன்''

''சீக்கிரம் சார். லைட்ட போட்டுவான்''

அவன் போன பிறகு பின்னால் நைஸாக நோட்டம் விட்டேன். புறா மாதிரி நல்ல அழகுதான். இருட்டிலும் சிவப்பு உடம்பு பிரகாசம் காட்டியது. வெளியிலிருந்து பாய்ந்த வெளிச்சம் கொஞ்சம். சொந்த சரக்கு இல்லை. என்ற துணிச்சல் எனக்கு.

அவன் வந்தான். விளக்கு எரிந்தது. பச்சை விளக்கு வண்டி ஊர்ந்தது. எக்மோரைத் தாண்டி ஓவர் பிரிட்ஜ் ஏறி இறங்கி ஓடியது.

www.padippakam.com



"எனக்கு இந்த ஒரு வாரம் போறதே ஒரு யுகமா இருக்கும்."

அவள் மௌனமாயிருந்தாள்.

"உனக்கு அதெல்லாம் ஒண்ணும் கெடையாது. நிம்மதியா இருக்கற இல்ல" என்றான்.

"என்னா பண்றது; சொல்லுங்க. உங்களாட்டமா நெனச்சா பொறப்டு வந்துட முடியுது. அவரு எங்கனா போனாதான்..."

"நான்தான் எந்த நேரமும் ரொம்ப அவஸ்த பட்டுக்னு இருக்கறேன் உன்ன நெனச்சுக்னு, நீ ஃப்ரீயா தான் இருக்கற".

லேசாக வளையல்கள் குலுங்கின. அவன் எதுவோ முணு முணுத்துக் கொண்டது கேட்டது. அவள் சிரித் தாள்.

அதற்குப் பிறகும் அடக்கமாக கொஞ்சம் சம்பா ஷணைகள். நடுவில் "ஸ்ஸூ... டாக்ஸில" என்று ஒரு எச்சரிக்கை.

வண்டி புரசைவாக்கத்தில் பையன் காட்டிய இடத்தில் நின்றது.

அவன் மட்டும் இறங்கிக் கொண்டான். "அம்மாவ மாம்பலத்துல எறக்கிடு. இந்தா மீதி சில்றயை அவங்க கிட்டியே குடுத்துடு" என்று பத்து ரூபாயை நீட்டினான்.

"வாணாம். நீங்க வச்சிக்கோங்க. நான் குடுத்துக் கறேன்" அவன் கையைத் தடுத்துச் சொன்னாள்.

வண்டி ஊர்ந்தது. பின்னால் அவள் தனியே இருந் தாள் "மாம்பலத்துல எங்கமா!" என்றேன்.

"போ சொல்றேன்."

படிப்பகம்

www.padippakam.com



மேலே எதுவும் கேட்கலாமா என்று தோன்றியது. அதனைப் பிரசிங்கித்தனமாய் கேட்டு ஏதாவது ஆகிவிடுமோ என்று பயமாகவும் இருந்தது. இருந்தாலும் ஒன்று கேட்டேன்.

''யாருங்க அவரு.''

''தெரிஞ்சவரு. பேசம போ!'' அழுத்தந்திருத்தமாய் கண்டிப்போடு சொன்னாள் அவள். நான் அதற்குமேல் எதுவும் விசாரிக்கக்கூடாது என்பதுபோல.

வண்டி ஓடியது. அவள் காட்டிய வழிப்படியே... கடைசியில் அவள் நிறுத்தச் சொன்ன இடத்தைப் பார்த்ததும் எனக்கு ஆச்சர்யமாயிருந்தது.

அய்யர் வீடல்லவா இது. டிஸ்டம்பர் கலர், பச்சை கேட். தோட்டம். அதோ அய்யர்கூடம் வாசலில் நின்றார்.

சட்டென்று டோரைத் திறந்து கொண்டு கீழே இறங்கின அவள் பத்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து என்னிடம் கொடுத்தாள்.

''சில்றமா.''

''வேணாம் போ.''

''எங்கடி போனே... நோக்கு நேரம் காலம்ன்றதே தெரியறதில்லியா...'' என்றார் அய்யர்.

''பங்கஜம் ஆத்துவரிக்கும் போயிட்டு வந்தேன். லேட் ஆயிடுத்து. எப்ப வந்தேள். காலம்பற வர்ரேன்னு சொல்லிண்டிருந்தேள்'' கொஞ்சம்கூடப் பதட்டம் தொனிக்காமல் கேட்டபடியே உள்ளே நுழைந்தாள் அவள்.

யோசனையோடு வண்டியை ரிவர்ஸ் எடுத்துத் திருப்பிக் கொண்டிருந்தேன். அய்யர் அவளோடு பேசிக்

படிப்பகம்

www.padippakam.com



கொண்டிருந்தது தெளிவாகவே என் காதுகளுக்குக் கேட்டது. ''அப்பப்ப இப்டி நீ எங்கனாச்சும் கெளம்பிப் போயிடற... இங்க ஆத்துல என்னா நடக்கறதுன்னு நோக்கு என்னா தெரியறது. இங்க நீயும் ஆத்துல இல்ல நானும் இல்லியா. இந்த வேலக்காரிக்கு குளுர் உட்டு டுத்து. ஆரோ அவ அத்த மவனாம் சூளமோட்டுல, அவன கூப்டு வச்சிகொஞ்சிக்னு இருக்கறா கூடத்துல, நான் வரச்ச... இது என்னா வீடா இல்ல பார்க்கா... மொதல்ல ரெண்டு பக்கட் ஜலத்த கொண்டாந்து கொட்டி அந்தக் கூடத்த கழுவிடச் சொல்லு...'' ☐

உதயம், ☐ ஜுலை 1. 1973. ☐

www.padippakam.com



சத்தம் போட்டுப் படித்துக்கொண்டிருப்பான். பக்கத்தில் எலக்ட்ரிசிடி போர்ட் கிளார்க் வீட்டு சம்சாரம் குழந்தைக்கு சோறு ஊட்டிக் கொண்டிருப்பாள். குழந்தை இடுப்பிலிருக்கும். அவள் குழந்தை.

"தோ பார் கடைசி உருண்டை: ஆ... தொற வாயெ... உவ்வா..."

"பூன வருதம்மா தம்பி சோற கேக்க..."

"பூன கிட்ட குடுத்துட்டுமா உவ்வாவ..."

"த பூன...! மியாவ்... போ போ ஒனக்கு ஒண்ணுங் கெடையாது உவ்வா தம்பிக்குத்தான்..."

எல்லாம் துண்டு துண்டாய் காதில் விழும். ஏனோ ஒரு நெகிழ்ச்சி. மனசில் ஒரு ஏக்கம். இறந்து போன முதல் பையனை நினைத்துக் குழந்தையை மடியிலிருத்தி குந்தி கொண்டிருப்பேன்.

அப்போது இந்தக் கிழவி வருவாள். பிச்சைக்காரக் கிழவி.

நாலாவது விட்டண்டை வரும்போதே பாட்டு சத்தம் கேட்கும். பாட்டு புரியாது. பொக்கை வாயில் புரண்டு தவழ்ந்து வெளிவரும் வார்த்தைகள் ஏக்கமாய் எதையோ சொல்லும். இழந்து போன எதையெல்லாமோ துயரத்துடன் வெளிப்படுத்தும். எதையெதையெல்லாமோ விரும்பி வந்தேனே, என்ன கிடைத்தது எனக்கு! இப்போது வேண்டியதெல்லாம் ஒரு வாய் சோறுதானே! அதற்கு மேலே வேறு என்ன, அதற்காகத் தானே இவ்வளவு பாடும், என்றெல்லாம் அர்த்தம் தொனிக்கிற மாதிரி எதுவோ தோன்றும். மனசை பிசைகிறா மாதிரியிருக்கும்.

நினைத்துப் பார்த்துப் பாடுகிறாளோ... யோசித்து வரிகூட்டி பாடுகிறாளோ... எதுவும் தெரியாது, வாய்தான்

www.padippakam.com



முணுமுணுக்கும். கையில் ஒரு தடி. லொட்டு லொட்டென்று வழியறிவிக்கும். இடும்பில் ஒரு அலுமினியக் கிண்ணம். வயிற்றுக்கான சேமிப்புப் பாத்திரம்.

தன்னை மறந்து தன் நினைவு இல்லாமலே கடமை மாதிரி, தன்னோடே சேர்த்து வளர்ந்துவிட்ட உறவு மாதிரி, பக்தி ஸ்லோகம் மாதிரி அந்தப் பாட்டு, தெய்வத்தின் முன்னே அர்ச்சகனின் ஸ்தோத்திரம் போல அவள் பாடி கொண்டே வருவாள்.

அந்தப் பாட்டை அவள் எந்த வயதிலிருந்து பாடுகிறாள். எப்போது கற்றுக் கொண்டாள். யார் அவள், எந்த ஊர், என்ன கதை. எதுவுமே எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிந்ததெல்லாம் அவள் ஒரு பிச்சைக்காரி.

வாடிக்கைப் பிச்சைக்காரி.

எனக்குத் தெரிந்த நாளிலிருந்து அவள் கிழவி.

நான் சின்னப் பையனாக இருக்கிறேன். அம்மா இருக்கிறாள். அப்போதும் இவள் வருகிறாள். இதே பாட்டு வாய் பாடிக்கொண்டே தானிருக்கிறது. அம்மா சோறு கொண்டு வந்து போடுகிறாள். கிண்ணத்தில் சோறு விழுகிறது. சோறு விழும்போது கூட பாட்டு நிற்கவில்லை, பாடிக் கொண்டே தான் நிற்கிறாள். பாடிக் கொண்டே போய் விடுகிறாள். தட்டிச் சத்தம் வழி காட்டுகிறது.

நன்றி உணர்ச்சியோ, திருப்தியோ எதுவுமின்றி மரத்துப் போன மாதிரி அதே பாட்டுத்தான் எப்போதும். யாரிடமும் பேசிப் பார்த்ததில்லை.

இப்போது அம்மா இல்லை. மனைவியிருக்கிறாள்.

அம்மா குணம் இவளுக்குக் கிடையாது. கொஞ்சம் ஒரு மாதிரி அடிக்கடி சிடுசிடுத்துக் கொள்கிறவள்.

www.padippakam.com



அம்மாவைச் சொல்லி, கிழவியைச் சொல்லி தினப்படி வழக்கத்தைச் சொல்லி தினம் ஏதோ கொஞ்சம் கிழவிக்குப் போட்டுவிடு என்று கேட்டுக் கொண்டதன் பேரில் அவள் போடுகிறாள்.

தட்டில் வைத்து எடுத்துவந்ததை ஏனம்படாமல் தூக்கிக் கிண்ணத்தில் போட்டு, சுத்தமாய் வழித்து கையை உதறிப் போடுவாள். அலுப்பும் சலிப்பும் வெளிம் படும்.

அப்போதும் அதே பாட்டு.

முன்னே சோறு போட்டது யார். இப்போது போடு கிறவர் யார். அதிலிருந்த அன்பும் பரிவும் என்ன, ஏதோ வேண்டா வெறுப்பாய் கடமைக்குச் செய்கிற மாதிரி இப்போது வந்து விழுகிறது என்ன. ஏதாவது அவளுக்கு வித்தியாசம் தெரியுமா... எது பற்றியுமே அவளுக்கு அக்கறை கிடையாதா...ஜனங்களைப் பற்றித்தான் அவள் என்ன நினைக்கிறாள்...

புரியாமல் திண்ணையிலிருப்பேன். பாட்டுச் சத்தம் தூரத்தில் கேட்கும். நாலைந்து வீடுதாண்டி போய் விட்டிருப்பாள்... தேய்ந்து அழிகிறது. தெருக்கோடி கூடம் போய் விட்டிருப்பாள்.

"நேரமாவலியா... சாப்ட வாங்களேன்."

எழுந்து உள்ளே வருவேன். பையனையும் தூக்கிக் கொண்டு.

எதுவுமே இன்று ஒழுகாய் இல்லை. எல்லாமே தாறுமாறாய்... மனம் பயத்தால் கனக்கிறது. குழந்தை யைப் பார்க்கிறேன். அதே மாதிரிதான்இருக்கிறது.

"இப்பிடியே வச்சிக்னு இருந்தா"

www.padippakam.com



"அதான் வைத்தியன் சொல்லிட்டும் போனானே. ராப்பொழுது இப்டிதான் இருக்கும் எதுவும் சொல்ல முடியாதுன்னு..."

அழுகிறாள். உடம்பு குலுங்குகிறது.

தெருவில் பாட்டு சத்தம். என் வீட்டை நெருங்கு கிறது. கைத்தடி சத்தம் கேட்கிறது. செங்கல் தரையில் லொட்டு லொட்டென்று தட்டுகிறது.

தடிச்சத்தம் நிற்கிறது. பாட்டு தொடர்கிறது.

அவள் பாடிக் கொண்டிருக்கிறாள்... கிழவி...

மூதல் பையன் நினைவுக்கு வருகிறான். சாகும்போது ஐந்து வயது. மணியாட்டம் வளர்த்து தூக்கிக் கொடுத் தாய் விட்டது. எந்த வயித்தியமும் சுகப்படவில்லை...

நினைக்கும் போதெல்லாம் துயரம் பீடுகிறது.

அவ்வளவு ஜுட்டிக்கு அந்தப் பையன்...

செவத்த உடம்பு.கறுத்ததலை.நல்லா மழமழவென்று. என் அம்மா முகம். அதே சண்கள். அதே கருணை. குணமும் அப்படி. எல்லாம் கண்முன்னே நிற்கிறது.

கிழவி வருகிறாள்... சோறு வாங்கிக் கொண்டு போகிறாள்...

"யாருப்பா இந்தப் பாட்டி...

"பிச்சைக்காரப் பாட்டி..."

"ஏம்ப்பா இந்தப் பாட்டி பிச்ச எடுக்குது..."

"பாட்டிக்கு யாருமில்ல; பிச்ச எடுக்குது..."

"மத்தியானத்தல எப்டிப்பா சாப்டும்..."

"பிச்ச எடுத்துத்தான்...!"

"மத்தியானம் வரல்லியே..."

www.padippakam.com



''வேற எங்கனா எடுக்கும்...''

கொஞ்சம் நேரம் அவன் கண்கள் எங்கோ சஞ்சரிக்கின்றன. என்ன நினைவோ...

''எல்லார் ஊட்லயும் இவ்வளோவ்ளோ போட்டாங்கன்னா எல்லாத்தியும் எப்டிப்பா அந்தபாட்டி சாப்டும்...''

''எல்லார் ஊட்லயும் போடமாட்டாங்கடா ராஜா...!''

'ஏம்ப்பா போட மாட்டாங்க'

கண்களில் நீர் மல்குகிறது. நெஞ்சைப் பிழிகிறது. சீக்கிரமே போய்ச் சேரத்தான் இந்த மாதிரியெல்லாம் கேட்டானா...

மங்கிய ஒளியில் முகம் கலவரமாய் தெரிகிறது. அந்த மாதிரியே இந்தக் குழந்தையும் போய் விடுமோ...

கிழவியின் பாட்டு வெளியே கேட்கிறது.

ஒரு நாளாவது அவளுக்குத் தவறியிருக்குமா....

ஒரே ஒரு நாள். அந்த ஒரு நாள், பெரிய பையனைத் பெட்டி வண்டியில் தூக்கிப் போட்டுக் கொண்டு பக்கத்து டவுன் ஆஸ்பத்திரிக்குப் போய் வந்த சமயம். அப்போதும் இந்தக் கிழவியைப் பற்றி நினைத்தேன்.

இந்நேரம் அவள் வருவாள். பாடிக் கொண்டே வருவாள். வீடு பூட்டி யிருக்கும். தெரியுமோ... தெரியாதோ...

மறுநாள் வீடுவந்து வெறுமையில் மூழகிக் கிடந்த போது இரவு வந்தது. அவளும் வந்தாள். எப்போதுமே நேரம் தவறாமல் வந்தாள். தினமும் வந்தாள்.

www.padippakam.com



நாங்கள் குழந்தையை பார்க்கிறோம். ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கிறோம். எதிலும் நம்பிக்கை யில்லை.

குழந்தையின் அள்ளு துடிக்கிறது. அள்ளு மாந்தம்.

இதயத்தை கீறுகிறது.

விளக்கு மங்குகிறது. ஜூவாலை சுருங்குகிறது.

''சாயங்காலம் எண்ண ஊத்தலியா...''

''இருக்கும். இந்த வேதனையில எது ஞாபகத்துல இருக்குது... அந்த பாட்டல எடுத்தாங்க...''

தெருக் கொரட்டில் கிழவியின் பாட்டு கேட்கிறது. எப்போது வந்தாள். ரொம்ப நேரமாய்த்தான் பாடிக் கொண்டிருக்கிறாளோ... எங்கே நிற்கிறோம்... எங்கே பாடுகிறோம்... என்று எதைப் பற்றியும் பொருட்படுத் தாமல் மணியானால் ஒலிக்கின்ற குரல் மாதிரி,இந்த நேரம் வந்தால் இப்படித்தான் பாட வேண்டும், இதுதான் வழக்கம் என்று பழக்கப்பட்டுப் போனது விஷயம் போல, எந்த சலனத்தையும் ஏற்படுத்தாமல், உணர்வுகளே மரத்த மாதிரி... எனக்குள் கொஞ்ச நேரம்.

பிறகு லேசாய் ஒரு அசைவு.

அவள் பாடிக் கொண்டிருக்கிறாளே என்று மனசில் உறுத்தல். பாட்டிலைக் கொண்டுவந்து கொடுத்து மனைவியைப் பார்க்கிறேன். குழந்தையைப் பார்க்கிறேன்.

வாடிக்கைக்காரி ஏதாவது போட்டனுப்பிவிட்டால் அவள் போய் விடுவாள் இல்லையா...மனசு சொல்கிறது. கண்களால் கேட்கிறேன்.

''இங்க ஒண்ணும் கெடையாது போ. புண்ணியம் பாத்த வரிக்கும் போதும்...''

www.padippakam.com



எண்ணெய் ஊற்றிக் கொண்டிருந்த மனைவி வேதனையில் வெடுக்கென்று காய்ந்து விடுகிறாள்.

ஒரே ஒருகணம். கணத்தில் ஒரு கணம்தான்...பாட்டு நின்ற மாதிரி...

பிரம்மையோ...

பாட்டுச் சத்தம் தொடர்கிறது.

எப்போதும் போலவே ஒலிக்கிறது. தடிச்சத்தம் கேட்கிறது. லொட்டு லொட்டென்று தேய்கிறது.

கிழவி படியை விட்டு இறங்கிப் போய் விட்டாள். பாட்டு பின் தொடர்ந்து போகிறது. தாழ்ந்து மெலிந்து மக்கி மடிகிறது ஒலி.

ரொம்ப தூரம் போய்விட்டிருப்பாளோ...

நாலு நாளாய் வாக்கிங் போகிறேன். பையன் பூரணமாய் குணமடைந்து விட்டான். நல்ல சுகம். நாட்டு வைத்தியம்தான் பலித்தது. அவளுக்கு வெற்றி. ஆனால் என் நெஞ்சில் பாரமாய்க் குந்தி கனக்கிறது ஒரு வேதனை.

பொழுது இருட்டுகிறது. தெருவிளக்கு எரிகிறது. ட்யூஷன் சத்தம். வாத்தியார் சத்தம் ரேடியோ சத்தம் எல்லாம் எப்போதும் போலவே கேட்கிறது. குழந்தையை மடியிலிருத்தி திண்ணையில் குந்தியிருக்கிறேன்.

நேரம் கழிகிறது...

ஆனால் அவளைக் காணோம். பிச்சைக்காரக் கிழவி...

''இங்கே ஒன்னும் கெடையாது போ. புண்ணியம் பாத்த வரிக்கும் போதும்''

என் மனைவி சொன்னதுதான்... நெஞ்சில் முள்ளாய் உறுத்துகிறது.

www.padippakam.com



மனசை அரிக்கிறது.

கந்தல் புடவை அழுக்கு புரள,கிழிந்த புடவை வெறும் எலும்பை மறைக்க, பஞ்சும் பரட்டையுமான தலையுடன் ஒட்டி உலர்ந்து போன தன் உடம்பை சத்திரத்து திண்ணையிலே கிடத்தி அவள் முடங்கிக் கொண்டிருப்பதை பகல் நேரங்களில் எப்போதோ பார்த்ததெல்லாம் நினைவுக்கு வருகிறது.

அப்போது அவள் வாய் ஓய்ந்து திக்கற்று கிடப்பாள்.

அந்த இடம் கூட காலியாய்க் கிடக்கிறது.

மனம் கேட்கவில்லை.

எங்கே போனாள்......?

மறுநாள். மறுநாள். அதற்கும் மறுநாள். எப்போதும் அவளைக் காணோம். ஊர் ஓயாத முன்னிரவில் நிம்மதியாய் அன்றாடம் அவள் பாடிக் கொண்டு வரும் அந்தப் பாட்டைக் காணோம், அவளைக் காணோம்.

மனைவியின் காய்ச்சல் காதில் நெருப்பாய் சுட, கடைத்தெருப் பக்கம் போனபோது டீக்கடைப் பையனை கேட்கிறேன்.

''இங்கே ஒரு கெழவி படுத்துக்னு இருக்குமே, சத்திரத்துத் திண்ணையில், எங்க காணம்...''

''அது செத்து ஒரு வாரமாவுதே சார்—உங்களுக்குத் தெரியாதா...கடத்தெருவுலதான் காசி தண்டி எடுத்துப் போட்டாங்க. பாவம்!

□

விழிப்பு □ ...... □



படிப்பகம்

www.padippakam.com

# விவஸ்தை

தெற்குப் பார்த்த வீடாய் இருந்தால் பரவாயில்லை. காற்று நன்றாக வரும். இது வடக்குப் பார்த்த வீடு. திண்ணையிலே எனக்கு அறை. புழுக்கம் தாளவில்லை. படுக்கையில் படுத்தபடியே அவதிப்பட்டுக் கொண்டிருந்தேன்.

பகல் தூக்கம் எனக்குப் பழக்கம் கிடையாது.

விஷயம் என்னவென்றால் நேத்து ராத்திரி பாண்டிச் சேரிக்கு போயிருந்தேன். நான் ஒல்லியாய் நரம்பாட்டம் இருப்பதைப் பார்த்து ஒருத்தன் சொன்னான்... "நீ கண்டி அடிக்கடி பாண்டிக்கி போயி விஸ்கி, பிராந்தி, ஒயின் அது இதுன்னு கண்டதக் குடிச்சிப் புட்டு மான வாரியா தின்ன ஆரம்பிச்சினா சும்மா பொத பொதன்னு கறி என்னுமா உழுந் தெரீமா! பாடி அதும் பாட்டுனு டெவலப் ஆவும்...!"

அவன் எனக்கு நண்பன். அவன் ஆசையை ஏன் கெடுப்பானேன் என்று புறப்பட்டுப் போனேன். கால் பாட்டில் விஸ்கி வாங்கி பரோட்டா வருத்த கரியோடு சேர்த்து வெட்டி முடித்தேன். தலை சொக்கி கண்கள் செருகிய பிறகுதான் தெரிந்தது ... எங்கே தங்குவது என்கிற பிரச்சனை? ரூம் கேட்டால் ஒரு ராத்திரிக்கு மூணு ரூபாயாம். அந்தஅளவுக்கு வசதியில்லை என்பதோடு 'அந்த காசிக்கி ஒரு பாட்டல் ஐஸ் பீர் வாங்கி சாப்புடலாம் சார்!

www.padippakam.com



ஒடம்புக்கும் ரொம்ப குளுத்தி!' என்று ஓட்டல்காரப் பையனே சொல்லிவிட்டான்.

இருந்த காசிக்கு இரண்டு ஆட்டம் சினிமாவையும் கஷ்டப்பட்டு கண்ணைத் திறந்து திறந்து பார்த்துவிட்டு-விடியக்காலம் நாலரை மணிக்கு தான் மொதல் பஸ்ஸாம். அதுவரைக்கும் கொஞ்ச நேரம் தெருப் பொறுக்கிவிட்டு தலைசுத்தி கால் நோகவே டீக்கடையில் குந்தி டீ அடிக்கும் சொகுசையும் சத்தம் போடும் பாய்லரையும் வேடிக்கை பார்த்துக் கிடந்துவிட்டு எப்படியோ வழியில் எங்கும் பிடிபடாமல் ஒரு வழியாய் ஊர் வந்து சேர்ந்து விட்டேன்.

ராத்தூக்கம் சுத்தமாய்ப் போய்விட்டது.

அதனால் கொஞ்சம் பகலில்...கண்ணை இழுத்துக் கொண்டு போகிறது...

''ஆர்ராவன் தூங்கறவன்... இந்நேரத்துல என்னடா தூக்கம். உம் பொவுஷிக்கு தூக்கம் ஒரு கேடா...''

தூக்கி வாரிப்போட்டது எனக்கு. திடுக்கிட்டேன். விழித்தேன்.

குரல் உள்ளேயிருந்து வந்தது. வீட்டுக்கார அம்மாளுடையது. அதிர்ச்சியில் ஒன்றும் புரியவில்லை. வாடகையெல்லாம்கூட மாசாமாசம் ஒழுங்காகத்தான் கொடுத்து வருகிறேன்.

''எழுந்திர்ரா. இப்பத்தான் தூங்க ஆரம்பிச்சிட்டான். வேல ஒண்ணும் இல்லண்ணு...''

மறுபடியும் குரல் வந்தது. புரிந்தது, வீட்டுக்கார அம்மாளுக்கு ஒரு பையன். என்வயது இருப்பான். சொக்காய் போட்டு நான் பார்த்ததில்லை. எப்போது பார்த்தாலும் முண்டா பனியன், லுங்கிதான். தொடைக்கு மேலே மடித்துக் கட்டியிருப்பான். பனியனில் கூட நெஞ்சில் யார்படமோ வட்டமாய்ப் போட்டிருக்கும்.

www.padippakam.com



கிட்டத்தில் பார்த்ததில்லை, சிகரெட்டைக் கைகளால் தொடமாட்டான். எப்பவும் பீடிதான். 305. கண்ட இடத்திற்கு பஸ்ஸில் போய் காசை வீண்செலவு பண்ணு கிற பழக்கமெல்லாம் கிடையாது. எத்தனை மைல் ஆனாலும் சைக்கிள் தான். அனாவசியமாகவும் போக மாட்டான். சினிமாவுக்குத்தான். நேத்து ராத்திரி சினிமாவாக இருக்கும். தொரை உள்ளே தூங்குகிறார் போலிருக்கிறது...

சோர்வு எனக்குக் கண்ணைச் சொருகுகிறது...

"ஏண்டா எழுந்திர்ரா டேய்...ஐய..."

பேசாமலிருந்தேன்.

"எழுந்திர்ரா டேய். ஆளுவளுக்குச் சாப்பாடு எடுத் துப் போவணம். நீம்பாட்டுனு தூங்கற வெசனமத்து..."

கொஞ்சம் விழித்துப் பார்த்து மூடுகிறேன்

"ஐய டேய்...எங்கிருந்துடா வரும் இந்தக் தூக்கம் ஐய ...என்னாடி இது நமக்கு ரோதன. எழுப்ப எழுப்ப இவன் பாட்டுனு தூங்கறானே...சீ! புள்ளையா இது கெட்ட கேடு...அடியம்மா...நம்பரவ செத்த அப்படி கண்ணு அசர லாம்னா அதுக்கு நேரம் ஒழியல படுத்தா கூடம் தூக்கம் வரமாட்டன்னுது...இவம் பாட்டுனு மானாவாரியா தூங்க றானே... எப்பிடிதான் வருதோ இந்த தூக்கம்...ஐய எழிந்திர்ரா டேய். வேற ஆளு கூடம் இல்ல, வெய்யிலு வேற ஏறுது. ஆளுங்கெல்லாம் காத்துக்னு கெடக்கும்."

"ப்ச்ச்ங் என்னடா இது தொந்தரவு." நான் ஒருக் களித்துப் படுத்தேன்.

"என்னடா என்னுமோ மொணவரியே... நான் ஆரு கிட்ட குடுத்தனுப்பறதுன்னு நெனைக்சுக்னு இருக்கற சாப்பாட்ட, ஊட்லெ வேற அது அது அப்படியே போட் டது போட்டபடி கெடக்குது.., என்னாடி இது கோராம...

www.padippakam.com



ஐய டேய் எழுந்திர்ரா... ஐய... இன்னும் சட்டிபான தொலக்கணம், மாட்டுக்கு தவுடு வக்யணம், தண்ணி காட்டணும்...எவ்வளோ வேல கெடக்குது. எழுந்திர்ரா... ஐய... என்னாடியிது! இவங்கூட மல்லு குடுக்கறதுக்கே நமக்கு செரியா இருக்கும் போலிருக்குதே... ஐய எழுந் திர்ரா வேல கெடக்குது.

சங்கடத்துடன் கம்மென்று படுத்துக் கிடந்தேன்.

'ஐய... எங்கியாவது ரவன்ன மசியறானா பாரேன். ஒரு பொம்பள இவ்வளோ கத்து கத்தறாளே... எங்கனா எழுந்திருப்பம்னு எழுந்திருக்கிறானா... பாரேன். மெய்யா லும் தூங்கறவனா இருந்தா எழுப்பிடலாம். எழுந்தா வேல உட போறாங்கன்னு தூங்கறத எங்கருந்து எழுப் பறது... ஐய... நம்பள மீறி எங்கிருந்துடா வரும் இந்தத் தூக்கம். நம்ப பாத்துத் தூங்கறமா இல்ல அது பார்த்து நம்பள தூங்க வக்யுதா தெரியலியே. டேய் ஐய... என்னாடா நீ! கத்தறவ கழுதைன்னா நெனைச்சின்னு இருக்கற மனசுல...ஐய் டேய்... சீ! இத்தாட்டம் புள்ளைய நான் எங்கியும் பாக்கல என்னாதான் தூக்கம்னா கூடம் அதுக்கும்னு ஒரு அளவு கெடையாது. ஏர் ஓட்டன எளப்புல தூங்கறவங் கூடம் 'டக்'குனு முழிச்சிக்கிறான். இதுக்கு என்னா இதுக்கு வேளா வேளக்கி நல்லா நறுவுசா துன்னுப்ட்டு ஊராகளி மாடாட்டம் ஊர சுத்தி நல்லா ஒடம்ப வளத்துக்னு திரியுதே... என்னா பண்ணும்... ஐய டேய்..."

என்ன செய்வதென்று புரியாமல் கண்ணை விழித்துப் பார்த்து மூடுகிறேன்.

"என்னாடா என்னுமோ கண்ணத் தெறந்து தெறந்து பார்த்துட்டு தூங்கற... இருக்கறாளா பூட்டாளான்னு பாங்கறியா... அப்புறம் என் வாயில நல்லா வரும் தெரியமா. புள்ளையாச்சேன்னு கூடம்பாக்க மாட்டேன்... சீ எழுந்திரு கழிசட... எருமாடாட்டம் தூங்கறியே எருமாடா நீ! அப்படி யார்ரா உன்ன போய் சினிமா

www.padippakam.com



பாக்கச் சொல்லி அடிச்சிக்னது. அப்புறம் வந்து இந்த மாதிரி தூங்கச் சொன்னது. இதுக்கெல்லாம் காசி எங்கிருந்து வருது. நெல்லு கில்லு எடுத்து விக்கிறியா டாப்பா அதான் அந்த மனுசன் வேற கொறையுதுன்னு அடிச்சிக்கிறார் போலிருக்குது...''

கொஞ்சம் மௌனம் நிலவுகிற மாதிரித் தெரிகிறது. 'அப்பாடா' என்று நினைத்துக் கண்ணை மூட யத்தனிக்கிறேன்.

''நல்லா ஒடம்பப் பாரேன் தீவட்டித் தடியனாட்டம், ராவெல்லாம் எங்கியோ பொரண்டுங் கெடந்துட்டு பொணம் அழுக்கா ஆக்கிக்னு வந்து இருக்கறத...''

ஸ்வரம் இறங்கிய குரல் மறுபடியும் ஏறுகிறது.

''ஐய எழுந்திர்ரா டேய். எம்மா வேல கெடக்குது இன்னம் மாவு இடிச்சிப் போடணம், கூழு தொழாவணம் சோறு ஆக்கணம். ஊடு வாச பெருக்கணம்... எழுந்திர்ரா ஐய டேய். சும்மா என் உயிர வாங்காத எழுந்திர்ரா...''

நான் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுமையுடன் இருக்கிறேன்.

''அடி என்னாடி இது எழவு இதோட, எதுக்கும் மசிய மட்டன்னு அதும்பாட்டுனு படுத்துங் கெடக்குதே... அது என்னாடான்னா இந்த அரிசிய ரவ அரிச்சி போடு றீன்னா நீ போ இங்க யாரால முடியும்னு அங்க படுத்துக் கெடக்குது. இவன் என்னாடான்னா இவம்பாட்டுனு இங்க வந்து தூங்கறான்... அட போ! இங்கெ ஆரால முடியும். நாலா வழிலியும் நமக்கு இமிஷை. ஐய டேய்...எழுந்திர்ரா அந் ஆம்பள வேற எகுருவாறு பொழுதாக வந்தா. அம்மாம் நேரம் என்னாடி பண்ண நேரத்தோட குடுத்தனுப்பாமன்னு...ஐய...''

எனக்கு எரிச்சல் மூண்டது. ஒரு அளவு கிடையாது. பெரிய ரோதனை. புரண்டு படுத்தேன்.

''அப்புறம் என்னாடா என்னுமோ பொரண்டு பொரண்டு படுக்கறியே... இது என்னா குடுத்தனம் பண்ற

www.padippakam.com



ஊடா, இல்ல மூதேவி வாழற எடமா... அப்புறம் எங்கருந்துடா ஊட்டலட்சுமி தங்கும்... சீச்சி கட்டையில ரவன்னா சூடு சொரண ஒண்ணுமே கெடையாதா... இம் மாநேரம் செத்த பொணத்த கூடம் எழுப்பிட்டிருக்கலாம் போலிருக்குது இவன எழுப்பறது. டேய் ஐய... ஐய டேய்... ஐயோ ஐயோ எங்கனா தலையில அடிச்சிக்னு கௌம்பிடலாம் போலிருக்குது இதுங்களக் கட்டிக்னு அழுவரது. சீ! புள்ளையா இது கெட்ட கேடு... மின்ன ஒரு தாப அப்பிடிதான் சினிமாவுக்கு போயிட்டு வந்து தூங்கறான் தூங்கறான் வெளக்கு வக்யற வரைக்கும் அவம் பாட்டுனு தூங்கறான். அந்த மனுசன் தான் ஆவட்டும் புள்ளையாச்சேன்னு எதுனா கேட்டிருப் பான்றியா...இப்படியே தூங்கித் தூங்கியே குடும்பத்தக் குட்டிச் செவுறாக்கிட்டுப் போயிடுங்கடா எல்லாம் சேந்துக்னு... சீ போ!''

குரல் அலுத்துக் கொண்டது. இதோடயாவது விட்டு விடுவாள் என்று நினைத்து கொஞ்சம் நம்பிக்கையுடன் பேசாமல் பொறுமையாகவே படுத்துக் கிடந்தேன்.

''டேய் நா தாருக்குப் பொறந்தபையா. எழுந்திர்ரா இப்பிடியே கெடந்தா உட்டுட்டு போயிடுவா அவம் பட்டுக்குனுன்னு நெனச்சிக்னு இருக்கிறயா... அப்புறம் தண்ணிய தான் கொண்ணாந்து ஊத்துவேன் மூஞ்சிலே... ஐய டேய்...எழுந்திர்ரா. மெத்தமேல வேறவத்தல காயப் போட்டுட்டு கெடக்குது. சின்ன பொண்ண காவல் வச்சது. இருக்கறாளோ இல்லியோ. எங்கிருந்து இருக்கும் எல்லாம் ஒண்ணப்போல நமக்கு மணிதான். சேச்சேச்ச ஐய... எழுந்திர்ரா... ஐய... டேய்... ஐய... விணா என் வாய கௌராத ... அடச்சி! எழுந்திர்ரா தூம ... ஊரு ... திய கடிச்ச பையா...ண்டச்சி...ண்டைய குடிச்சபையா ... எழுந்திர்ரா.

இனிமேலும் எனக்குத் தாங்காது.

கொஞ்ச தூரம் நடந்தால் ஏரிக்கரை. நிறைய வேப்ப மரங்கள் அடர்ந்து குளு குளுமென்று ரம்மியமான காற்று

www.padippakam.com



வரும். சுகமாக தூக்கமும் வரும், தரை மட்டும் கொஞ்சம் களிப்பு. உறுத்தும் இதற்கு அது எவ்வளவோ தேவலாம்.

பாயை சுருட்டிக்கொண்டு எழுந்தேன், துண்டை உதறித் தோளில் மடித்துப் போட்டு அறையைப் பூட்டிக் கொண்டு வெளியே வந்தேன். கண்களில் லேசாய் எரிச்சல்·

திறந்திருந்த ஒற்றைக் கதவு வழியாக உள் திண்ணை யில் துரை படுத்திருப்பது தெரிந்தது. அம்மாள் சிடுசிடுப் புடன் பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள்... படு பாவி நிம்மதியாய்க் குறட்டையடித்துத் தூங்கிக்கொண்டிருந் தான்.

''எங்க சார். படுக்கையை எடுத்துக்னு கௌம்பிட் டிங்க...''

''எங்கியுமில்ல. இங்க ஏரிக்கரைக்கிதான்.'' சலிப்பை வெளிக்காட்டாமல் சொன்னேன்.

''ஏங்க இங்க தூக்கம் வல்லியா.''

''வரும். ஆனா புழுக்கம்...''

''பாருங்களேன் நமக்கெல்லாம் தூங்கருதுன்னா அம்மாம்பாடா இருக்குது. புழுக்கம் தாங்கல, வேல கிது, அது இதுண்ணு எப்பிடியோ ஒண்ணு. இவனுக்கு எங்க ருந்துதான் வருதோ தெரியலியே இந்த தூக்கம். இந்த கோராமைய எங்க போய் சொல்லிக்கிறது. ஐய டேய்... எழுந்திர்ரா ஐய... இவன் இதுக்கெலலாம் மசிய மாட் டான். ஏய் செவகாமி அந்த சோடதாலையில ஒரு சோடதால தண்ணி மொண்டாடி...''

நான் ஏரிக்கரையை நோககி நடந்தேன். □

விழிப்பு □ ஜுலை-80 □

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

....... இலக்கியம் கை காட்டிக் கம்பமல்ல. அது கை காட்டிக் கம்பமாகத்தான் செயல்பட வேண்டும் என்றால் நாட்டில் எழுபது சதவீதத்துக்கு மேல் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் உள்ள சூழலில், இலக்கியத்தால் எந்தவிதப் பயனும் ஏற்படப் போவதில்லை. அதை விட தெருவுக்குத் தெரு பொதுக்கூட்டம் போடலாம், மேடையேறிப் பேசலாம், மக்கள் உய்வதற்கான வழிமுறைகள் பற்றி பிரசங்கம் செய்யலாம். அதை விட இலக்கியம் ஒன்றும் பெரிதாகச் சாதித்துவிடப்போவதில்லை.

......... இலக்கியத்தின் நோக்கம் ஒரு புதிய மனிதனைப் படைப்பது, ஒரு புதிய சமூகத்தை உருவாக்குவது, சிதைந்து கிடக்கும் மனித ஆளுமையை சீர்படுத்துவது. அதற்குத் தடைக் கற்களாக இருக்கும் சக்திகளை எதிர்த்துப் போராடத் தூண்டுவது, துணை நிற்பது, மனித ஆளுமையை மேம்படுத்துவது, எல்லாமும்தான்.

ஆசிரியரின் பறிமுதல் சிறு கதைத் தொகுப்பு
முன்னுரையிலிருந்து......

**மணிபாரதி பதிப்பகம்**

*காந்தி நகர், புதுவை சாலை . மயிலம் 604 304.*
*திண்டிவனம் வட்டம், விழுப்புரம். இரா. ப. மாவட்டம்.*

படிப்பகம்